புதிய சமுதாயம்

KDN 10657

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்





வழி வகுப்போம்

காசிதாசன்

காடுவெட்டி மேடுவெட்டி வீடுகட்டி ரப்பர்மரக்
காட்டினையே தன்னுலகாய்ச் செய்தவன்- மண்ணில்
பாடுபட்டுப் பாடுபட்டு பண்புகளை மாறவிட்டுப்
பழம்புண்ணில் வேலதனை எய்தவன்-இந்தக்
கூடுவிட்டே ஓடிவிடும் ஆவியதும் உள்ளவரை
கூடிவாழ நினைக்காத மனத்தினன்-அவன்
ஆடும்வரை ஆடிவிட்டே அடுத்தவனைக் கெடுத்துவிட்டு
ஆண்டவனைத் தேடுந்தமிழ் இனத்தினன்!

வாழுகின்ற வகையறியான் வாழ்வுயர வழிதெரியான்
வாழ்பவனைப் பார்த்துமனந் திருந்திடான்-அவன்
பாழுங்கொடுஞ் சாதிமதப் பிரிவினையால் ஊறுகின்ற
பாவங்களைக் கண்டுமனம் வருந்திடான்-நாளை
வீழுகின்ற வெற்றுடம்பை விண்பழிகட் குட்படுத்தி
விற்றுவிட்டு வெறிகொண்டே ஆடுவான்-அவன்
வாழுகின்ற காலம்மட்டும் வாய்ப்பேச்சுப் பேசிவிட்டு
வந்தவழி தெரியாமல் ஓடுவான்!

ஏட்டளவில் எழுதிவிட்டுப் பாட்டளவில் பாடிவிட்டால்
நாட்டிலுள்ள மக்கள்துறை தீருமோ?-பெருங்
கூட்டங்களைக் கூட்டிவைத்துக் கோடிகதை
பேசிவிட்டால்
வீட்டிலுள்ள பிணிவறுமை மாறுமோ?-நாம்
தீட்டிடுவோம் திட்டங்களைக் காட்டிடுவோம்
செயலிலென
ஓட்டுகளை வாங்கிவிட்டால் போதுமோ?-மன
நாட்டமுடன் நாட்டினுக்கு நற்பணிகள் ஆற்றிவந்தால்
நம்மினத்துக் கிழிவுநிலை நேருமோ!

அட்டைப்படம்: மாயன்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு —குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 ஐப்பசி 9
கம்பம் 1 ∴ (25-10-1977) ∴ குடும்பம் 15

கிளந்தான் நெருக்கடி

கிளந்தான் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி நாட்டை ஆளுங்கட்சியான தேசிய முன்னணிக்குக் கடுமையான சோதனையாகவும், நாட்டின் அரசியல் நிலைத்தன்மைக்கு ஓர் அச்சுறுத்தலாகவும் வந்திருக்கிறது. கிளந்தான் மந்திரி புசார் டத்தோ ஹாஜி முகம்மது நாசிர் மீது சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகள் மூலம் நிறைவேற்றப்பட்டு விட்டது. அந்தச் சட்டமன்றக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்பு தீர்மானத்தை விவாதிப்பதற்குப் போதிய அவகாசம் வழங்கப்படவில்லை என்னும் காரணத்தின் பேரில் அம்னோ சட்டமன்ற உறுப்பினர்கள் 13 பேரும், ம. சீ. ச. உறுப்பினர் ஒருவரும் வெளிநடப்புச் செய்து விட்டன[illegible]

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு புதிய மந்திரி புசாரைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் இஸ்லாமியக்கட்சி உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் பழைய மந்திரி புசார் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதுத்தேர்தல் நடத்தும்படி கிளந்தான் அரசப் பேராளரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் கிளந்தான் மாநில அரசின் எதிர்காலம் நிச்சயமில்லாமல் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

இந்த நெருக்கடி கிளந்தான் மாநிலத்தை மட்டும் பாதிக்கக்கூடியதாக அமையாமல் தேசத்தின் பொதுவான அரசியல் உறுதிப்பாட்டையே குலைக்கக் கூடிய அபாயத்தை உள்ளடக்கியிருப்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் பெரிதும் கவலையளிப்பதாகும்.

அமரர் துன் ரசாக் தூரநோக்கோடு நாட்டின் அரசியல் நிலைத்தன்மையைக் கருத்தில் கொண்டு நிறைவேற்றிய மகத்தான திட்டமே தேசிய முன்னணியின் அமைப்பாகும். இவ்வாறு ஒன்பதுக்கு மேற்பட்ட முக்கிய அரசியல் கட்சிகளை அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பில் பங்காளிகளாக இணைத்ததன் மூலம் அரசியல் கட்சிகளுக்கிடையே பலப்பரீட்சைகளும், மோதல்களும் நடைபெறுவது தவிர்க்கப்பட்டிருப்பதோடு அதன் மூலம் தேச நிர்மாணப்பணியில் அரசியல் கட்சிகள்

எங்கள் அலுவலகம்:

131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி]
கோலாலம்பூர் 01-08. அஞ்சல் பெட்டி எண்: 2066, தொலைபேசி: 80839.

அனைத்தும் ஈடுபடுவதற்கும் வழி வகுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு அரசியல் கட்சிகளை இணைத்ததன் மூலம் தேசிய ஐக்கியத்திற்கும், சமூகங்களின் நல்லுறவுக்கும் பலமான அடிப்படை போடப்பட்டது. ஜனநாயகச் செயல் கட்சி, பெக்கமாஸ், ரயத் கட்சி முதலிய கட்சிகளைத் தவிர மற்றக் கட்சிகளையெல்லாம் தேசிய முன்னணியில் இணைப்பதில் துன் ரசாக் வெற்றிகண்டார். குறிப்பாக, பலமிக்க எதிர்க்கட்சியும் கிழக்குக்கரை மாநிலங்களில் பெரும் செல்வாக்குள்ளதுமான இஸ்லாமியக் கட்சியைத் தேசிய முன்னணியின் கீழ் கொண்டு வந்தது பெரிய சாதனையாகும். அதன் மூலம் அரசியலில் மலாய் மக்களின் வலுவான ஐக்கியத்திற்கும் துன் ரசாக் வழிகண்டார்.

இப்பொழுது கிளந்தான் நெருக்கடி மூலம் தேசிய முன்னணி உடையக்கூடிய அபாயம் உருவாகியிருக்கிறது. தேசத்தின் அரசியல் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு மலாய் மக்களின் ஐக்கியம் பெரிதும் இன்றியமையாத அம்சமாகும். தேசிய முன்னணியில் மலாய்க்காரர்களைப் பிரதிநிதிக்கும் அம்னோவும், இஸ்லாமியக் கட்சியும், பங்காளிகளாக இருக்கின்ற காரணத்தினால் மலாய் மக்களின் அரசியல் ஐக்கியத்திற்கு உத்தரவாதம் இருந்து வருகிறது. இந்த ஐக்கியம் தேசத்தின் அரசியல் எதிர்காலத்திற்கும், அரசியல் நிலைத்தன்மைக்கும் உயிர்நாடியாகும். தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் கூட மலாய் மக்களின் அரசியல் ஐக்கியம் இன்றியமையாத அம்சமாகும்.

இதனைத் தேசிய முன்னணியின் தலைவரும், பிரதமருமான டத்தோ ஹூசேன் ஒன் தீர்க்கமாக உணர்ந்தவர். ஆகவே கிளந்தான் நெருக்கடி கட்டு மீறிப்போகாதவாறு அவர் திறம்பட அதனைச் சமாளிப்பாரென்று நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்க்கின்றனர். இஸ்லாமியக் கட்சியின் தலைவர் டத்தோ ஹாஜி முகம்மது அஸ்ரியும் தேசிய முன்னணிக் கோட்பாட்டில் முழு நம்பிக்கை கொண்டவர். ஆகவே அவரும் அவரது கூட்டாளிகளும், தேசிய முன்னணியையும், தேசிய ஐக்கியத்தையும் பாதுகாப்பதில் மிகுந்த பொறுப்புடன் செயலாற்றுவர் என்றும் நம்புகிறோம்.

ரிமூவ் வகுப்புக்கள்

ரிமூவ் வகுப்புக்களின் ஆசிரியர்களை மேற்பார்வையிட ஒரு தனி அதிகாரியை நெகிரி மாநிலக் கல்வி இலாகா நியமித்திருப்பதாக அந்த மாநிலத்தின் கல்வி இயக்குநர் இஞ்சே அனுவார் அயூப் அறிவித்திருப்பது பெரிதும் வரவேற்கத்தக்க ஆறுதல் அளிக்கும் செய்தியாகும்.

ரிமூவ் வகுப்புக்கள் தமிழ், சீன ஆரம்பப் பள்ளிகளிலிருந்து ஆறுவது வகுப்பு முடித்து வெளிவருகிற ஆரம்பப்பள்ளி மாணவர்கள், மலேசிய மொழியில் கூடுதல் பாண்டித்தியம் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டவையாகும். அவ்வாறு மலேசிய மொழிப் பாண்டித்தியத்தை அந்த மாணவர்கள் தேவையான அளவு அந்த ஓராண்டுக் காலத்தில் பெற்றால்தான் இடைநிலைப்பள்ளியில் தங்கள் கல்வியை அவர்கள் நன்கு தொடர முடியும். இடைநிலைப்பள்ளியில் பாடங்கள் அனைத்தும் மலேசிய மொழியில் போதிக்கப்படுவதால் அவற்றைப் படிப்பதில் தமிழ், சீனப்பள்ளி மாணவர்களுக்குச் சிரமம் இருக்கக்கூடாது என்பதற்காகவே ரசாக் கல்வித் திட்டத்தின் கீழ் இந்த ரிமூவ் வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஆனால் பெரும்பாலான ரிமூவ் வகுப்புக்கள், தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினாலும், அவ்வகுப்புக்களுக்கு நியமிக்கப்படுகிற ஆசிரியர்களின் கவலையற்ற போக்கினாலும் ரசாக் கல்வித் திட்டத்தின் குறிக்கோளை நிறைவேற்றத் தவறி வருகின்ற சூழ்நிலையே நீடித்து வருகின்றது. அதன் பலனாக பல்லாயிரக்கணக்கான குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கம் ஏராளமான பணத்தை ரிமூவ் வகுப்புக்களுக்காகச் செலவழித்து அதற்காக ஆசிரியர்களை நியமித்திருந்தும் ரிமூவ் வகுப்புக்களினால் கிடைக்க வேண்டிய மலேசிய மொழிப் பாண்டித்தியம் தமிழ், சீனப் பள்ளி மாணவர்களுக்குக் கிட்டாமல் போவது துரதிருஷ்டமாகும். நல்ல வேளையாக நெகிரி மாநிலக் கல்வி இயக்குநர் ரிமூவ் வகுப்புக்களின் மோசமான நிலையை அறிந்து அதைத் திருத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்திருப்பது, தமிழ், சீனப் பள்ளி மாணவர்களின் இடைநிலைக் கல்வி மேம்பாட்டுக்குத் துணைபுரிகின்ற நற்செயலாகும். மற்ற மாநிலக் கல்வி இலாகாக்களும் ரிமூவ் வகுப்புக்களின் போதனை திறம்பட நடப்பதற்கு வகை காணுமென்று எதிர்பார்க்கிறோம்.

அட்டைப்படப் பேட்டி

'பத்திரிகை படித்தோம் பலனடைந்தோம்'

நாகம்மையாள், ராஜேஸ்வரி, விஜயா இவர்கள் மூவரும்தாம் இந்த இதழின் முகப்பு அட்டையை அலங்கரிக்கும் அழகுச் செல்வங்கள். இப்படிச் சொல்வதை விடவும், கல்விச் செல்வங்கள் என்பதே மிகப் பொருத்தமாகும்.

கோலாலம்பூருக்கருகே பூச்சோங்கிலுள்ள புக்கிட் ஜாலில் தோட்டத்தில் இவர்கள் வசிப்பதனால் தோட்டத்தில் பிறந்தவர்கள்; அத்தோட்டத்திலுள்ள தமிழ்ப் பள்ளியில் படித்தவர்கள் என்பவையெல்லாம் மிகச்சாதாரணமான விஷயங்கள். ஆனால் அவர்களில் நாகம்மையாளும் விஜயாவும் பெட்டாலிங் தேசிய இடைநிலைப்பள்ளியில் 5 ஆம் படிவமும், ராஜேஸ்வரி சுத்த சமாஜ அரப் பள்ளியில் மூன்றும் படிவமும் பயின்று வருகின்றனர் என்பது முக்கியமான செய்தி.

ஆறும் வகுப்புவரை துவக்கக் கல்வியைத் தமிழில் கற்றவர்கள், அதன் பிறகு இடைநிலைப்பள்ளியில் தேசிய மொழியிலேயே பயில வேண்டியிருப்பதால் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள் என்றும், அதனால் பள்ளிப்படிப்பைப்பாதியிலேயே அவர்கள் நிறுத்திவிடவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகிறார்கள் என்றும் கூறப்படுவதுண்டு.

ஆனால் இவர்கள்? அந்தக் கூற்றுக்குச் சவால் விடுவது மாதிரி தமிழ்ப்பள்ளியில் படித்து இப்போது தேசியமொழிப் பள்ளியில் படித்து வருகின்றனர்.

"ஏ" கிரேட்

படிக்கிறார்கள் என்றால் "பத்தோடு பதினொன்றாக" நாகம்மையாளும் விஜயாளும் படிக்கவில்லை. எஸ்.ஆர்.பி. எனப்படும் மூன்றாவது படிவத்தின் அரசாங்கத் தேர்வில் "ஏ" கிரேட் வாங்கியவர்கள் இவர்கள்! எவர்கள்...? தமிழ்ப்பள்ளியிலிருந்து போன "தங்கக் கட்டிகள்"

"தமிழ்ப்பள்ளியிலிருந்து "ரிமூவ்" வகுப்புக்குப் போனபோது கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்றதோர் உணர்வு உங்களுக்கு ஏற்படவில்லையா?" என்று அவர்களிடம் கேட்டேன்.

"ஆமாங்க, அப்படித்தான் இருந்துச்சு! ஆனா நாங்க அதுக்காக பயந்திடாமல் விடாமுயற்சியோடு கொஞ்சம் கஷ்டப்பட்டுக் கூடுதலா படிச்சோம். அதுக்கேத்த மாதிரி எங்களோட அப்பாவும் அம்மாவும் எங்களுக்கு அதிகமான உற்சாகத்தைக் கொடுத்தாங்க. மலாய் "டியூசனுக்கும் ஏற்பாடு பண்ணினாங்க. அத்தோட எங்க பள்ளிக்கூடத்திலேயே டியூசன் சொல்லித் தந்தாங்க. அதையெல்லாம் நாங்க நல்லாப் பயன்படுத்திக்கொண்டதனால்தான் எங்களால் எஸ். ஆர். பி. பரீட்சையிலேயே "ஏ" கிரேட் வாங்க முடிஞ்சிச்சி.

அட்டைப் படத்தில்: இடமிருந்து நாகம்மையாள், ராஜேஸ்வரி, விஜயா.

இரு மாணவிகளும் தாங்கள் எஸ். ஆர். பி தேர்வில் "ஏ" கிரேட் வாங்கிய விதத்தை விவரித்தபோது படிப்பில் ஆர்வமும் அக்கறையும் உள்ள மாணவர்களுக்கு, அவர்கள் பெற்றோர்களும் ஆசிரியர்களும் வேண்டிய உதவிகளைச் செய்தால் தமிழ்ப்பள்ளியில் படிக்கும் மாணவர்கள் கல்வித்துறையில் தலைநிமிர்ந்து பீடுநடை போடமுடியும் என்று நம்பிக்கை எனக்கு உண்டாயிற்று.

பத்திரிகைகளின் உதவி

"தேசியமொழி அறிவை மேம்படுத்திக்கொள்ள இது தவிர வேறு என்னென்ன முயற்சியை எடுத்துக் கொண்டீர்கள்?" என்ற எனது கேள்விக்கு "உத்துசான் மலேசியா", பெரித்தா ஹரியான்" போன்ற மலாய்ப் பத்திரிகைகளைப் படிப்பதாகவும், அவை தங்களின் மொழியறிவுக்குப் பேரளவு துணைபுரிவதாகவும் அவர்கள் பதிலளித்தனர்.

"எங்க அப்பா, அம்மா தோட்டத்திலே வேலை செய்யறதைப் போல எங்களுக்குப் படிக்கிறது ஒரு வேலைன்னு நாங்க நினைக்கிறோம். அதனால தமிழ், மலாய், ஆங்கிலப் பத்திரிகைகளைத் தினந்தோறும் படிக்கிறதை ஒரு பழக்கமா நாங்க வச்சிருக்கோம்" என்று அந்த மாணவிகள் கூறியதைக் கேட்டதும் "எல்லாப் பத்திரிகைகளையும் வாங்க உங்கக் கிட்ட பணம் ?" என்று என் ஐயத்தை எழுப்பினேன்.

"அப்பா சில பத்திரிகைங்க வாங்கித் தராரு. சில பத்திரிகைகளை இரவல் வாங்கிப் படிச்சுக்குவோம். சில பத்திரிகைகளை இருவருமே மாற்றி மாற்றிப் படிச்சுக்குவோம்" என்று பதில் கூறி அவர்கள் என் ஐயத்தை அகற்றினர்.

இத்தனைக்கும் இவர்கள் மூவருமே அவரவர் பெற்றோருக்கு ஒரே குழந்தையல்ல; அவர்கள் கேட்டதையெல்லாம் உடனடியாக வாங்கிக் கொடுத்துவிட.

நாகம்மையாளுக்கு சகோதர சகோதரிகள் எட்டுப் பேர். ராஜேஸ்வரிக்கும் விஜயாவுக்கும் தலா ஐந்து சகோதர, சகோதரிகள். இத்தகைய சூழ்நிலையில் தத்தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரும் பெற்றோர்கள், மற்றப் பெற்றோ களுக்கு ஒரு முன் மாதிரியானவர்கள் என்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்டவர்களின் பெயர்களையாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

நாகம்மையாளின் பெற்றோர் பனையடியான் - சின்னம்மாள், விஜயாளின் பெற்றோர், பாலன்-இலட்சுமி, ராஜேஸ்வரியின் பெற்றோர், சதாசிவம் - செல்லம்மாள்.

வயதோ பதினெட்டு, பத்திரிகை படிக்கும் பழக்கம் வேறு. ஆகவே நமது சமுதாயப் பிரச்சினைகளின் தீர்வுக்கு ஆரோக்கியமான இந்தப் புதிய சமுதாயத்தினர் ஏதும் ஆலோசனை கூறுவார்களே" என்ற எண்ணத்தில் நாகம்மையாளிடமும், விஜயாவிடமும் ஒரு கேள்வி கேட்டேன். அதற்கு அவர்கள் பதில்:

"கல்வித் துறையில் முன்னேறிய சமூகமாக நாம் மாறிவிட்டால் முக்கால்வாசிப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். பொருளாதாரத்தில் முன்னேறிவிட்டால் எஞ்சிய கால்வாசிப் பிரச்சினை தீர்ந்துவிடும். இந்த இரண்டு துறைகளிலும் நாம் இப்போது வளரத் துவங்கியிருக்கிறோம் என்றுதான் கருதுகிறோம்."

இவர்களின் பதிலைக் கேட்ட பிறகு "நீங்கள் எந்தத் துறையில் உங்கள் பங்கைச் சமுதாயத்திற்கு வழங்கப் போகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"ஆசிரியைகளாக எங்கள் பங்கைக் கல்வித் துறையில் வழங்கக் கருதுகிறோம்" என்று அவர்கள் தேங்காய் உடைத்தது மாதிரி பட்டென்று பதில் கூறினர். இப்போது புக்கிட் ஜாலில் தோட்டத் தமிழ்ப் பள்ளியின் பழைய மாணவர் சங்கத்தின் மூலம் பள்ளி வளர்ச்சிக்குப் பணியாற்றி வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்

டாக்டராவது தனது லட்சியம் என்று கூறும் ராஜேஸ்வரிக்கு அவரது லட்சியம் ஈடேறும் வாய்ப்பு பிரகாசமாகவே இருக்கிறது. அவர் அப்பா எல். சி. இ. படித்திருக்கிறார். அண்ணன் சிவஞானம் ஆறும் படிவம் படிக்கிறார். ஓர் அண்ணன் மலேயன் பேங்கில் வேலை செய்கிறார். மற்றோர் அண்ணனுக்கு ஹில்டன் ஓட்டலில் வேலை. இத்தகைய சூழ்நிலையில் நன்றாகப் படித்தால் ராஜேஸ்வரி டாக்டராவது என்ன ஆகாத காரியமா?

தங்கள் காலத்தில் தமிழ்ப் பள்ளியின் தலைமையாசிரியராக இருந்த திரு. ஆனந்தன் அவர்களையும், தற்போதைய தலைமை ஆசிரியர் திரு. எம். ஆறுமுகம் அவர்களையும், தாங்கள் இப்போது கல்வி பயிலும் பள்ளிகளின் ஆசிரியப் பெருமக்களையும் மறவாமல் அவர்கள் நினைவு கூர்ந்த போது மூவரும் குருபக்தி மிகுந்த மாணவிகள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

குருபக்தி மிகுந்த மாணவிகள் எதிர்காலத்தில் கல்வித் துறையில் முன்னேற்றமடைவார்கள் என்பது உறுதியிலும் உறுதியல்லவா?

பேட்டி: மஞ்சரி

குத்துச் சண்டை வியாபாரம்



உலகக் குத்துச் சண்டை வீரர் முகமது அலி, நேற்று எர்னி ஷேவர்சைத் தோற்கடித்ததன் வழி தம்முடைய பட்டத்தை மீண்டும் தற்காத்துக் கொண்டார்.

போட்டி முழுமையிலும் அந்த உலக சாம்பியன் விட்ட குத்துகளையும், செய்த நகைச்சுவைகளையும், எதிர்ப்பாளரைச் சுற்றிச் சுற்றி ஆட்டிக்கொண்டிருந்ததையும் நாம் கண்டோம்.

தொழில்முறை குத்துச்சண்டையில் முகமது அலி உண்மையில் இன்னும் வலுவாக இருக்கிறாரா? நேற்றைய சண்டை, முன்கூட்டியே திட்டமிடப்பட்டதெனில் இக்கேள்விக்கு நாம் ஒரு முடிவு காண வேண்டுவது அவசியமாகும்.

சண்டையின் துவக்கச் சுற்று அவ்வளவாகக் கவரவில்லை; தொழில் முறை குத்துச்சண்டைக் குழுவினரிடையே ஒரு வகையான "உடன்படிக்கை" ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது போலவே அது தோற்றம் தந்தது.

"வியாபாரம்" ஆக்கப்பட்டு விட்ட தொழில் முறை குத்துச் சண்டையில் பொதுமக்களின் ஆர்வத்தைத் தொடர்ந்து நிலைபெறச் செய்யும் ஒரு தந்திரமாகவும் இது இருக்கக்கூடும்.

அந்தக் குழுவினரைப் பொறுத்த வரையில், அவர்களின் குத்துச் சண்டை வீரர்களின் உடலிலிருந்து இரத்தம் வடிந்தாலும், நிச்சயமாக அவர்களுக்குப் பெருத்த ஆதாயம் உண்டு; ஏனெனில் ஒவ்வொரு விநாடியும், ஒவ்வொரு குத்தும் விலைமதிப்புள்ளவை!

ஒரு சுற்று மூன்று நிமிடங்கள் என்று 45 நிமிடங்கள் சண்டையிட்ட முகமது அலி, முப்பது லட்சம் அமெரிக்க வெள்ளியைப் பெற்றதை வைத்துக் கணக்கிட்டுப் பார்ப்போமானால், இது மிகுந்த ஆதாயமுள்ள ஒரு வியாபாரமாகத் தோன்றுகிறது.

மேலே நாம் கூறியதற்கு, இந்த ஊகம் எந்த அளவு வலுவூட்டுகிறது என்பது நம்மைப் பொறுத்திருக்கிறது.

ஓய்வு பெறுவதாகக் கூறும் தம் உறுதிமொழியிலிருந்து அடிக்கடி வழுவும் முகமது அலியைக் குறிப்பாகச் சுற்றும் இத்தகைய தொழில் முறை குத்துச்சண்டைக் குழுவினரிடம் இத்தகைய எண்ணம் இருக்கிறது.

பெரும் ஆதாயம் திரட்டுவதற்காக எதையும் செய்யத் தயாராக இருக்கும் ஒரு குழுவினர், இன்றைய தொழில்முறை குத்துச் சண்டையை முற்றுக ஆக்கிரமித்துள்ளனர் எனலாம்.

(2-10-1977 —"மிங்குவான் மலேசியா" தலையங்கம்)

தேசியமொழியின் வளர்ச்சி

'கமல்' தலைநகர்

கடந்த காலத்தில் நாட்டின் கல்விக்கொள்கை எவ்வாறு படிப்படியாக மாற்றம் பெற்றுக் கால் நூற்றாண்டுக்குள் (1957—1983) வளர்ச்சி எப்படி இருக்கப்போகிறது என்பதைக் காண்போம்:-

1956: ரசாக் (தேசியக்) கல்விக் கொள்கை ஏற்கப்பெற்றது.

1957: மலாயா சுதந்திரம்.

1960: ரஹ்மான் தாலிப் கல்விக் குழுவினரின் சில பரிந்துரைகளும் அடங்கிய தேசியக் கல்விக் கொள்கை ஏற்கப்பெற்றது.

1962: செயல் முறையில் நல்ல உருவாக்கமும் காணப்பட்டது.

1963: மலேசியா தோற்றம்.

1967: நாடாளுமன்றத்தில் நாட்டின் ஒரே அதிகாரபூர்வமான மொழியாகப் "பகாசா மலேசியா" அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. (சுதந்திரம் பெற்ற பத்தாண்டுகால வளர்ச்சி)

1970: மேற்கு மலேசியாவில் உள்ள எல்லா ஆங்கிலத் தொடக்கப் பள்ளிகளையும், மலேசிய மொழியைப் போதனைமொழியாகக் கொண்ட தேசியப் பள்ளிகளாக மாற்றும் திட்டத்திற்கு அடிப்படை போடப்பட்டது.

1976: ஆங்கிலத் தொடக்கப் பள்ளிகள் முடிவுக்கு வந்து, உயர்நிலைப் பள்ளியின் முதல் படிவ போதனை தேசியமொழியில் நடைபெற வழிவகையும் பிறக்கலாயிற்று.

1977: ஆங்கில எல். சி. இ. தேர்வு முடிவுறுகிறது. (20 ஆண்டுகால வளர்ச்சி)

1978: எஸ். ஆர். பி. தேர்வு மட்டுமே இடம்பெறும்.

1980: எம். சி. இ. தேர்வு போய் எஸ். பி. எம். தேர்வினை (முற்றிலும் மலேசியமொழியில்) எழுத வேண்டும். ஆங்கிலமொழி கட்டாயப் பாடமாக இருக்கும். (தமிழ், தமிழ் இலக்கியப் பாடங்களை விரும்பினால் தேர்வுப் பாடங்களாக எடுக்கலாம்)

1982: எச். எஸ். சி.க்குப் பதிலாக எஸ். டி. பி. என்னும் ஆறாம் படிவத் தேர்வை (முற்றிலும் தேசிய மொழியில்) எழுத வேண்டிய நிலை பிறக்கிறது. (தமிழ், தமிழ் இலக்கியப் பாடங்களை விரும்பினால் தேர்வுப் பாடங்களாகக் கொள்ள வழியுண்டு)

மெர்தேகா பெற்ற கால் நூற்றாண்டுக் காலத்திற்குள் கல்விக் கொள்கை பெறப்போகும் மகோன்னத வளர்ச்சியை இதன் மூலம் காணலாம்.

1983: ஆங்கிலப் பள்ளிகள் யாவும் ஒரு முடிவுக்கு வருகின்றன. ஆனால் ஆங்கிலம் ஒரு "கட்டாயப்" பாடமாக விளங்கும். எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் உயர்நிலைக் கல்விக் கழகங்களிலும் தேசியமொழியான பகாசா மலேசியாவே போதனைமொழியாக இடம்பெற்று முடிகூடும். மருத்துவம், பொறியியல், அறிவியல், கலைப்படிப்பு சம்பந்தப்பட்ட எல்லாப் பாடங்களும் பகாசா மலேசியாவில் நடைபெறும். இதன் மூலம் ரசாக் கல்விக் கொள்கையும் பூரணத்துவம் பெறுகிறது. இதனை நம் சிந்தனையில் கொள்வோம். தமிழராம் தாய்மொழியுடன் தேசியமொழியான மலேசிய மொழியையும் கசடறக் கற்று உயர்வோம்.

காலுள்ள பேய்கள்



தமிழ்ப்பாணன் - தங்கா

"பேய்க்குக் கால்கள் இல்லை" என்றான் நித்தியரூபன்.

அதை ரகு ஒப்புக்கொள்ளவில்லை. "பல வழிகளில் சக்திவாய்ந்த பேய், நினைத்த உருவைப் பெறக்கூடிய சக்திகொண்ட பேய், கால்கள் இல்லாமல் இருக்க முடியாது. குறைந்தது மனிதனைவிட ஓரிரு கால்கள் அதிகமாகவே இருக்க வேண்டும்" என்று உறுதியாகக் கூறினான் அவன்.

அவர்கள் சந்தேகத்தை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது என்று தெரியவில்லை. பெரியவர்களிடம் கேட்டால் திட்டினாலும் திட்டுவார்கள். எனவே தங்கள் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள என்ன செய்யலாம் என்று பலமாக யோசித்தார்கள்.

அவர்கள் இருவரும் ஒரே பள்ளியில் ஆறாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள்.

அந்த ஊரில் எல்லைப் புறத்திலே ஒரு பாழடைந்த பங்களா இருந்தது. ஒரு காலத்தில் அதில் ஒரு வெள்ளைக்காரர் குடும்பத்துடன் வாழ்ந்தாராம். அதன் பின் அது பாழடைந்து கிடக்கிறது. இப்போது அதில் எவரும் குடி இருக்கவில்லை. காரணம் அதில் குடி இருக்க முடியாமல், அதில் இருக்கும் பேய்கள் அட்டகாசம் செய்வதாயும் அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

நித்தியரூபனும், ரகுவும் அந்தப் பாழடைந்த பங்களாவுக்குச் சென்று பேயைப் பார்த்து அதற்குக் கால் இருக்கிறதா, இல்லையா, இருக்கிறது என்றால் எத்தனைக் கால்கள் என்று கண்டுபிடிக்க முடிவு செய்தார்கள்.

பகலில் பேய்கள் தூங்குவதும், இரவில் வெளிவருவதுமாக இருப்பதால், இரவு பதினொரு மணிக்குமேல் பன்னிரண்டுக்குள் அந்தப் பங்களாவுக்குச் சத்தம் செய்யாமல் சென்று பேயைக் காணுவது என்றும் முடிவு செய்தார்கள்.

அதன்படி அவர்கள் தங்கள் குடும்பத்தில் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல், இரவில் தூங்குவது போலப் பாசாங்கு செய்துவிட்டு, இருட்டோடு இருட்டாக வீட்டை விட்டுக் கிளம்பினார்கள்.

பேய்க்குக் கத்தியைக் கண்டால் பயம் என்று நித்தியரூபன் கருத்துச் சொன்னதால் இருவரும் ஆளுக்கொரு காய்கறி அரியும் கத்தியைக் கையில் எடுத்துக்கொண்டார்கள்.

விடுகவி

1. உயரத்தில் இருந்தால்
ஆயிரம் மதிப்பு
உள்ள இடம் விட்டுவந்தால்
அவமதிப்பு

2. அடிமேல் அடிவாங்கி
அனைவரையும் மகிழவைக்கும்

3. ஒளி கண்டால் பதுங்கிவிடும்
இருள் வந்தால்
மறைந்துவிடும்

4. கறுத்த பாறைக்கு
வெளுத்த வேர்

விடைகள்: 1. தலைமுடி 2. மத்தளம் 3. நிழல் 4. யானை-தந்தம்

-இரா. கல்யாணி,
பத்து அன்னம்

அவர்கள் பங்களாவுக்கு அருகில் வந்தபோது காற்று பலமாக வீசியது. பாழடைந்து கிடக்கும் அந்தப் பங்களாவின் சன்னல்களும், கதவுகளும் "படார் படார்" என்று அடித்துக் கொண்டன.

செடிகளும் புல் பூண்டுகளும் மண்டிக்கிடந்ததால், அங்குப் பாதை இல்லை. மெல்ல மெல்ல பங்களாவை நெருங்கியபோது, அந்தப் பங்களாவின் நடுவில்இருந்து சிரிக்கும் சத்தம் கேட்டது. ஆம், அது பேயின் சத்தம்தான் என்று அவர்கள் இருவரும் பூரணமாக நம்பினர். கையில் இருந்த கத்தியை இறுகப் பிடித்துக் கொண்டனர். கண்கள் பயத்தால் மிரள மிரள விழித்தன.

பேய் தென்படுகிறதா என்று எட்டிப்பார்த்தார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல, ஏழெட்டுப் பேய்கள் கறுப்பாக, மெழுகுவர்த்தியின் ஒளியில் நின்று பேசிக்கொண்டிருந்தன.

நித்தியரூபன் ரகுவிடம் ஏதோ கிசுகிசுத்தான். அவ்வளவுதான், ரகு பயந்து வந்தவழியே ஓட்டம் பிடித்தான். நித்தியரூபனுக்கும் பயம் பிடித்துக் கொண்டது. அவனும் ரகுவைப் பின் தொடர்ந்து ஓடினான். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடினர். நீண்ட தூரம் ஓடிவிட்டனர். "யார் அது?" என்று யாரோ தடுக்கும் குரல் கேட்டுப் பயந்து நின்றனர்.

நிறுத்தியவர் ஒரு போலீஸ்காரர். இருவரும் தாங்கள் கண்டவற்றைத் தட்டுத் தடுமாறி ஒன்று விடாமல் கூறினர்.

மறுநாள் செய்திப் பத்திரிகைகளில் "நீண்ட காலமாக அகப்படாமல் இருந்த கள்ள சம்சு தயாரிக்கும் ஒரு கும்பலை நேற்று இரு மாணவர்களின் உதவியுடன் போலீஸ் இரவு பன்னிரண்டு மணிக்குப் பிடித்தது" என்ற செய்தி பெரிய எழுத்தில் முதல் பக்கத்தில் வெளிவந்தது.

கற்க...

ஓய்ந்து கிடக்கும் நேரம்—உனக்கு
உயர்ந்த வழியில் செல்ல
ஆய்ந்து தெளிந்த நூலை—மனம்
ஆழ்ந்து கற்க வேண்டும்!

அறிவு என்ற செல்வம்—என்றும்
ஆழ விரிந்து நிற்க
தெரிவு செய்த நூலை—நீ
தெளியக் கற்க வேண்டும்!

அன்பு என்ற கயிறு—என்றும்
அறுந்திடாதிருக்க
பண்பு வழியைச் சொல்லும்—நூலைப்
பார்த்துக் கற்க வேண்டும்!

இறைவனருளை வேண்டி—நீ
இறைஞ்சி நிற்க வேண்டின்
நெறிகள் சொல்லும் நூலை—உன்
நெஞ்சில் பதித்தல் வேண்டும்!

வாழ்க்கை என்னும் வழியில்—நீ
வழுக்கி விழாதிருக்க
வாழ்க்கை நெறியைச் சொல்லும்—நூலை
வாங்கிக் கற்க வேண்டும்!



தமிழ்ப்பித்தன், கூலிம்



குமாரி எம். நாகம்மா, சுங்கை போக்கா தோட்டம், பாகான் சிராய்

கே: பெண்கள் தங்கள் கணவன்மார்களை மன்னனோடு ஒப்பிடுகின்றார்களே, ஏன்?



ப: பெண்களெல்லாம் ராணிகளாக இருக்கும் பொழுது அவர்களின் கணவன்மார்கள் ராஜாக்களாக இருப்பது பொருத்தம்தானே?

ந. பாலகிருஷ்ணன், சுங்கைசோ தோட்டம், ரவாங்

கே: இந்தியாவின் படிப்பையும் பட்டங்களையும் நமது மலேசிய அரசாங்கம் அங்கீகரிக்காததற்கு என்ன முக்கிய காரணம் அண்ணா?

ப: ஒரு சில இந்தியப் பட்டங்களை மட்டுமே மலேசிய அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. மற்றும் பெருவாரியான பட்டங்களை அங்கீகரிக்காமல் இருப்பதற்கு அந்த அந்தப் பல்கலைக் கழகங்கள் கல்லூரிகளின் கல்வித்தரம் குறைவாக இருக்கிறது என்பதே மலேசிய அதிகாரிகள் சொல்லும் காரணமாகும்.

கொ. வனிதாநாதன், சுங்கை சுமுன், தெலுக்கான்சன்

கே: "புதிய சமுதாயத்தின்" வாசகர்கள் எந்தப் பகுதியை மிகவும் விரும்பிப் படிக்கின்றார்கள்?

ப: கேள்வி பதில் பகுதியை!

சு. நீலமேகம், பத்து பிலா, கிள்ளான்

கே: லட்சியவாதியின் மனைவி எப்படி இருக்க வேண்டும்.

ப: காரியவாதியாக இருக்க வேண்டும்.

மணிதேவி, பெட்டாலிங் ஜெயா

கே: அண்ணா! என் சகோதரி இவ்வருடம் M.C.E. சோதனை எழுத இருக்கிறாள். ஆனால் அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் ரேடியோ சத்தத்தில் எப்படி என் சகோதரி படிக்க முடியும்? அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடம் அன்பாகக் கூறினாலும் கேட்பதுமில்லை. இதற்கு நீங்கள்தான் நல்ல ஒரு வழி காட்ட வேண்டும்!

ப: உங்கள் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள ரேடியோ-வை அடைப்பதற்குப் பெட்டாலிங் ஜெயாவிற்கு நான் வர முடியாது. ஆனால் உங்கள் அண்டை வீட்டுக்காரர்களின் புரிந்துணர்வில் எனக்கு நம்பிக்கை உண்டு. உங்கள் சகோதரியின் படிப்பைக் கெடுப்பதில் அவர்களுக்கு என்ன லாபம்? அவர்கள் தாராளமாக ரேடியோவைக் கேட்கட்டும். சத்தத்தைப் பக்கத்து வீட்டுக்கும் கேட்காதபடி குறைத்து வைத்துக் கொள்ளலாம் அல்லவா?

எம். ராஜ்குமார், சிம்பாங் பெக்கோ, மலாக்கா

கே: சார், இவ்வாண்டு தீபாவளிக்கு புதியசமுதாயத்தில் ஏதும் சிறப்பு உண்டா?

ப: தீபாவளிக்குப் "புதியசமுதாயம்" சிறப்பு அம்சங்களை நிச்சயமாக வெளியிடும்.

எம். ஜி. ராஜு, கோல தெர்லா, கேமரன்மலை

கே: அண்ணா, அதிகம் சிரிக்கும் ஆணையும் அதிகம் அழும் பெண்ணையும் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: இருவருக்குமே எல்லை கடந்துவிட்டால் பைத்தியம் பிடித்துவிடும்.

எம். சாமிக்கண்ணு, டென்னிஸ் டவுன் தோட்டம், பாரிட் புந்தார்

கே: "சினிமா-அது ஒரு பொய்" என்று இங்கு வந்துள்ள நடிகர் எம். ஆர். ராதா பேட்டியில் சொல்லியிருக்கிறார். பொய்யான சினிமாவில் ஏன் தொடர்ந்து அவர் நடிக்கிறார்;

ப: திரையுலகிலுள்ள சில பொய்யர்களைத்தான் எம். ஆர். ராதா சாடியிருக்கிறார். சினிமாவே பொய் என்று அவர் கூறவில்லை. பேட்டியை மறுபடியும் நன்கு படித்துப் பாருங்கள்.

எஸ். செல்வம். சுங்கை போக்காக், பாகான் செராய்

கே: வேல்விழியாள் - வேல்வேடன் இவ்விருவரில் யார் மிக பயங்கரமானவர்?

ப: ஆண்களின் மத்தியில் வேல்விழியாளும் விலங்குகளின் மத்தியில் வேல்வேடனும் பயங்கரமானவர்கள்.


எம். சந்திரசேகரன், கார்னுவன் தோட்டம், கோலசிலாங்கூர்

கே: ஒரு மாணவன் எத்தகைய குறிக்கோளுடன் கல்வி கற்கவேண்டும்?

ப: தான் பிரகாசிப்பதற்கு ஒரு துறையை தேர்ந்தெடுத்துக்கொண்டு அந்தக் குறிக்கோளுடன் முழுமூச்சாகக் கல்வி பயிலவேண்டும்.

குமாரி எம். அஞ்சலை தேவி, ஜொகூர்பாரு

கே: அண்ணா! எங்கள் வீட்டில் நான் நிறைய வேலை செய்கிறேன். சாப்பாடு குறைவாகத்தான் சாப்பிடுகிறேன். ஆனால் என் உடம்பு ஏறிக்கொண்டே போகிறது. இதற்கு நான் என்ன செய்வது?



ப: உங்கள் உடம்பு பொல்லாத உடம்பு. நீங்கள் வயிறு நிறையச் சாப்பிட்டு வேலைகளைச் சற்றுக் குறைத்துப் பாருங்கள். ஒருவேளை நீங்கள் இளைக்கத் தொடங்கி விடலாம்!

வில்லியம் தமிழ்மணி, சபாய் தோட்டம், பகாங்

கே: நம் நாட்டின் சட்டம் இரண்டு மனைவிகளை அனுமதிக்கிறதா?



ப: நாடாளுமன்றத்தில் முஸ்லிம் அல்லாதவர்களுக்காக ஏகதாரச் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கம் அந்தச் சட்டத்தை இன்னும் அமுல்படுத்தவில்லை. அந்தச் சட்டம் அமுலாவதற்கு முன்பு இரண்டு முறை மணப்பது குற்றமாகாது. தங்களுக்கு அப்படி ஏதும் உத்தேசம் இருந்தால் விரைவாக மற்றொரு மனைவியை வீட்டுக்குக் கூட்டிவந்து விடுங்கள்.

முனியாண்டி நரசையா, டைகர் தோட்டம், தாவாவ், சபா

கே: மனிதன் முன்னேற வாழ்க்கையில் எது முக்கியமாகத் தேவைப்படுகிறது?

ப: சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்கின்ற சாமர்த்தியமே வாழ்க்கை உயர்வுக்கு மிக முக்கியமாகும்.

எம். ராஜ்குமார், சிம்பாங் பெக்கோ, மலாக்கா

கே: எந்த வட்டார வாசகர்கள் புதிய சமுதாயத்தில் விடாமல் பங்குபெற்று வருகிறார்கள்?

ப: தோட்டப்புற வாசகர்களிடமிருந்தே எங்களுக்குக் கடிதங்களும் கருத்துக்களும் அதிகமாக வருகின்றன.

ஆர். பழனியாண்டி, கிள்ளான் சாலை, பெட்டாலிங்

கே: தமிழறிவுப் போட்டிக்கான கூப்பனில் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டுமா, அல்லது தமிழில் எழுத வேண்டுமா?

ப: தமிழோடு ஆங்கிலத்திலும் எழுதினால் நல்லது.

ஜி. குணசேகரன், கம்போங் துன் ரசாக், பூச்சோங்

கே: இப்போது மனிதனுக்குத் தேவை அறிவா, பண்பா?

ப: மனிதனுக்குப் பண்பை உயர்த்தக் கூடிய அறிவே தேவை.

எம். சாமிக்கண்ணு, டென்னிஸ்டவுன் தோட்டம், பாரிட்புந்தார்

கே: நம் இந்தியர்கள் பார்க்கும் இடமெல்லாம் தெய்வப் படங்களை வைத்து வணங்குவதைப்பற்றி...?



ப: இறைவழிபாட்டில் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுவதற்கு நம் மக்களுக்குத் தக்க போதனைகளை இந்து சமயத் தலைவர்கள் செய்தால் இத்தகைய குறைபாடுகளைக் களைந்து விட முடியும்.

ஆ. சங்கப்பிள்ளை, மாடோஸ் தோட்டம், உலுத்திராம்

கே: புதுக் கவிதை உங்களுக்குப் பிடிக்குமா?

ப: புதுக் கவிதை என்னும் பெயரில் அர்த்தமில்லாத பிதற்றல்களைப் பலர் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பழைய கவிதையானாலும் புதுக் கவிதையானாலும் திரும்பத் திரும்பப் படித்து ரசிக்கக் கூடிய "கனம்" இருப்பது முக்கியமாகும். புதுக் கவிதை மோகத்தில் திளைத்திருப்பவர்கள் இதனைக் கருத்தில் கொள்வார்களென்று எதிர்பார்க்கிறேன்.

கே: என். டி. எஸ். ஆறுமுகம் பிள்ளையைப் பற்றிச் சில வரிகள்...


ப: இந்தியச் சமுதாயத்தில் மூத்த தலைவர்களுள் ஒருவராகத் திகழும் அருள்மாமணி என். டி. எஸ். ஆறுமுகம் பிள்ளை அவர்கள், உழைப்பால் -விடா முயற்சியால்- துணிவால் வாழ்க்கையின் உச்சத்தை எட்டியவர். அன்னாரின் அஞ்சா நெஞ்சமும், தொழில்துறைத் துணிவும் நமது இளைய சமுதாயம் பின்பற்ற வேண்டியவை.

ஏ. பி. பெருமாள், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: கடமை கண்ணியம் கட்டுப்பாடு இவை மூன்றும் ஒரு மனிதனிடம் இருந்தால் அவன் வாழ்வு எப்படி இருக்கும்?

ப: அவன் உள்ளமெல்லாம் தங்கமாக, அண்ணாவைப்போல மக்கள் மனத்தில் நிலைத்திருப்பான்.

கே: தொலைக்காட்சியில் ஏன் பக்திப் படங்கள் காட்டுவதில்லை?



ப: பக்திப் படங்களுக்குத் தொலைக்காட்சியில் தடை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

எஸ். விஜய். விஜிடாஸ், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: நீதிக்குத் தலை வணங்குவதாகக் கூறும் சில பொது நலவாதிகள் ஏன் சில சமயங்களில் அநீதிக்குத் தலை வணங்குகிறார்கள்?

ப: ஏதாவது 'ஆசை' காட்டியிருப்பார்கள்!

கே: அண்ணா, தாங்கள் தமிழ் நேசன் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தபோது "தமிழ் மாணவர் கல்வி நிதி" தொடங்கினீர்களே; தற்போது தங்களுக்கு அதில் ஏதும் தொடர்பு உள்ளதா? அதற்குப் பொறுப்பு வகிப்பவர் யார்?

ப: தமிழ் நேசன் திரட்டிவருகிற தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி அறங்காவலர் குழுவில் நானும் அங்கம் வகிக்கிறேன். அந்தக் குழுவுக்கு மேலவையின் துணைத்தலைவர் டான்ஸ்ரீ எஸ். ஓ. கே. உபைதுல்லா தலைவராக இருக்கிறார். மற்றும் நேசன் இயக்குநர் புலவர் மு. சேதுராமன், நேசன் ஆசிரியர்-நிர்வாகி திரு. சு. நடராஜன் (நடனம்). வணிகர் கா. முகம்மது பாச்சா, மகாமாரியம்மன் கோவில் தேவஸ்தானத் தலைவர் திரு செ. சொக்கலிங்கம், டத்தோ டாக்டர் சி சின்னத்துரை ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். திரு டி பி விஜேந்திரன் இக்குழுவின் கௌரவ செயலாளர்.

தி. முனியாண்டி, ஈப்போ

கே: இன்று மலேசியாவில் யாருடைய குரல் அதிகமாகக் கேட்கிறது?

ப: அசன்கனி, ஆரோக்கியசாமி, துளசி ஆகிய மூவரின் குரல்தான் அதிகம் கேட்கிறது!

ஆர். வாணி, புக்கிட் சீடிம் தோட்டம், கூலிம்

கே: அண்ணா, தன் மனைவியை வேலைக்கு அனுப்பி விட்டு வீட்டில் சமையல் செய்யும் கணவனை எப்படி அழைப்பது?



ப: புரிந்துணர்வுமிக்க நல்ல கணவர். தனக்குத் தெரிந்த வேலையை வஞ்சகமின்றிப் பார்ப்பவர்.

எம். எஸ். மணியம், பில்மோர் தோட்டம், பத்து தீக்கா

கே: நம் நாட்டில் விளையும் பொருள்கள் யானை விலை விற்கிறதே இந்நிலையில் நம் இந்தியச் சமுதாயம் முன்னுக்கு வரமுடியுமா?

ப: யானை விலையில் மற்றச் சமுதாயங்கள் உருப்பட முடியுமானால் நம் இந்தியச் சமுதாயத்திற்கு மட்டும் ஏன் அது முடியாது?

சா. ராஜேஸ்வரன், நோர்த் ஹம்மோக் தோட்டம், கிள்ளான்

கே: அண்ணா, மாட்டுப்பால் சைவமா அசைவமா?

ப: மாட்டுப்பால் 90 சதவிகிதம் சைவப் பட்டியலில் தான் இருந்து வருகிறது.

கே: இந்நாட்டில் தமிழர்களின் நிலைமை மேன்மையாகிக் கொண்டிருக்கின்றதா?

ப: ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு வருவது உண்மையே!

சு. அ. வீரசிம்மன், ஜோகூர் பாரு

கே: அரசாங்க இலாகா ஒன்றில் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு 50 இளைஞர்கள் அமைதி ஊர்வலம் மேற்கொண்டு மகஜர் ஒன்றினைச் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பிக்க விரும்பினால், இது குறித்து விசேஷமாகப் போலீஸ் அனுமதி தேவையா? அனுமதி வேண்டுமாயின் எப்படிப் பெறுவது?

ப: இத்தகைய ஊர்வலம் நடத்துவதற்குப் போலீஸ் அனுமதி பெறவேண்டும். அந்த அந்த வட்டாரத்திலுள்ள தலைமைப் போலீஸ் அதிகாரிக்கு இது குறித்து விண்ணப்பித்து இந்த அனுமதியைப் பெற முடியும்.

கே. சுசீலா, செரோம் தோட்டம், ஜொகூர்

கே: ஒவ்வொரு நாட்டுக்காரர்களும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறார்களே, இதற்கு என்ன காரணம்?

ப: அங்கந்த நாட்டின் சுட்பவெட்ப நிலைதான் இந்த வேறுபாடுகளுக்குக் காரணம்.

கே: நீங்கள் பெரிய பங்களாவிலா இருக்கிறீர்கள்?



ப: அடிக்கடி வெள்ளம் வரக்கூடிய பேம்பு கார்டனிலுள்ள இணைப்பு டெரஸ் வீடுதான் என்னுடைய "பங்களா."

இராசிதுரை, கண்ணுமகேஸ், கம்போங் போயான், தைப்பிங்

கே: இதழ் 13இன் தாமதத்தின் காரணமாக "ராசி பலன்" பக்கத்தை நிறுத்திவிடும்படி என் மனம் சொல்கிறது?

ப: புதிய சமுதாயம் தாமதமாய் வருவதால் வாசகர்கள் எப்படி எப்படிப் பாதிப்படைகிறார்கள் என்பதை உங்களின் வேதனைமிக்க இக்கேள்வி எங்களுக்கு உணர்த்துகிறது. தாமதத்தைக் குறைத்து ராசிபலனை நீங்கள் முழுமையாக அனுபவிப்பதற்கு வகை செய்வோம் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறோம்.

கணேசன் பேபி, கூலாய், ஜோகூர்

கே: ஒரு பெண் தான் திருமணம் செய்து கொள்ளப் போகும் ஒருவருடன் தனியே வெளியில் போவது தவறா?



ப: தவறில்லை, ஆனால் கடிதங்களைப் புதிய சமுதாயத்திற்கு அனுப்பும்போது உங்களைப் போல் தபால்தலை ஒட்டாமல் அனுப்புவது தவறு.

நா. ஜெயபாலன், உலுத்திராம் தோட்டம், ஜோகூர்பாரு

கே: நமது சமூகம் தோட்டப்புறத்தையே நம்பி இருப்பதற்குக் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்?

ப: போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்னும் பழமொழிதான் காரணம்.

கு. கிருஷ்ணன், செலமா தோட்டம், கெடா

கே: ஒன்றாக இருந்த ஒரு தோட்டத்தில் உள்ள மக்கள் இரண்டுபட்டால் அந்தத் தோட்டம் என்ன நிலைக்கு ஆளாகும்?



ப: ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். தோட்டம் இரண்டுபட்டால் குண்டர்களுக்கே கொண்டாட்டம்!

இரா. இராமராவ், தலைநகர்

கே: எதிலும் அசட்டையாக இருப்பவர்களின் எதிர் காலம்?

ப: யாரும் அவர்களைச் சட்டைசெய்ய மாட்டார்கள்.

எஸ். எம். பாலகிருஷ்ணன், சொகமானா தோட்டம், பந்தாய் ரெமிஸ்

கே: வாழ்க்கையில் உயர ஆவல் கொண்டு ஏணியில் படிப்படியாக ஏறிய பிறகு ஏணி தேவையில்லை என்று எட்டி உதைத்து விடுகிறார்கள். அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: பிழைக்கத் தெரிந்த புத்திசாலிகள்.

15 நாள் பலன்

அக்டோபர் 26 முதல் நவம்பர் 10 வரை

கும்பம் (ஜன 20 — பிப் 18)

செய்தொழிலில் மேன்மையடைய சில வாய்ப்புகள் கிடைக்கும். அவற்றை நீங்கள் முழுமையாகப் பயன்படுத்தாது போனால் நட்டம் உங்களுக்குத்தானே. வாகனப் போக்குவரத்தில் கவனமாக இருங்கள். குடும்பத்தினரும் உற்றார் உறவினரும் உங்களுடன் ஒத்துப் போவார்கள்; ஆனால் நண்பர்கள்... கொஞ்சம் தகராறுதான். செலவு அதிகம் ஏற்பட வழியுண்டு.

நல்ல நாட்கள்: 27, 30, 6.
எச்சரிக்கை நாட்கள்: 29, 7

மீனம் (பிப் 19 - மார்ச்சு 20)

"பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் ஆனது" என்பதைப் போல உங்கள் முயற்சிகள் அமையலாம். அதற்காக மனம் தளர்ந்துவிடாதீர்கள் "விடாமுயற்சி வெற்றி தரும்" என்னும் முதுரை உங்களுக்காகவே சொல்லப்பட்டது என்று எண்ணிக் காரியமாற்றுங்கள். பெரியவர்களின் ஆதரவுதான் உங்களுக்குத் தற்போது தக்க பக்கபலம்.

நல்ல நாட்கள்: 28. 9.
எச்சரிக்கை நாட்கள்: 26. 30

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

எந்த முயற்சியிலும் ஐந்துக்கு மூன்று பழுதாகாது. வெளியூரிலிருந்து நல்ல சேதி வரும். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்களின் உதவி உங்கள் முயற்சிகளுக்கு மிகவும் உறுதுணையாக அமையும். செலவு குறைவாகவே இருக்கும் என்பதால் சேமிக்க வாய்ப்புண்டு, உறவினர்கள் உங்களுக்குக் கொஞ்சம் தலைவலியைத் தரலாம்.

நல்ல நாட்கள்: 30. 5
எச்சரிக்கை நாள்: 27. 6

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

குடும்பத்தில் உள்ளவர்களின் உடலாரோக்கியத்திற்காக நீங்கள் அங்குமிங்கும் அலைய வேண்டியிருக்கும். வேலைப் பளுவும் அதிகரிக்கும். இதனால் நீங்கள் சோர்வடைந்து காணப்படுவீர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? என்றாலும் உங்களுக்கே உரிய மனதைரியத்தினாலும் எதையும் சமாளிக்கும் திறத்தாலும் நீங்கள் எப்போதும் போல கவலையில்லாத மனிதராகவே இருப்பீர்கள்.

நல்ல நாட்கள்: 29. 31. 3
எச்சரிக்கை நாட்கள்: 28. 30

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

உள்ளத்தில் ஒன்று வைத்து உதட்டில் ஒன்று வைத்துப்பேசும் நண்பர்களால் உங்களுக்குத் தொல்லைதான் மிஞ்சும். என்றாலும் பெரியோர்களின் ஆதவு உண்டு. வாகனப் போக்குவரத்தினால் நன்மை உண்டாகும். மேலதிகாரிகளின் உதவியினால் செய்தொழிலில் மேன்மையடைய வாய்ப்புக் கிடைக்கும்.

நல்ல நாட்கள்: 27, 29, 7
எச்சரிக்கை நாட்கள்: 31. 8

கடகம் (ஜூன்21-ஜூலை 20)

சகதொழிலாளர்களிடம் தகராறு பண்ணிக் கொள்ளாதீர்கள். அதனால் உங்கள் வேலைக்கு ஆபத்து வந்தாலும் வரலாம். உங்கள் கருத்து நல்லது என்றாலும் மற்றவர்கள் ஏற்க மறுப்பார்கள். ஆகவே வாயைக் கொஞ்சம் மூடிக்கொண்டால் நல்லது. பணப் புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சிறு சிறு தகராறுகள் ஏற்படக்கூடும் பொதுவாக ஆத்திரமும் கோபமும் உங்களுக்குப் பெரும் எதிரிகள்.

நல்ல நாட்கள்: 29. 2. 4
எச்சரிக்கை நாட்கள்: 31. 9

சிம்மம் (ஜூலை 21 - ஆக 21)

உங்களுக்கிருக்கும் ஆற்றலை நீங்கள் முழுமையாகப் பயன்படுத்த வாய்ப்புக் கிடைக்கும். இந்த நேரம் பார்த்துத் "தூங்கி" விடாதீர்கள். பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும். பணக் கஷ்டம் உண்டு; என்றாலும் சோற்றுக்கே சொருகு தாளம் போடும் அளவுக்கல்ல. நீங்கள் பிள்ளையாரைப் போல பிரமச்சாரியாக இருந்தால் அடுத்த சில வருடங்களில் தந்தையாகி விடுவீர்கள்.

நல்ல நாட்கள்: 28, 4. 5
எச்சரிக்கை நாள்: 1, 8

கன்னி (ஆக 22 - செப் 22)

உங்களின் முயற்சிகளுக்குத் தற்காலிமாகச் சில தடங்கல்கள் ஏற்படும். இறுதியில் வெற்றி உங்களுக்குத்தான். வாகனப் போக்குவரத்தினால் நல்ல பலன் உண்டு. உடலாரோக்கியத்தில் சிறிது கவனம் செலுத்துங்கள். உள்ளதை வைத்துக் கொண்டு நல்லபடி வாழ முயல்வீர்கள். ஆனால் குடும்பத்தினர் அதற்கு அனுசரணையாக இருக்க மாட்டார்கள். எப்படியோ, சமாளிப்பது உங்கள் பொறுப்பு.

நல்ல நாட்கள்: 29. 2. 9
எச்சரிக்கை நாட்கள்: 26. 28

துலாம் (செப் 23-அக். 22)

தீபாவளி வந்தாலும் வராவிட்டாலும், நீங்கள் ஆடம்பரச் செலவு செய்வதில் முந்திரிக் கொட்டை போல் முந்துவீர்கள். அதற்கேற்பச் சம்பாதிப்பதில் முந்தி நிற்கத் தயங்குவீர்கள். பெரியோர்களின் ஆதரவு உண்டு. மேலதிகாரிகளுக்குச் செல்லப்பிள்ளையாக நீங்கள் விளங்குவதால் வேலைக்குப் பாதுகாப்புத்தான். குடும்பத்தில் சுமுகம் நிலவாது.

நல்ல நாட்கள்: 26. 4. 9
எச்சரிக்கை நாட்கள்: 31. 1

விருச்சிகம் (அக் 23-நவ. 22)

சிக்கனக்காரரான உங்களுக்குச் சேமிப்பு பெருகக் காரணமும் வேண்டுமா? நண்பர்கள் உங்களிடமிருந்து ஏதும் கறக்கப்பார்ப்பார்கள். அவர்களிடம் நீங்கள் ஏமாந்து போக வழியுண்டு. குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். வெளியூர்களிலிருந்து நல்ல சேதியும் வரும். அண்ணன் தம்பிகளினால் வம்பு வழக்கில் ஈடுபட வேண்டியிருக்கும்.

நல்ல நாட்கள்: 27. 3. 7
எச்சரிக்கை நாட்கள்: 27, 30. 5

தனுசு (நவ. 23 - டிச. 20)

பணக் கஷ்டம் உங்களுக்கு மட்டும்தானா! சராசரியாக எல்லாருக்கும்தான் இருக்கிறது. அதனால் கவலையை விடுங்கள். நண்பர்கள்- உறவினர்கள், பெரியோர்கள் ஆதரவு எதிர்பார்த்தது போல் கிடைக்காது. தொழில் முயற்சிகள் அவ்வளவு எளிதாக வெற்றியடையாது. இருப்பதைக் கொண்டு உருப்படியாய் வாழ முயல்வதே நல்லது.

நல்ல நாட்கள்: 29. 5, 6
எச்சரிக்கை நாள்: 1, 9

மகரம் (டிச 21- ஜன 19)

கண்ணாடி மாளிகையில் நின்று கொண்டு கல்லை விசினால் உங்கள் மாளிகைக்குத்தானே ஆபத்து. புரியவில்லை? ஊராரைப் பற்றி நீங்கள் அப்படி இப்படிப் பேசினால் உங்கள் குடும்பத்தைப் பற்றிப் பிறர் பேச மாட்டார்களா? ஆகவே அதை நிறுத்துங்கள். நிறுத்த முடியாவிட்டால் குறையுங்கள். வருமானத்திற்குக் குறைவிருக்காது. அதற்கு ஏற்ப செலவு ஏற்படக் கூடும் என்பதால் சிக்கனமாகச் செலவழியுங்கள் கூட்டுத் தொழில் வெற்றியளிக்கும்.

நல்ல நாட்கள்: 30, 31. 7
எச்சரிக்கை நாட்கள். 8, 9

–தஞ்சை நகுலன்

பால்மரக் காட்டினிலே

அகிலன்

15. இளம் பயிருக்கு எதிர்காலம்?

தன் சிறிய தங்கை கமலத்தைச் சைக்கிளின் பின்புறம் ஏற்றிக் கொண்டு அதிகாலையிலேயே பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டான் பாலன். பள்ளியைத் தொடங்குவதற்கு இன்னும் நேரமிருந்ததால் யாரும் அங்கே வரவில்லை. ஐந்தாம் வகுப்பைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு அவனுக்கு. கமலம் மூன்றும் வகுப்புக்குப் போய்த் தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

தோட்டத்தில் தான் தொடங்க வேண்டிய முதல் வேலைக்குத் தான் பணியாற்றும் தமிழ்ப் பள்ளிக்கூடத்தையே சோதனைக்களமாக மாற்ற வேண்டுமென்ற எண்ணம் அவனுக்குப் பல நாட்களாக உண்டு. எவ்வளவுதான் ஆர்வத்தோடு அவன் தன்னிடம் பயிலும் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்க முயன்றாலும் அவனுக்கு அதனால் மனநிறைவு ஏற்படவில்லை. தன்னையும் தான் பணி ஆற்றும் இடத்தையும் முதலில் அவன் சீர்திருத்திக்கொள்ள விரும்பினான்.

தலைமையாசிரியர் சண்முகத்திடமும் மற்ற ஆசிரியர்களிடமும் கூடிப் பேச வேண்டும். அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற முயல வேண்டும். பிறகு பிள்ளைகளின் பெற்றோரை அணுக வேண்டும். கல்வி என்பது பெயரளவுக்கு என்று இல்லாமல், உண்மையிலேயே பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டக் கூடியதாக இருக்க வேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டே தன் வகுப்பறைக்குள் சற்று நேரம் உலவினான் பாலன்.

நேரம் நெருங்கிவிட்டதால் கூச்சலும் கும்மாளமுமாகக் குழந்தைகள் பள்ளியை நோக்கிக் கூட்டங் கூட்டமாய் வரத் தொடங்கினார்கள். சன்னலருகே நின்றபடி அவர்களைக் கூர்ந்து கவனித்தான் பாலன். ஆண்களும் பெண்களுமாக அங்கே வந்து கொண்டிருந்த குழந்தைகள் சில, தங்கள் தலையை ஒழுங்காகவும் சுத்தமாகவும் உடை உடுத்தி வரவில்லை. இதற்கெல்லாம் காரணம் வறுமை என்று சொல்லமுடியாது. வறுமையிலும் செம்மையாக வாழலாம். செம்மையாக வாழும் வழியைப் பெற்றோரே தெரிந்து கொள்ளாத போது, குழந்தைகளை எப்படிக் குறை கூறுவது?

தலைமை ஆசிரியர் சண்முகத்தின் விடு அருகில்தான் இருந்தது. அவரும் வந்து விட்டார். அவரை வணங்கி விட்டு, 'உங்களுக்கு நேரம் இருக்கிறப்போ ஆசிரியர் கூட்டம் நடத்தி, நம்மோட பள்ளியின் வளர்ச்சியைப் பத்திப் பேசலாம்னு எனக்குத் தோணுது; உங்க வசதிப்படி அதை வச்சுக்கலாம்" என்றான் பாலன்.

புன்முறுவலோடு பாலனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார் சண்முகம். ஏதோ ஓர் உறுதியுடன் பாலன் தம்மிடம் பேசுவதை அவர் புரிந்து கொள்ளாமல் இல்லை. அந்தப் பள்ளிக்கு ஒரு பெரும் செல்வமாக அவனை நம்பியிருந்தவர் சண்முகம்.

"அதுக்கென்ன? பள்ளிக்கூடம் விட்டவுடனே எல்லாரும் உட்காந்திடலாம். நான் சொன்னேன்னு நீங்களே மத்தவங்ககிட்டச் சொல்லி விடுங்க."

பன்னிரண்டு ஆசிரியர்கள் வேலை பார்த்த தமிழ்ப் பள்ளியில் சுமார் அறுநூறு குழந்தைகளுக்கு மேல் சேர்ந்திருந்தார்கள். குழந்தைகளில் கால்வாசிப் பேருக்குமேல் முறையாகப் பள்ளிக்கு வருவதில்லை. சிலர் பாதியிலேயே நின்று விடுவார்கள். பெற்றோருக்குத் துணையாகப் பால் கிண்ணம் துடைப்பது, மரப் பட்டையில் உலர்ந்திருக்கும் ரப்பர்த் துணுக்கைச் சேகரிப்பது, வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது முதலிய வேலைகளைச் செய்வதற்காகப் பெற்றோர் சிலர் தாங்களாகவே குழந்தைகளை நிறுத்திக் கொள்வதுண்டு. வேறு சில வயது வந்த பிள்ளைகளோ பள்ளிக்குச் செல்வதாகப் போக்குக் காட்டி விட்டு வேறு எங்காவது சுற்றித் திரிவார்கள். இப்படிப்பட்ட சூழலில் தான் பாலனைப் போன்றவர்கள் அங்கே படிப்பைச் சொல்லித் தர வேண்டிய நிலை இருந்தது. ஆசிரியர்களில் சிலரும் இதனால் மனம் நொந்து பெயரளவுக்குத் தங்கள் கடமையைச் செய்வதோடு முடித்துக் கொள்வார்கள்.

கூட்டத்தைப் பற்றி மற்ற ஆசிரியர்களிடம் சொல்லிவிட்டுத் தன் வகுப்பறைக்கு வந்து பாடம் நடத்தத் தொடங்கினான் பாலன். வகுப்பறையில் கந்தப்பன் என்ற சிறுவனைக் கண்டவுடன் திடீரென்று கந்தப்பனின் தகப்பன் சின்னசாமியின் நினைவு வந்தது பாலனுக்கு. சின்னச்சாமியைப் பற்றியும் அவன் தங்கை செல்லம்மாவைப் பற்றியுந் தான் முதல் நாள் கணேசன் அவனிடம் சொல்லியிருந்தான். 'செல்லம்மாவைப் பார்த்தினா கவலைப் படாமல் இருக்கச் சொல்' என்று தன்னிடம் கணேசன் சொல்லி அனுப்பியது அவனுக்கு நினைவில் வந்தது.

சின்னச்சாமியின் மகன் தன் வகுப்பில் படித்ததும் நல்லதுதான். படிப்பில் கந்தப்பன் கெட்டிக்காரப் பிள்ளை அல்ல. வாரத்தில் இரண்டு நாட்களாவது வகுப்புக்கு மட்டம் போட்டுவிடுவான். அவனைப்பற்றியும் சின்னச்சாமியிடம் நேரில் பேசிக் கவனிக்கச் சொல்லலாம். அதோடு முடிந்தால் செல்லம்மாளையும் சந்தித்து வரலாம்.

"உன்னோட அப்பாவை நான் பார்க்கணும்; ஒரு நாளைக்கு வீட்டுக்கு வர்ரேன்னு சொல்லு" என்றான் பாலன்.

பயந்துவிட்டான் பையன்.

"நான் பள்ளிக்கூடத்துக்கு வரணும்னுதான் சார் சொல்றேன். எங்கப்பாதான் சார் என்னை மங்கு துடைக்கக் கூட்டிக்கிட்டுப் போகுது" என்றான் சிறுவன்.

"அப்படியா? நான் வந்து சொல்றேன். உன்னை ஒழுங்கா வகுப்புக்கு அனுப்பச் சொல்றேன்."

"சொல்லுங்க சார்."

இடைவேளைச் சாப்பாட்டுக்குப் பள்ளி கலைந்தபோது, ஆசிரியர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய குறிப்புகளை ஒரு தாளில் குறித்துக் கொண்டான் பாலன். தலைமை ஆசிரியரிடமும் பேசி அவரையே கூட்டத்தைத் தொடங்கி வைக்கும்படி கூறினான். சண்முகம் தலைமை ஆசிரியர் மட்டும் அல்ல; வயதிலும் மூத்தவர். செயல் செய்வதற்குரிய துடிப்பும் இளமையும் அவரிடம் இல்லையே தவிர, தோட்ட வாழ்க்கையின் பிரச்னைகள் பலவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தவர்.

மாலை வேளையில் பள்ளி கலைந்தவுடன் தலைமை ஆசிரியர் அறையிலேயே ஆசிரியர்கள் கூடினார்கள். சண்முகம் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துச் சொல்லிவிட்டு, "பாலனுக்கும் எனக்கும் ரொம்ப நாளா இந்தக் கவலை இருக்கு. கவலைப்படறதை விட்டுட்டு, ஏதோ நம்மாலே முடிஞ்சதை நாம செய்ய முயற்சி செய்யலாம்னு தோணுது" என்றார்.


"படிக்கக்கூடிய வயசுப் பிள்ளைகளிலே முக்கால்வாசிப் பேர்கூட இன்னும் நம்ப பள்ளியிலே சேர்க்கப் படலே. சேர்க்கப்பட்ட பிள்ளைகளையும் பாதியிலே நிறுத்திடறாங்க. வீட்டிலே படிக்கிறதும் ரொம்பக் குறைவாக இருக்கு. பள்ளிக்கூடத்துக்கு வர்ரது ஏதோ ஒரு சடங்கு போலே இருக்கே தவிர, பிள்ளைகளோட எதிர்காலமே இதிலேதான் இருக்குன்னு யாருக்கும் புரியல" என்றான் பாலன்.

"நூறு பேர் படிச்சால் அதிலே அஞ்சு பேர் உயர்நிலைக் கல்வியை எட்டிப் பார்த்தால் அதிகம். நூத்துக்கு ஒரு பிள்ளை நம்மைப் போலத் தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு ஆசிரியர் வேலைக்கு வரக்கூடும்.

தோட்டத் தொழிலாளியோட பிள்ளை தோட்டத் தொழிலாளியாகத்தான் வாழணும்கிற அவல நிலை இன்னும் மாறலே."

"நம்மைப் போலவே நம்ம பிள்ளைகளும் பால்மரம் வெட்டிப் பிழைச்சுக்குனும்னு ரொம்பப் பேர் நினைக்கிறாங்க. அதுக்கும் மேலே அவங்களுக்கு நெனைச்சுப் பார்க்கக் கூடத் தெரியலே."

"ஒவ்வொரு குடும்பத்திலும் ஆறேழு குழந்தைகள் இருக்கிறப்ப, எப்படி எல்லாருக்கும் மரம் வெட்ற வேலை கிடைக்கும்? இதுகூடத் தெரியவேண்டாமா? தோட்டத்



துண்டாடலும் வேலையில்லாத் திண்டாட்டமும் வந்த பிறகாவது இவங்களுக்கு விழிப்பு ஏற்பட வேண்டாமா?" என்றான் பாலன். "ஒண்ணு நம்ப குழந்தைகள் நல்லாப் படிச்சு ஏதாச்சும் வேலைக்குப் போகணும்; இல்லே, படிப்போட ஒரு தொழிலையாவது வியாபாரத்தையாவது செய்யக் கத்துக்கணும். எல்லாத்துக்கும் அடிப்படை படிப்புத்தானே?"

"பெத்தவங்களுக்கே இது தெரியாதப்ப. மத்தவங்க இதிலே என்ன செய்ய முடியும்? நாமுந்தான் கரடியாக் கத்தறோம். பலன் இல்லையே?" என்றார் ஓர் ஆசிரியர்.

"பெத்தவங்களை எப்படியாவது கூட்டிவச்சு அவங்களுக்கு நாம எடுத்துச் சொல்லியாகணும்" என்றான் பாலன். "பெற்றோர் சங்கம் ஏற்படுத்துவோம். அவங்களை அடிக்கடி இங்கே கூப்பிடுவோம்."

"நடக்காத காரியம். யாருமே நம்மோட ஒத்துழைக்கமாட்டாங்க" என்றார் விரக்தி அடைந்த ஒருவர்.

"முயற்சி செய்து பார்ப்போமே!" என்றான் பாலன். "ஒரு சமுதாயத்தோட தலையெழுத்தை நல்ல எழுத்தா மாத்தியமைக்க நாம பாடுபடுவோம். பலனைப் பத்தி உடனடியாகக் கவலைப்படவேண்டாம்."

"சரி. பெற்றோர் சங்கம் அமைத்துப் பார்க்கலாம். இது ஒரு நல்ல யோசனை.— அடுத்தது?" என்றார் தலைமையாசிரியர் சண்முகம்.

"தமிழ்ப் பள்ளிக்கூடத்திலே ஆறாம் வகுப்புப் படிச்சிட்டுப் பிறகு ஆங்கிலப்பள்ளிக்குப்போற குழந்தைகளுக்கு, அங்கு ஒண்ணுமே புரியறதில்லை. "ரிமூவ்" வகுப்புக்குப் போனா அங்கே அவங்களுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டாப்பிலே இருக்கு. இங்கே நல்லாப் படிச்ச குழந்தைங்ககூட, அங்கே கஷ்டப் படறாங்க. மேல்படிப்பை விட்டே "ரிமூவ்" செய்கிற வகுப்பாத்தான் அது இப்போ இருக்கு. அதனாலே நாமே ஐந்தாம், ஆறாம் வகுப்புப் பிள்ளைகளுக்கு இங்கே நல்ல முறையிலே ஆங்கிலப் பாடம் சொல்லித் தரணும். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் இதுக்காக நான் ஒதுக்கத் தயாராக இருக்கிறேன்" என்றான் பாலன்.

"எனக்கு வீடு பக்கத்திலேதான் இருக்கு. என்னாலே தாராளமா ஒரு மணி நேரம் அதிகமாத் தங்கிப் பாடஞ் சொல்லித் தர முடியும்" என்றார் தலைமையாசிரியர் சண்முகம்.

இன்னும் ஓரிரண்டு ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தில் பங்கு கொள்ளத் தாங்களும் ஆர்வத்தோடு முன் வந்தார்கள். ஒரு சிலர் பெற்றோர் சங்க வேலைகளைக் கவனிப்பதாய் வாக்களித்தார்கள்.

"ரிமூவ்" வகுப்பிலே படிக்க இந்தத் தமிழ்ப்பள்ளிக்கூடத்து அடிப்படை பத்தாதுங்கறதை நான் ஒத்துக்கறேன். அந்த அடிப்படையை ஏற்படுத்திக் கொடுக்க நாம முயற்சி செய்வோம். ஆனால் இது மாத்திரம் போதாது" என்றார் தலைமை ஆசிரியர்.

"ஏன்?"

"ஆங்கிலப் பள்ளியிலே படிக்கணும்னா சிரம்பானுக்குப் போகணும். பஸ்ஸிலே போகப் பணம் வேணும். பஸ்ஸுக்குக் காத்துக்கிட்டிருக்கணும். தோட்டத்துப் பிள்ளைகள் படிப்பைக் கண்டு பயப்படறதுக்கு நியாயமான இடைஞ்சல்கள் எத்தனையோ இருக்கு. ஒதுக்கப்பட்டுக் காட்டுக்குள்ளே வாழ்கிற குழந்தைகளை நாம நாட்டுக்கு அனுப்பிப் படிக்கவைக்க வேண்டிய வேலை இருக்கு!"

"சுகப்பன் கூலி; பிள்ளை கூலி;

பேரன் கூலி; கொள்ளுப் பேரன் கூலி இப்படியேதான் போகணுமா?" என்றார் ஒருவர்.

"பெற்றோர் சங்கத்தை நம்மாலே நல்லதொரு இயக்கமா மாத்த முடிஞ்சால் இந்தப் பிரச்னையெல்லாம் கூட நாம் சமாளிச்சிடலாம்" என்றான் நம்பிக்கையோடு பாலன். "ஆயிரக்கணக்கான பேர் மாசாமாசம் கூலி வாங்கறாங்க. ஆளுக்குப் பத்து வெள்ளி வசூல் பண்ணி மேலே எப்படியாவது கடன் பட்டு ஒரு ஸ்கூல் பஸ் கூட நம்மாலே வாங்கிட முடியும். நமக்குள்ளே ஒத்துமை வந்திட்டால் எதுவுமே சிரமமில்லே."

"பாலனோட கனவு பெரிய கனவுதான்" என்று நகைத்தார் ஒருவர். "தோட்டத்துப் பிள்ளைகள் "ஸ்கூல் பஸ்ஸி"லே போய்ப் படிக்கிற காலம் வரும்கிறார்!"

"கூட்டுறவு சங்கத்திலே ஏற்பட்ட அனுபவத்துக்கு அப்புறங்கூட பாலனுடைய மனசு கலையக் காணோம்!" என்று பரிகசித்தார் வேறொருவர்.

"முயற்சி செய்வோம்; வேலையைத் தொடங்குவோம். எனக்கென்னவோ நாம நாலு பேரு முதல்லே கடுமையா உழைச்சால் பிறகு எல்லாம் தன்னாலே நடக்கும்னு தோணுது" என்றான் பாலன்.

அன்றைக்குக் கூட்டத்தில் உடனடியாகப் பெற்றோர் சங்கம் அமைக்க ஏற்பாடுகள் செய்வதென்றும் அடுத்த வாரத்திலிருந்து ஐந்தாவது ஆறாவது வகுப்பு மாணவமாணவியர்க்கு ஒருமணி நேரம் அதிகமாகப் பாடம் சொல்லிக் கொடுப்பதென்றும் தீர்மானம் ஆயிற்று.

எல்லாம் முடிவாகிய பின்பு ஒரு முக்கியமான சட்டப் பிரச்னையை அவர்களுக்கு நினைவூட்டினார் தலைமை ஆசிரியர்.

"இதெல்லாம் தோட்டப் பள்ளி நிர்வாகத் தலைவருடைய கவனத்துக்கு முதலிலே நாம கொண்டுபோகணும். அவர் தடை சொல்றதுக்கு இதிலே ஒண்ணும் இல்லே. நிர்வாகக் குழுவிலே நானும் ஓர் உறுப்பினன்தான். பெரிய கிராணிதான் இதுக்கெல்லாம் தலைவர். அவர்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டுப் பிறகு நாம வேலையைத் தொடங்கலாம்" என்றார் சண்முகம்.

நிர்வாகத்திடமிருந்து மேற்கொண்டு பொருளோ உதவியோ அவர்கள் எதிர்பார்க்கவில்லை. கொடுக்கப்பெற்ற ஊதியத்துக்கு அதிகமான நேரம் அவர்களாகவே உழைக்க முன்வந்திருக்கிறார்கள். பிள்ளைகளின் கல்வித் தரம் உயரப் பெற்றோரின் ஒத்துழைப்பை நாடுகிறார்கள். அவ்வளவுதான்! ஆகவே, இதற்கு ஏதும் தடை இருக்குமென்று யாருமே நினைக்கவில்லை.

"கேட்டுச் செய்ய வேண்டியது முறைதான்; கேட்டுவிடுங்கள்" என்றான் பாலன்.

ஆசிரியர்கள் கூட்டம் முடிந்தது. தங்கை கமலம் பள்ளிக்கூடம் விட்டவுடனேயே மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து லயத்துக்குப் புறப்பட்டுவிட்டாள். மாலை நேரமாதலால் ஆறஅமர நடந்துசெல்லவேண்டுமென்று தோன்றியது பாலனுக்கு.

சைக்கிளைத் தள்ளிக்கொண்டே நடந்தான்.

வலதுபுறம் மேட்டில் ஒரு சின்னஞ்சிறிய அரண்மனைபோல் கம்பீரமாகக் காட்சியளித்தது மானேஜர் துரையின் பங்களா. கோட்டமாகிய அந்தச் சாம்ராஜ்யத்துக்கு அவர்தாம் சக்கரவர்த்தி. ஐம்பது வயதுக்கு மேலான அந்த மனிதர் ஒதுங்கியும் உயர்ந்தும் வாழ்ந்தவர். தமக்கு அடுத்த பதவியிலிருந்த ஒரு சிலரைத் தவிர, வேறு யாருடனும் அவர் நெருங்கிப் பழகுவதில்லை; அவரையொத்த தோட்டத் துரைமார்களுக்கென்று தனியே சிறப்பானதொரு பொழுதுபோக்குச் சங்கம் இருந்தது. அடிக்கடி அங்கே சென்று விடுவார். எப்போதாவது தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க அவர் வருவதுண்டு. தமக்குத் தெரிந்த அரைகுறைத் தமிழில் மரம் வெட்டுவோரிடம் இரண்டு வார்த்தை பேசுவார்.

அவர் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்பது இன்னும் பாலனுக்குத் தெரியாது. பல ஆயிரம் வெள்ளிகள் இருக்கவேண்டும். கார் டிரைவர், தோட்டக்காரன், சமையற்காரன், வீட்டு வேலையாள் இப்படிப் பல பேர் அவரிடம் வேலை பார்த்தார்கள். அவருடைய பிள்ளைகள் இங்கிலாந்தில் வாழ்கிறார்களாம். மனைவியும் அடிக்கடி அங்கே சென்றுவிடுவாள். அவரைப் பற்றி அந்தத் தோட்டம் முழுவதும் அறிந்த இரகசியம் ஒன்று உண்டு. தம்முடைய சமையற்காரனின் மகளை அவர் தமக்கு வைப்பாட்டியாக வைத்திருந்தாராம். இது அங்குள்ள எல்லாருக்குமே தெரிந்த செய்தியாக இருந்தாலும் யாரும் இதைப்பற்றிப் பகிரங்கமாக வெளியில் பேசமாட்டார்கள். பெரிய துரைபற்றி யாரும் மூச்சுப் பேச்சு வைத்துக்கொள்ள முடியாது.

அடுத்துச் சற்றுத் தொலைவில் இருந்த கிராணிகளின் வீடுகளைப் பார்த்தான் பாலன். கிராணிகளில் பல வகையினர் உண்டு. தலைமைக் கிராணி, பெரிய கிராணி, சிறிய கிராணி, பால்நிறுக்கும் கிராணி, "மஸ்டர்" கிராணி என்றெல்லாம் சொல்லுவார்கள்.

இவர்களில் இலங்கைத் தமிழர்கள், கேரளத்திலிருந்து வந்தவர்கள், தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள் ஆகியோர் கலந்திருந்தார்கள். ஓரளவு கல்வி அறிவு படைத்தவர்கள் இவர்கள். பால்மரக் காட்டில் நடைபெறும் பல்வேறு வேலைகளையும் மேற்பார்வை செய்வார்கள். மரத்திலிருந்து வடியும் பால் ரப்பர்த் தகடுகளாக வெளியேறும்வரை களத்து வேலைகள் இவர்கள் கண்காணிப்பில் நடைபெறும்.

மத்தியதர-நடுத்தர வர்க்கத்தார் வாழ்வது போன்ற வசதிகள் உள்ள வீடுகள் அவர்களுடைய வீடுகள். கார்கள் வைத்துக்கொள்வோரும் உண்டு; மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் முதலிய வாகனங்கள் வைத்துக்கொள்வோரும் உண்டு. இவர்களுடைய உலகமும் அந்தத் தோட்டத்துக்குள்ளே ஒரு தனி உலகமாகத்தான் இருந்தது. மேலே உள்ள வெள்ளைத் துரையோடு இவர்களால் ஒட்ட முடிவதில்லை! கீழே உள்ள தொழிலாளர்களோடு இவர்கள் ஒட்ட விரும்புவதில்லை.

எதிரே வரிசை வரிசையாக லயத்து வீடுகள் தென்பட்டன. கண்காணிகள், மரம் வெட்டுவோர், வெளிக்காட்டு வேலை செய்வோர், லாரி டிரைவர்கள் போன்ற பல்வகையான உடல் உழைப்பாளர்கள் வாழும் பகுதிகள் அவை. வீடுகள் எனச் சொல்வதைவிடச் சின்னஞ்சிறு கூண்டுகள் என்றே கூற வேண்டும்.

அன்றைக்கு மாலை தமிழ்த் திரைப்படம் ஒன்று காட்டப்படுவதாக இருந்ததால், முன்னதாகவே தோட்டத்துப் பொட்டலை நோக்கி மக்கள் கூட்டம் வந்து இடம் பிடித்த வண்ணம் இருந்தது. மாதம் இரண்டு முறை அங்கே திரைப்படங்களை வரவழைத்துப் போட்டுக் காட்டுவார்கள். அது தவிர, எப்போதாவது அக்கம் பக்கத்து நகரங்களில் தமிழ்ப் படங்கள் ஞாயிற்றுக்கிழமையில் காலைக் காட்சிகளாக ஓடுவதுண்டு. பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களுக்குத் தமிழ்த் திரைப்படம் ஒரு முக்கியமான பொழுதுபோக்கு.

பாலனுக்குப் பிடித்தமாக அது இருந்துங்கூட அவன் அன்றைக்குப் படம் பார்ப்பதாக இல்லை. வழியில் அவனுடைய நண்பர்கள் பார்த்தால் வற்புறுத்துவார்கள் என்பதற்காகச் சைக்கிளில் ஏறிக்கொண்டு நேரே லயத்துக்கு விரைந்தான். அவனுடைய வீட்டில் அவன் தாயாரையும் தகப்பனாரையும் தவிர மற்றவர்கள் படத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

மேல் தளத்துக்குப் போய் அறைக்குள் நுழைந்தான் பாலன். மாமன் பழனியிடமிருந்து அவன் வாங்கி மாட்டியிருந்த கண்ணம்மாவின் புகைப்படம் மரச் சுவரில் தொங்கியது. அதை எடுத்துக்கொண்டு வெளியே வந்து நாற்காலியில் சாய்ந்தான். படத்தையே நெடுநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"உனக்கு நேர்ந்த கதி, உன் தாய் தகப்பனுக்கு நேர்ந்த கதி, வெளியிலே தெருவோரத்திலே குடும்பம் நடத்துறாங்களே - அவங்களுக்கு நேர்ந்த கதி, இனி யாருக்குமே இங்கே நேரக்கூடாது கண்ணம்மா. உன் மேலே நான் வச்சிருக்கிற அன்பு உண்மையா இருந்தால், நீ தான் என்னோட இந்தப் போராட்டத்துக்குத் துணை செய்யணும். செய்வியா?"

படத்தில் இருந்த கண்ணம்மா பதில் அளிக்காமல் புன்னகை பூத்தாள். பாலனின் விழிகளைக் கண்ணீர் திரையிட்டு மறைத்தது.

(தொடரும்)

நடையை மாற்றுக!

வெ. ஆறுமுகம்

பழைய நடையிலான மலேசிய மொழியை அடிப்படையாகக் கொண்டது, எஸ். பி. எம்., எம். சி. இ. மலேசிய மொழி வினாத்தாளின் நான்காவது கேள்வி.

தரப்படும் பத்தியிலுள்ள குறிப்பிட்ட சில சொற்களை விளக்க வேண்டும்; அப்பத்தியைத் தற்கால மலேசிய மொழியின் அமைப்பில் மாற்றி எழுத வேண்டும். இவைதாம் நான்காவது கேள்வியில் நீங்கள் செய்ய வேண்டியவை.

மொழி நடையை மாற்றும்போது கவனிக்கவேண்டியவை:

அ. பழைய நடையில் வாக்கியங்கள் மிக மிக நீண்டவையாக அமைந்திருக்கும். அவற்றை நடுத்தரமான வாக்கியங்களாக மாற்ற வேண்டும். ஒரு நீண்ட வாக்கியத்தைப் பிரித்து இரு வாக்கியங்களாக்கலாம்; மிக நீண்டதெனில் மூன்று வாக்கியங்களாக்கலாம்.

ஆ. சொல்லப்படும் பொருள் சுற்றி வளைத்துச் சொல்லப்பட்டிருக்கும். நேரடியாகவே பொருள் விளங்கும்படி சொல்ல வேண்டும்.

இ. Arakian, hatta, syahadan போன்ற தொடர்புச் சொற்கள் மிகுதியாக இருக்கும். அவற்றை முழுமையாக நீக்கிவிட வேண்டும்.

ஈ. இப்போது பொதுவாக பயன்படுத்தப்படாத சொற்களைப் (எடுத்துக்காட்டு: masygul-sedih) பெரும்பாலும் எடுத்துவிட்டு, வழக்கத்திலுள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

உ. தரப்படும் பத்தி அரசர்களைப் பற்றியதாக இருப்பின் Bahasa Istana எனப்படும் சில சிறப்புச் சொற்கள் (எடுத்துக்காட்டு: titah, santapan, murka, gering) பயன்படுத்தப்பட்டிருக்கும். அவற்றைப் பழைய சொற்கள் என்றெண்ணி நீக்கிவிடலாகாது. மலேசிய நாட்டின் அரசியல்-சமுதாய அமைப்பில், மாநில அளவில் சுல்தான்களும் நாட்டு அளவில் பேரரசரும் இருப்பதால் அவற்றை இன்னும் வழக்கிலுள்ள சொற்களாகவே கொண்டு அப்படியே பயன்படுத்த வேண்டும்.

ஊ. ஒரு சொல்லோ இரு சொற்களோ நேர் கூற்றுத் (Cakap Ajuk) தரப்பட்டிருப்பின் (எடுத்துக்காட்டு: "Baiklah") அவற்றை அயற்கூற்றாக (Cakap Pindah) மாற்றி வாக்கியத்தோடு இணைத்து எழுதிவிட வேண்டும். நீண்ட நேர்கூற்றுகள் தரப்படின், அவற்றை நேர்கூற்றாகவே எழுதலாம்.

எ. தற்கால மொழிநடையில் மாற்றி எழுதப்படும் பத்தி, பெரும்பாலும் எளிய சொற்களைக் கொண்டு சரளமாகப் படிக்கப்படும் வகையில் இருக்க வேண்டும்.

1976-ஆம் ஆண்டுக்குரிய (ஜூலை) வினாத்தாளில் இடம்பெற்ற நான்காவது கேள்வியும் அதற்குரிய விடையும் கீழே தரப்பட்டுள்ளன.

Baca petikan di bawa dan jawab soaıan-soalan yang berikutnya:

Shahadan pada masa Upu Daeng Chelak menjadi raja itu amanlah Riau adalah kira-kira sebelas tahun. Maka ramailah negeri Riau dengan beberapa dagang yang keluar masuk, beberapa ratus kapal kichi yang datang dari Benggala membawa dagangan apiun dan dagangan kain-kain. Beberapa pula kapal kichi dan selob membawa dagangan dari Jawa seperti beras dan lain-lainnya. Apa lagi pencalang dan pendewakan membawa dagangan sebelah timur bermacham-macham. Demikian lagi wankang-wangkang yang datang dari negeri China berpuluh buah yang besar-besar, kepala hijau dan kepala merah, membawa dagangan wangkang berlawanan dengan dagangan Jawa itu. Dan beberapa pula tuba Siam mambawa beras dan dagangan Siam. Hingga di laut penuhlah Kuala Riau dengan perahu-perahu dagang; tiadalah nampak amat ke laut daripada banyak tiang kapal . kichi penuh sesak bercuk-cuk ikan di laut Kampong China itu. Dan segala orang besar-besar pun di dalam Riau itu makmur, kebanyakan yang kaya. Apa lagi segala Bugis pergi datang sajalah dari Bugis sebab kebanyakan di lepaskan oleh Yamtuan Muda cukai-cukai dan labuh batunya, dan China-China pun beberapa ribu yang mengambil upah kepada orang Melayu mengerjakan kebun gambir.

(a) Terangkan makna perkataan-perkataan dan rangkaikata-rangkaikata yang bergaris di dalam petikan di atas.

i) amanlah ii) dagangan ii) berlawanan
iv) dilepaskan v) labuh

(b) Pindahkan bahasa Melayu Kelasik ini kepada bahasa Malaysia moden.

(a) (i) amanlah - tenteramlah
(ii) dagangan - barang-barang yang di perniagakan
(iii) berlawanan - berlainan
(iv) dilepaskan - dibebaskan
(v) labuh - singgah.

(b) Di bawah pemerintahan Upu Daeng Chelak selama kira-kira 11 tahun, negeri Riau berada di dalam keadaan aman dan makmur. Ramai pedagang-pedagang datang dengan kapal untuk berniaga di negeri itu. Dari negeri Benggala kapal-kapal membawa dagangan opium dan kain, manakala yang dari Jawa membawa beras dan lain-lain barang dagangan lagi. Bermacam-macam jenis dagangan juga datang dari negeri sebelah timur, seperti negeri Cina dan negeri Siam. Ini menyebabkan Kuala Riau penuh sesak dengan kapal-kapal dagangan.

Dengan adanya perdagangan dengan negeri-negeri asing, negeri Riau menjadi sebuah negeri yang kaya dan makmur. Ramai orang-orang Bugis mengambil peluang untuk berniaga di situ kerana mereka tidak dikenakan cukai oleh Yamtuan Muda. Tidak ketinggalan juga beberapa ribu orang Cina datang untuk mengambil upah mengerjakan kebun gambir kepunyaan orang-orang Melayu.

தரப்பட்டுள்ள விடையை ஓர் எடுத்துக்காட்டாக மட்டுமே கருதவேண்டும். இப்படித்தான் எழுத வேண்டும் என்றோ, இதுதான் சரி என்றோ, இந்த முறைதான் சரியான முறை என்றோ கூற முடியாது. அவரவர் தம் இயல்புக்கேற்ப எப்படி வேண்டுமானாலும் மாற்றி எழுதலாம். ஆனால், மேலேயுள்ள விதிகளைப் பெரும்பாலும் கடைப்பிடித்தல் அவசியம்.

கனவுகள்

மதன்

கனவுகள் எப்போதுமே வரவேற்கத் தக்கவை. அதிலும் இனிய கனவுகள் நமக்கு எல்லையில்லாத உற்சாகத்தை அளிக்கின்றன.

ஆனால், தீய கனவுகள்...? எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. குறிப்பாகக் குழந்தைகளிடத்திலே தோன்றும் தீய கனவுகள் சில விரும்பத்தகாத செயல்களுக்குக் காரணமாகி விடுகின்றன.

ஐந்து வயது முதல் ஏழு வயதுக்கிடைப்பட்ட குழந்தைகளிடையே தீய கனவுகள் தோன்றுவது மிகச் சாதாரணம்.

இங்கச் சமயத்தில் தான் பெற்றோர்களின் சாதுர்யம் அவசியமாகிறது. இத்தகைய தீய கனவுகளுக்கு எதிராகத் தக்க முறையில் பெற்றோர்கள் சிகிச்சை அளிக்கத் தவறினால், அதனால் ஏற்படும் விளைவுகள் மிகவும் அபாயகரமானவையாகவும் அருவருக்கத்தக்கவையாக இருக்கும் என்று உளவியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

தூக்கத்திலேயே நகத்தைக் கடிப்பது, பற்களைக் கடிப்பது, மற்றும் படுக்கைகளிலேயே சிறுநீர் கழிப்பது போன்ற விரும்பத்தகாத பழக்கங்கள் குழந்தைகளிடையே எப்படித் தோன்றுகின்றன?

இத்தகைய தீய பழக்கங்களைக் குழந்தைகளிடமிருந்து பெற்றோர்கள் அகற்ற வேண்டுமானால், கனவுகளுக்கு முறையான சிகிச்சை அளிக்க முற்படவேண்டும்.

தீய கனவுகளினால் பாதிப்படைந்திருக்கும் குழந்தைகளிடம் பெற்றோர்கள் கோபம் காட்டக் கூடாது.

அத்தகைய முன்கோபமே லும் பல தீய கனவுகள் உருவாக மூலகாரணமாகி விடுகின்றன.

இந்தச் சமயத்தில் குழந்தைகள், மனம் ஆறுதலடையும் வகையில் பெற்றோர்கள் அன்பாகப் பேசவேண்டியது அவசியம். அப்படி அன்பாகப் பேசுவதன் வழி, குழந்தைகள் தாங்கள் கண்ட தீய கனவுகளைத் தயக்கமின்றிப் பெற்றோர்களிடம் விளக்க முன்வருவார்கள். இதிலிருந்து விடுபட இதுதான் தக்க நிவாரணம்.

தாங்கள் கண்ட கனவுகளைப் பற்றிக் குழந்தைகளே முன்வந்து விளக்கும் வரையில் விட்டுவிடுங்கள். அவர்களை வற்புறுத்தக் கூடாது. ஓரிரு நாட்கள் அதற்காகக் காத்திருக்கவும் வேண்டும்.

குழந்தைகள், தீய கனவைப் பற்றிச் சொல்லியதும், அத்தகைய கனவு உருவாக அடிப்படையாக உள்ள சம்பவங்களை ஆராயுங்கள்.

குறிப்பாகப் பள்ளிகளில் நடக்கும் சம்பவங்கள், பிற குழந்தைகளால் மிரட்டப்படுவது போன்ற சம்பவங்களை ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டும். அப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்குமேயானால் அவற்றைக் களைய முயல வேண்டும்.

ஏதேனும் குடும்பப் பிரச்னை இருந்தால், அதனை முதலில் ஆராயுங்கள். குடும்பப் பிரச்னைகளும் குழந்தைகளுக்குத் தீய கனவுகளை ஏற்படுத்தக்கூடும்.

பணப்பிரச்னை மற்றும் வேலை இழப்பு போன்ற விஷயங்களைக் குழந்தைகளின் முன்னிலையில் பெற்றோர்கள் விவாதித்தாலும், அவை கனவுகளைக் கிளறிவிடும்.

மேலும், மிகக் கொடூரமான சம்பவங்களைக் குழந்தைகள் எங்கேனும் காண நேர்ந்ததா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். பள்ளியில் ஆசிரியர்களின் கோபத்திற்குக் குழந்தைகள் இலக்காவது, மற்றும் இதுபோன்ற வேதனை தரத்தக்க நிகழ்ச்சிகள் நடந்திருந்தாலும் அதற்கான ஆறுதலை அளிக்க வேண்டும்.

மரணம் போன்ற விஷயங்களைக் குழந்தைகளிடம் விளக்கத் தயங்க வேண்டியதில்லை. இதனைக் குழந்தைகளிடமிருந்து மறைப்போமேயானால், அது தொடர்பான விஷயங்களில் குழந்தைகள் அஞ்சியே வாழ வேண்டியிருக்கும்!

குழந்தைகள் எதைப்பற்றிக் கேள்வி கேட்டாலும் ஒளிவு மறைவின்றிப் பதிலளிக்க வேண்டும். இதில் தயக்கம் காட்ட வேண்டியதில்லை; சலிப்படைய வேண்டியதுமில்லை. அக்கேள்விகள் பாலியல் சம்பந்தப்பட்டவையாக இருந்தாலும் சரியே!

குழந்தைகளின் தீய கனவுகளில் ஆபாசமானவைகளும் இடம்பெற வாய்ப்புண்டு. அதுபற்றிக் குழந்தைகள் பெற்றோர்களிடம் கூற முயலும் போது அருவருப்படையவோ அல்லது மிரட்டவோ கூடாது. இதுவும் குழந்தைகளின் வளர்ச்சியில் ஒரு படிக்கட்டுத்தான்.

மேற்கண்ட வழிகளில் குழந்தைகளின் தீய கனவுகளை அணுகுவோமேயானால், பற்களைக் கடித்தல், படுக்கையில் சிறுநீர் கழித்தல், உளறுதல், அச்சப்படுதல் போன்றவற்றைப் பெரும்பாலும் தவிர்க்கலாம்.



சமயப்பணியோடு பொதுப்பணியையும் பல கோவில்களின் நிர்வாகத்தினர் இப்போது செய்யத் துவங்கியுள்ளனர். அவ்வகையில் கோலாலம்பூர் செஞ்சாங் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய நிர்வாகத்தினர் கடந்த 2.10.77-ஆம் நாள் பொதுமக்களின் உதவியுடன் கெப்போங் தொகுதி தேசிய முன்னணித் தலைவர் டாக்டர் டான் தியோங் ஹோங் அவர்களின் தலைமையின்கீழ் மாநகர சபையினரின் ஆதரவோடு "கொத்தோங் ரோயோங்" முறையில் தங்கள் வட்டாரத்தில் துப்புரவு இயக்கம் ஒன்றினை மேற்கொண்டார்கள்.

இவ்வியக்கத்தில் எல்லா இன மக்களும் திரளாகக் கலந்துகொண்டு நல்லெண்ண உணர்வுடன் உழைத்தது உண்மையிலேயே பாராட்டும்படியாக அமைந்தது.

படவிளக்கம்: இடமிருந்து இரண்டாவதாக இருப்பவர் கோவில் செயலாளர் திரு. எம். பழனியாண்டி, அடுத்து, தலைவர் திரு. ப. வடிவேலு, ஐந்தாவதாக அறங்காவலர் திரு. ஆர். முருகேசு, டாக்டர் டான் தியோங் ஹோங் ஆகியோருடன் தொண்டர்களில் சிலர்.

சினிமா விமரிசனம்



முருகன் அடிமை





வள்ளியம்மை: [கே ஆர். விஜயா] கோடீஸ்வரனின் மகள். தனக்குக் கிடைக்கும் பொன்னையும், பொருளையும், புத்தாடையையும் தன் குலதெய்வமான முருகனுக்கே அர்ப்பணித்துவிடும் ஒரு புனிதமான முருக பக்தை.

கந்தன்: [முத்துராமன்] முருக பக்தர்களுக்குச் சேவை செய்வதையே குறிக்கோளாகக் கொண்ட வாலிபன். முருக பக்தர்களுக்கு உதவி செய்யக் கைப்பொருள் இல்லை யென்றால் வழிப்பறி செய்யவும் தயங்காத ஒரு முரட்டு முருகபக்தன்.

ஒருநாள் காரில் கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்த வள்ளியம்மையிடமே வழிப்பறி செய்கிறான் கந்தன். அந்தப் பணத்தைக் கொண்டு, தடைபட்டிருந்த ஒரு ஏழை முருக பக்தரின் மகளுடைய திருமணத்தை அவனே முன்னின்று நடத்தி வைக்கிறான். அந்நேரம் வள்ளியம்மை தன் தந்தையுடனும் போலீசுடனும் அந்த இடத்திற்கு வருகிறாள். கந்தன் அதிர்ந்து போய் நிற்கிறான். ஆனால் அவள் அவனைக் காட்டிக்கொடுக்காமல் போய்விடுகிறாள் அந்தச் சந்திப்பே இருவரையும் இருமனம் கலக்க வைத்துத் திருமணத்தில் கொண்டுவந்து சேர்க்கிறது.

கந்தன் - வள்ளியம்மை தம்பதிகளுக்கு அழகும் அறிவுமுள்ள ஓர் ஆண் குழந்தை பிறக்கிறது. அதன் பின்னர்தான் அவர்களின் வாழ்வில் சோதனை மேல் சோதனை ஏற்படுகிறது. அனைத்தும் முருகனின் திருவிளையாடல்கள் தான்! அந்தக் கதையைக் கேட்டுத் தெரிந்துகொள்வதைவிடத் திரையில் பார்த்துப் புரிந்துகொண்டாலே சுவையாக இருக்கும்.

"துணைவன்", "தெய்வம்" போன்ற படங்களை அளித்து வெற்றிகண்ட சாண்டோ எம்.எம்.ஏ சின்னப்பா தேவர், தன் பாணியில் கொடுத்திருக்கும் பற்றொரு பக்திப் படம்தான் இந்த "முருகன் அடிமை". இந்த வண்ணப்படத்தின் கதை-வசனத்தையும் அவரே கவனித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நாயகியாக வரும் கே ஆர். விஜயா தனது பாத்திரத்தை இலகுவாகச் செய்து காட்டி சபாஷ் பெறுகிறார். [கே. ஆர். விஜயாவா இவர் என்று எண்ணத் தோன்றுகிறது; அவ்வளவு மெலிந்துபோய் இருக்கிறார்.] நடிகர் முத்துராமன் முருக பக்தனாகத் தோன்றி நடித்திருக்கிறார். அவருடைய நடிப்பு ஒரு இடத்தில்கூட போர் அடிக்கவில்லை. நவரசத்திலகம் அல்லவா?

திரை இசைத் திலகம் கே. வி. மகாதேவன் இசையமைப்பில் டி. எம். எஸ். குரலில் ஒலிக்கும் "சங்கம் வளர்த்த தமிழ் நீயல்லவா" என்ற பாடல் கணீரென்று இருக்கிறது. சுசிலா பாடும் "ஆனந்தத் தொட்டிலுக்கு அப்பாலும் இப்பாலும்" என்ற தாலாட்டுப் பாடல் இனிமையாக இருக்கிறது.

"மலேசியா" "முருகசாமி"யாக வரும் நாகேஷ், தன்து பழைய பாணி சேட்டைகளைக் காட்டி நம்மைச் சிரிக்க வைக்கிறார். அவருக்குத் துணையாக எம். பானுமதி, ஏ. சகுந்தலா, தேங்காய் சீனிவாசன் ஆகியோரும் இருக்கிறார்கள். இவர்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் படத்தோடு ஒட்டாவிட்டாலும், இவர்களின் நடிப்பு நம் மனதில் ஒட்டி விடுகிறது!

படம் முடியும்போது ஒரு நட்சத்திரப் படை எடுப்பே வருகிறது. விஜயகுமார், ஜெய்குமார், ஜெயா, அசோகன் எல்லோரும் இறுதிக் காட்சியில் மட்டும் தலையைக் காட்டுகிறார்கள். அசோகன் எமதர்மனாக வருகிறார்- பொருத்தமான வேஷம். ஆர். தியாகராஜனின் திறமையான டைரக்ஷனில் குடும்பத்துடன் கண்டு களிக்கும் வண்ணம் அமைந்திருக்கும் இந்த வண்ணச்சித்திரம் மலேசியாவில் ராமா பிலிம்ஸ் வெளியீடாகும்.


—ராஸ்மன்—



"உன்னைச் சொல்லிக் குற்றமில்லை
என்னைச் சொல்லிக் குற்றமில்லை
காலம் செய்த கோலமடி
கடவுள் செய்த குற்றமடி...."

"பெண்ணைச் சொல்லிக்குற்றமில்லை" படத்தில் ஸ்ரீகாந்த், படாபட் ஜெயலட்சுமி, ஒய். விஜயா.

இவர்கள்



நான் எவ்வளவோ தடுத்தும் பயனில்லாமல் போய்விட்டதே! எனக்காகப் பரிந்து பேச ஒருவர் கூட முன் வரவில்லையே! அப்படியானல் அதர்மம்தான் வெற்றி பெறுமா? அநியாயம்தான் நிலைக்குமா?

என் எண்ணங்கள் யாவும் நடந்து முடிந்த ஆலயப் பொதுக் கூட்டத்தில் பேசப்பட்ட பிரச்னைகளையே சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

அந்தத் தோட்டத்தில் வேதாசலம்தான் பெரிய கங்காணி. கங்காணி என்ற ஒரு தகுதியைக் கொண்டே, கோவில் தலைவர் பொறுப்பையும் அவர் வகித்து வந்தார். அவர் சொல்லைத் தட்டிப் பேசவோ, மறுத்துப் பேசவோ அந்தத் தோட்டத்தில் எவருக்கும் துணிவில்லை. அவர் சொன்னுல், "அதுதான் சரி" என்று தலையாட்ட ஒரு கூட்டமே இருந்தது அந்தத் தோட்டத்தில். மறுத்துப் பேசினுல் மறுநாள் வேலைக்காட்டில் வேதாசலத்தின் சர்வாதிகாரத் திறமை பளிச்சிடும்.

ஆலயக் கூட்டத்திலும் அவருடைய சர்வாதிகாரம் எதிரொலிக்கத் தவறவில்லை. அன்று வருடாந்திரத் திருவிழாவினை முன்னிட்டு ஆலயப் பொதுக் கூட்டம் நடந்தது.

திருவிழாப் பிரச்னைகளையெல்லாம் ஒரு வழியாகப் பேசிய பின்னர், கூட்டம் பொதுவுக்கு விடப்பட்டது. நான்தான் முதலில் எழுந்து நின்றேன். நான் பேச முற்பட்ட போது பெரிய கங்காணியின் முகத்தில் ஒரு வெறுப்புத் தோன்றி மறைந்ததை என்னுல் உணரமுடிந்தது.

"ஆண்டவன் பெயரால் உயிர்ப் பலி இடுதல் கூடாது. காவடி எடுக்கும் முறையைக் கோவில் நிர்வாகம் மாற்ற வேண்டும். இந்த இரண்டு தீர்மானங்களையும் நான் முன்மொழிகிறேன்!" என்றேன். கூட்டத்தில் நிசப்தம் நிலவியது. ஒருவர் கூட என் பக்கம் ஆதரவாகப் பேசாதது கண்டு எனக்குள்ளேயே வெட்கப்பட்டுக் கொண்டேன். வேதாசலம் என்னை ஏறிட்டுப்பார்த்தார். அவர் பார்வையில் ஏதோ ஓர் அலட்சியம் இருந்தது. நான் மௌனமாக அமர்ந்தேன்.

"பரம்பரை பரம்பரையாக செய்து வர்ற முறையை மாத்த நிருவாகம் விரும்பல! உயிர்ப்பலி கொடுக்கிறதைத்தான் சொல்றேன். காவடி எடுக்கிறது பக்தர்களோட சொந்த விஷயம். அதுல தலையிட கோவில் நிருவாகம் விரும்பல" என்று கூறியவர் வேதாசலம்தான். அவர் பேசி முடிக்கக்கூட இல்லை. தலையாட்டிப் பொம்மைகள்போல எல்லோரும் "ஆமாம், அதுதான் சரி" என்று ஒருமித்த குரல் எழுப்பினர். நான் சோர்ந்து போனேன்.

"டேய் கண்ணு! என்னடா பெரிய ஆராய்ச்சியில மூழ்கிட்டது போல தெரியுதே"- சிந்தனையிலிருந்து விடுபட்டுச் சட்டென நிமிர்ந்து பார்க்கிறேன்.


"அடடே, பாலுவா! நீ எப்படா வந்தே?"—நான் கேட்கிறேன்.

"நான் நேத்தே வந்துட்டேன். உங்க தோட்டத் திருவிழாவைப் பார்க்கத்தான், இராணுவத்தில ஒரு வார லீவு போட்டுட்டு வந்தேன்!" என்கிறுன் என் பழைய நண்பன் பாலு. இருவரும் பழைய கதைகளையெல்லாம் பேசுகிறோம்.

"பாலு! இந்தச் சமுதாயம் சீர் கெட்டுப் போறதைப் பற்றித்தான் ரொம்ப கவலையா இருக்கு. நம்ம சமூகம் என்றைக்குத்தான் திருந்துமோ . ?" நான் பெருமூச்சு விடுகிறேன். நண்பன் ஏதோவொரு அர்த்தத்தோடு சிரிக்கிறுன். நான் அவனைக் கேள்விக்குறியோடு பார்க்கிறேன்.

"இன்னும் உனக்கு அந்தப் பழைய பல்லவிதானு? என்னைப் பொறுத்தவரை இந்தச் சமுதாயம் திருந்தணும்னு, ஒரே ஒரு வழிதான் இருக்கு. இந்த உலகம் ஓர் அழிவுக்கு வந்து புதிய உலகம் உருவாகணும்! இந்தச் சமுதாயத்தைத் திருத்த வேண்டி நாம் எடுக்கிற முயற்சியும் சக்தியும் வீண்தான். நம்ம சமுதாயத்தைத் திருத்தணும்னு எத்தனையோ தீர்க்கதரிசிகள் தோன்றினுங்க! ஆனுல்... என்ன ஆச்சு! இவங்க பெயரை மட்டும் நிமிஷத்துக்குப் பல தடவை மேடையில சொல்றுங்களே தவிர, கொள்கைகளை யாருமே கடைப்பிடிக்கிறதில்ல! நீ எம்மாத்திரண்டா?"

நண்பன் பாலுவை ஆச்சரியத்தோடு பார்க்கிறேன். இவன் எப்போது தத்துவம் பேசக் கற்றுக் கொண்டான்!



கு. பா. அம்பிகா
கலைச் செல்வன்

காவடிச் சிந்துப்பாடல் ஒலிக்கின்ற ஓசை மிக அண்மையில் கேட்கிறது. நண்பன் என்னை அழைக்கிறுன். காவடி என்னும் பெயரால் நடக்கும் அந்தத் தெருவாட்டத்தில் கலந்து கொள்ள எனக்கு விருப்பமில்லையென்றுலும் நண்பனின் அழைப்பை என்னுல் உதறித் தள்ள முடியவில்லை.

பெயருக்கு மட்டும் ஒரே ஒரு காவடி! மற்றவர்கள் பன்னிரெண்டு அடியிலிருந்து பதினாறு அடிவரையிலான நீண்ட ஈட்டிகளை கன்னங்களின் பக்கவாட்டில் பாய்ச்சிக் கொண்டு மிகக் கொடூரமாக ஆடி வருகின்றனர். மத்தளம் போன்று செய்யப்பட்ட தகரத்தை அடித்துக் கொண்டு அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம்; கிராமிய ஆட்டத்திலிருந்து மேல்நாட்டு ஆட்டம் வரை ஆடுவதற்கு ஒரு கூட்டம்; இந்தப் புதுமையான பக்தி முறையை வேடிக்கை பார்ப்பதற்குச் சாலையின் இரு மருங்கிலும் மக்கள் கூட்டம். சாலை ஓரமாக இருக்கும் தாய்மார்கள் மஞ்சள் கலந்த நீரை வாளியில் தூக்கிக் கொண்டு வந்து, ஈட்டி பாய்ச்சிக்கொண்டவர்களின் கால்களில் ஊற்றி, மிகவும் பயபக்தியோடு வணங்குகிறார்கள்.

இது எந்த வகையைச் சேர்ந்த பக்தி என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படியும் ஒரு கண்மூடித்தனமான பக்தியா! என் உள்ளம் வேதனையால் ஒரு கணம் விம்முகிறது. எல்லாவற்றிற்கும் நம்பிக்கைதான் காரணம் என்கிறார்கள். ஆனால் அந்த நம்பிக்கை இந்த அளவுக்கு இருப்பதைத்தான் என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அந்தக் கூட்டம் ஒரு வழியாக ஆலயத்தை அடைகிறது.

மறுநாள்...

மகேஸ்வர பூசையில் கலந்து கொள்ள நானும் நண்பனும் போகிறோம்.

ஆலயத்தின் அருகில் ஒரு முரட்டு ஆட்டுக்கடா நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் தன் உயிர் பிரியப் போகிறது என்பதை அந்த ஜீவன் அறியுமோ என்னவோ! ஆனால் அந்த ஆடு மரண வாயிலில் நிற்கிறது என்பதைச் சிறு பிள்ளைகூட கூறிவிடும்.

சற்று நேரத்திற்கெல்லாம் பூசாரியும் வேதாசலமும் அங்கே வருகின்றனர். பூசாரி மணியடித்துப் பூசை செய்கிறார். அந்த ஆட்டுக்கடா கேட்ட கடைசி ஒலி அதுதான்.

பூசாரியின் கையிலே கூரிய, பெரிய கத்தி பளிச்சிடுகிறது. புனிதமாக மதிக்கப்பட வேண்டிய அவர் கொலைகாரராகப் போகிறார்; தூபக் காலையும் தீபத்தட்டையும் ஏந்துகின்ற கையில் கொலைவாள்! என்ன அநியாயம்?

பூசாரி ஏதோ முணுமுணுக்கிறார். அடுத்தகணம் கையில் தாங்கிப் பிடித்திருக்கும் அந்த நீண்ட பெரிய கத்தி, ஆட்டின் கழுத்தில் பாய்கிறது!

"அடப்பாவி" என்னையறியாமல் வெளிப்பட்டு விடுகிறது அந்த வார்த்தை. பாதி துண்டித்தும், மீதி துண்டிக்கப்படாமலும் இருந்த அந்த ஜீவன் துடிதுடிக்கிறது.

அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு வெகுநேரம் அங்கே என்னால் நிற்கமுடியவில்லை! 'ஓ'வென்று அழவேண்டும்போல் தோன்றுகிறது. இந்தச் சமுதாயம் பொல்லாதது என்று எனக்குத் தெரியும்; ஆனால் இவ்வளவு கொடூரமானது என்பதை இன்றே காணுகிறேன். நான் நண்பனை ஏக்கத்தோடு பார்க்கிறேன். அவன் இலேசாகச் சிரிக்கிறான். அவன் சிரிப்பில் ஏதோ அர்த்தம் புதைந்துள்ளதை என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது.

அதுவரை அங்கே நின்றுகொண்டிருந்த வேதாசலம் என்னை உரசிய படி கோவிலுக்குள் பிரவேசிக்கிறார். அவர் நடையில் ஒரு வேகம் தெரிகிறது. ஏதோ ஒரு மாபெரும் வெற்றியைக் கண்டவர்போல் முகத் தோற்றம்.

நண்பனும், நானும் இல்லம் நோக்கி நடைபோடுகிறோம். என் உள்ளத்தில் ஒரு விரக்தி; நடையிலே ஒரு தளர்ச்சி.

ஆண்டவன் பெயரால் நடந்த எல்லாவற்றையும் மறக்க முயல்கிறேன். ஆனால் அந்த உயிர்ப்பலி மட்டும் என் உள்ளத்தை வாட்டிக் கொண்டேயிருக்கிறது. என் மனதை விட்டு அந்தக் கோரக்காட்சி மறைய மறுக்கிறது.

திருவிழா என்றாலே எனக்கு வேம்பாகக் கசக்கிறது. எல்லாம் அந்தத் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பாவங்கள் தானே! ஆண்டுக்கொரு முறை ஆண்டவன் பெயரால் உயிர்களைத் துடி துடித்துச் சாகவைப்பதைவிட, அந்தத் திருவிழாவை நடத்தாமலே விட்டுவிடுவது எவ்வளவோ புண்ணியம் என்று மனம் எண்ணுகிறது. ஆனால்...?

பத்துப்பேர்

தீபாவளி வந்தாலே கூடவே பல விதங்களில் செலவும் வந்துவிடும். எவ்வளவுதான் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நாம் இருந்தாலும் இறுதியில் வருஷத்துக்கு ஒரு முறைதானே தீபாவளி என்பதால் நம் உறுதி தளரத் தொடங்கிவிடுகிறது!

இவ்வாண்டு தீபாவளிக்கு தந்தெந்த வழிகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கலாம் என்று அண்மையில் பத்து வாசகர்களைச் சந்தித்து அவர்களின் எண்ணங்களைக் கேட்டேன். அவர்களும் பூரிப்போடு தங்கள் கருத்துக்களை வழங்கினர்.

பேட்டி: ராமதாஸ் மனோகரன்

மலிவுச் சேலை

"என்னத்தைத்தான் சிக்கனம் என்று பார்த்தாலும் தீபாவளி தினத்தில் செலவு வந்திடத் தாங்க செய்கிறது. இந்த ஆண்டு



விலையுயர்ந்த சேலையை வாங்காமல் மலிவு விலையில் ஒரு சேலையை வாங்கி அதன் வழி கொஞ்சம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க தீர்மானிச்சிருக்கேன்" என்று சிக்கனமாகவே கருத்துக் கூறினார் ஜோகூர் செல்லம் தோட்டத்தைச் சேர்ந்த குமாரி பி. ராதா.

வாழ்த்துக்கார்டு

"ஆண்டுக்கொரு முறை நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தீபாவளி வாழ்த்துக்கார்டுகள் அனுப்பி உறவுப் பாலத்தை புதுப்பித்துக்கொள்வது நம் வழக்கம்!



விதவிதமான கார்டுகளை அதிக விலை கொடுத்துக் கடையில் வாங்கி அனுப்புவதைவிட நாலு, ஐந்து நண்பர்களாகக் கூட்டுச் சேர்ந்து "பிளேய்னக" கார்டுகளை அச்சகத்தில் கொடுத்து அடித்துப் பகிர்ந்து கொண்டால் சிறப்பாகவும் இருக்கும், சிக்கனமாகவும் இருக்கும்" என்பது இளைஞர் எஸ். குருசாமியின் எண்ணம். இவர் கோலாலம்பூரைச் சேர்ந்தவர்.

கூட்டுப் பலகாரம்!


"ஆண்டுக்கொரு முறை வரும் தீபாவளிக்குச் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறது கொஞ்சம் கஷ்டம்தான்! இருந்தாலும் ஆடம்பரமாக எதையும் செய்யறதில்லைன்னு இருக்கிறேன். பலகாரங்களை



இரண்டு மூன்று குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து, கூட்டாகச் செய்து பின்னர் அதனைச் சமமாகப் பங்கு போட்டுக்கொண்டால் வேலையும் குறையும்; செலவும் குறையும். தோட்டப்புறங்களில் பலர் இதைப் போல் செய்வதாக என் கணவர் ஆலோசனை கூறியிருக்கிறார். அதையே எங்கள் வீட்டில் கடைப்பிடிக்க இருக்கிறோம்!" என்று கூறுகிறார் இவ்வாண்டு தலைத் தீபாவளி கொண்டாடவிருக்கும் பினாங்கைச் சேர்ந்த திருமதி எஸ். தெய்வானை.

தீபாவளி பார்ட்டி

"தீபாவளியன்று நம் தமிழ் நண்பர்களையும் மற்ற இனங்களைச் சேர்ந்த நண்பர்களையும் அழைத்து "பார்ட்டி" கொடுப்பது இளைஞர்களின் வழக்கம். இப்படி வீட்டுக்கு வீடு அழைப்பதைவிட



ஒரு குறிப்பிட்ட அளவு நண்பர்கள் ஒன்றுகூடி ஆளுக்கு மூன்று நான்கு வெள்ளி செலுத்தி ஒரே இடத்தில் தீபாவளி விருந்தை வைத்துக் கொண்டால் காலமும் மிஞ்சும்; செலவும் மிஞ்சும்!" என்று ஒரு மணியான கருத்தைக் கூறினார் தலைநகர் பேம்பு கார்டனைச் சேர்ந்த இளைஞர் து. கிருஷ்ணசாமி.

"நோ" வான்கோழி!

"இந்த வருஷம் "ஏரியஸ்" கிடைத்திருக்கிறதாலே எல்லாருமே கொஞ்சம் தாராளமாகத்தான் இருப்பார்கள்! ஆனா நாங்க ...!

சென்ற ஆண்டு வான்கோழி, கோழி, இறைச்சி ஆகிய மூன்று அம்சங்களையும் தனித்தனியாகச் சமைத்துப் பெரிய விருந்து வைத்து மகிழ்ந்தோம். அதனால் பெரிய செலவும் ஏற்பட்டுவிட்டது! ஆனால் எங்க



வீட்டிலே இவ்வாண்டு தீபாவளிக்கு "நோ" வான்கோழி. கோழி, இறைச்சியோடு சிம்பலாக விருந்து வைக்கத் திட்டமிட்டுள்ளோம். அதோட சினிமாப்பட விஷயத்திலும் கொஞ்சம் "கட்சோட்" பண்ண நினைத்திருக்கிறோம்" என்று புன்னகை தவழக் கருத்துரைத்தார் கோலாலம்பூர் பெல்பீல்ட் ரோட் பகுதியைச் சேர்ந்த குமாரி எம். புஷபாராணி

கோழி வளர்க்கவும்

"தீபாவளிக்கு முதல் நாள் மார்க்கெட்டில் கோழி வாங்கினால் அதன் விலை ஏற்றம் கிடுகிடுவென்றுதான் இருக்கும்! அதனால் தீபா



வளிக்கு நாலைந்து மாதத்திற்கு முன்பே கொஞ்சம் பெரிய கோழிக் குஞ்சுகளாகச் சிலவற்றை வாங்கி

சொல்கிறார்கள்

வீட்டில் நல்ல தீனி போட்டு வளர்த்து வந்தால் தீபாவளிக்குச் செலவு மிஞ்சும். அதோட தீபாவளிக்கென புதுசா அலமாரி, ரேடியோ கிராம், மேஜை, கார்பெட் என்று வாங்குவதைத் தவிர்த்துவிடுவதும் நல்லது. ஒருநாள் கூத்துக்கு இவ்வளவு ஆடம்பரம் அவசியந்தானா?" என்று வினவினார் தலைநகர் செராஸ் டெலிகாம்சில் பணிபுரியும் எம். பத்துமலை.

புதிய சேலை இல்லை!

"தீபாவளி வருவதற்கு முன்னாலேயே சிக்கனத்தைப் பற்றிப் பேசலாம். ஆனால், திருநாள் நெருங்க நெருங்க சிக்கனம் பற்றிய சிந்தனையும் மறையத் தொடங்கி



விடுகிறது. இவ்வாண்டு தீபாவளிக்கு "நோ" புதிய சேலை! ஆமாங்க, நான் புதிய சேலையே வாங்கிறதில்லைன்னு தீர்மானித்திருக்கிறேன். என்னிடம் இருக்கிற சேலைகளில் கொஞ்சம் புதுசா இருக்கிறதையே கட்டிக்கப்போறேன்!" தான் கடைப்பிடிக்கவிருக்கும் தீபாவளி சிக்கனங்களில் ஒன்றை இப்படி எடுத்துரைத்தார் கோலாலம்பூரைச் சேர்ந்த குமாரி எல். லெட்சுமி.

மதுபானங்களைக் "கட்" பண்ணினால்!

"தீபாவளி குதூகலத்தில் பெரியவர்கள் அவ்வளவாக ஈடுபாடு காட்டுவதில்லை. அப்படியே கொஞ்சம் ஆர்வம் காட்டினாலும் அது வீட்டிலுள்ள சின்னஞ்சிறுசுகளுக்காகவும், விருந்தினர்களுக்காகவுமே இருக்கும்.



பலகாரங்களைக் கடைகளில் ஆர்டர் கொடுத்து வாங்காமல் நாமே செய்துகொண்டால் செலவு குறையும். மதுபானங்களுக்குச் செலவிடுவதை முழுமையாகக் "கட்" பண்ணினால் எவ்வளவோ மிச்சப்படுமே!"- கிள்ளானைச் சேர்ந்த பெ. செ. செல்வத்தின் கருத்து இது.

சினிமா வேண்டுமா?

"தீபாவளிக்குத் தியேட்டருக்குச் சென்று படம் பார்க்கிறதை "தெய்வ தரிசனம்" போல நினைக்கிறவங்களும் நம்மிடையே இருக்கிறாங்க! இப்படி ஒரேயடியாக மூணு நாலு படங்களைப் பார்க்கிறதைக் குறைச்சிக்கிட்டா கண்ணுக்கும் நல்லது; காசும் மிச்சப்படும். டி. வி. யிலேதான் தீபாவளிக்குத் தமிழ்ப் படம் காட்டுறாங்களே... அது போதாதா? இந்த ஆண்டுத் தீபா



வளிக்கு நான் சினிமாவுக்கே போறதில்லைன்னு தீர்மானிச்சுட்டேன்!" என்று கருத்துரைத்தார் ஜோகூர் பாரு செல்லம் தோட்டத்தைச் சேர்ந்த குமாரி எம். சரோஜா.

"ரெடிமேட்"

"தீபாவளிக்கென்று துணி வாங்கிப் பிள்ளைகளுக்குச் சிலுவார், சட்டைகள் தைப்பதைவிட "ரெடிமேட்" சட்டைகளை வாங்கிக்கொண்



டால் அழகாகவும் இருக்கும், செலவும் குறையும். மற்றும் பலகாரங்கள், உணவு வகைகளை அளவோடு செய்துகொள்வதன் மூலமும் சிக்கனம் பிடிக்கலாம்" என்று கச்சிதமாகக் கருத்துரைத்தார் பத்துமலையைச் சேர்ந்த குமாரி எஸ். லெட்சுமி.

வாழ்வுச்சிறை

எம். கே. ஞானசேகரன்

இருவர் இச்சை இரவில் விளைந்த
இன்பம் உருவாய் மாறித்-தாயின்
கருவின் சிப்பியில் முத்தாய் நானாய
கருத்தறி யாமல் வளர்ந்தேன்!
பருவப் புரட்சியில் யாரோ இருவர்
புரியும் பிழைகளினாலே - இங்கு
வருவோர், போவோர் முடிவும் இல்லா
வாழ்வே தொடருது நாளும்!

அழுதேன், சிரித்தேன், அணைத்தாள், மகிழ்ந்
அன்னை என்பவள் ஒருநாள்! -பின்
விழுதாய் உறவுகள் வாழ்வில் ஆயிர
விரைவாய்ச் சேர்ந்தன சிலநாள்!
பழுதே பாதையில் படரா வண்ணம்
பாவை ஒருத்தியோ டிணைந்தேன்! -ஒரு
விழுதாய் அல்ல, மனத்தில் அவளை
வேராய் வரித்துக் கொண்டேன்!

வேராய் இருந்தவள் வேறாய்ப் போனாள்
வேதனை அழலில் விழுந்தேன்-அமைதி
தாராய், உன்னை தொழுதேன்-என்று
தழுவி மகிழ்ந்தேன் மதுவை!
சீராய்த் தொட்டிலில் தாலாட்டியவள்
தாய்க்குலத் தோன்றலில் ஒருத்தி! -இரு
கூறாய் நெஞ்சைக் கொடுமை செய்தவள்
கோணல் குலத்தில் ஒருத்தி!

உறவும் பகையும் இரவாய்ப் பகலாய்,
முறையாய் மாறி வந்து, -இன்ப
வரவு செலவால் வாழ்வில் துயரம்
மலையாய் குவியும் போது,
நரகம் என்பது நேரில் வந்து
நஞ்சை நெஞ்சிலே கலக்கும்!- வாழ்வுச்
சிறையிலிருந்தே, விடுதலை தேடித்
திரிந்தேன் இறைவா தருவாய்!

தமிழகத்தில் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் பார்த்து மகிழும் தரமான வெற்றி நாடகங்கள்.
விசேஷ காட்சி ஜோடனைகள்.
என்றென்றும் மறக்க முடியாத
மதுரமான இன்னிசைக் கீதங்கள்......



ஹரிச்சந்திரா மயான காண்டத்தில் உடையப்பா தேவரின் ஓர் தோற்றம்!

மலேசிய, சிங்கப்பூர் ரசி

இசை நாடகத்

30 நடிகர் -

உண்மையே,
உன்னை நம்புவோமாக!
-ஹரிச்சந்திரன்

லை

அக்டோபர்
27 - ஸ்ரீ வள்ளி
28 - ஹரிச்சந்
31 - சத்தியவ
நவம்பர்
1 - பவளக்கொ
2 - நந்தனார்

நாடகங்களின் கதைச் சுருக்கம்:

அரிச்சந்திரா

அரிச்சந்திரா சத்தியத்தின் பெருமையை உலகிற்கு உணர்த்திய ஒரு மகா புருஷனின் வாழ்க்கை சரித்திரம். அரச பதவியை இழந்த பொழுதும், நாட்டை இழந்த பொழுதும் மனைவியை இழந்த பொழுதும். மகனை இழந்த பொழுதும் அரச வம்சத்தில் பிறந்தும் சுடுகாடு காக்கும் வெட்டியான் தொழில் செய்த பொழுதும் கூட சொந்த மகனின் பிணத்தை தகனம் செய்ய வந்த மனைவியை கண்ட பொழுதும்கூட சத்தியத்தின் எல்லையில் நின்று வாழ்க்கையில் ஒருதரம் கூட பொய் பேச மறுத்த சத்தியத்தின் காவலனாக வாழ்ந்துவிட்ட ஒரு காவியமாகி விட்ட மகா புருஷனின் வாழ்க்கை சரித்திரம தான் இந்த நாடகம் அரிச்சந்திரா.

சம்பூர்ணவள்ளி திருமணம்

தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் ஸ்ரீ முருகப் பெருமான், திருவிளையாடற் புராணத்தில் ஸ்ரீ வள்ளியை மணந்துகொள்ளும் ஒரு தெய்வீக கதைதான் சம்பூர்ண வள்ளித் திருமணம். கந்தபுராணத்தின் ஒரு பகுதி!

பவளக்கொடி

இந்திய நாட்டின் இதிகாசங்கள் என்று புகழப்படும் இருபெரும் காவியங்களில் ஒன்றான மகாபாரதத்தின் மாவீரனான அர்ஜுனனை. ஆண் இனத்தையே வெறுத்து ஒதுக்கிவிட்டு வாழ்ந்து வந்த ஒரு பெண்ணரசி பவளக்கொடி. பெண்களுக்கென ஒரு தனி உலகம் இருக்க முடியும் என்று கனவு கண்ட பவளக்கொடி. இறைவனின் சிருஷ்டிகளாகிய ஆணும் பெண்ணும் இருவருமே தனித்து வாழ முடியாது. இருசாராருமே ஒருவருக்கு மற்றவர் இல்லாமல் வாழ முடியாது என்பதை விளக்கும் ஒரு புராதன கதைதான் பவளக்கொடி நாடகம்.

…களுக்கு ராஜலிங்கம் புரொடக்ஷன்ஸார் படைக்கவிருக்கும்

…திலகம் உடையப்பா

…டிகைகள் அடங்கிய இசை நாடகங்கள்

டிக்கட்டுகள்: $10, $5

…ட்களுக்குமேல் சிறப்பாக
…டை ஏறிய நாடகங்கள்

…ருமணம்
…ரா
…ன் சாவித்திரி

…டி கோலாலம்பூர்
தேவான் பகாசாவில்

நாடகத்தினத்தன்று
காலை மணி 10க்கு
தேவான் பகாசாவில்
டிக்கட்டுகளைப்
பெற்றுக்கொள்ளலாம்

குறிப்பு:—
சிங்கப்பூர் நிகழ்ச்சிகள்
பின்னர் அறிவிக்கப்படும்

"…உடையப்பா நடித்தார் என்று சொல்வதை விட அவருடைய அகண்ட மார்பு நடித்தது. திரண்ட புஜங்கள் நடித்தன. அவருடைய தீட்சண்யமான பார்வை நடித்தது. அவருடைய வெண்கலக் குரல் நடித்தது என்றெல்லாம் சொல்வதுதான் நியாயம். இன்னமும் சொல்லப்போனால் வெட்டியானாகத் தோன்றிய அவர், தம் கையிலே வைத்திருந்த கழியைக் கூட நடிக்க வைத்தார் ஆஹா. இவ்வளவு அழகாக நடிக்கிறாரே. பாடுகிறாரே என்ற நினைப்பை விட ஒரு மனிதனால் எப்படி இப்படிப் பாடி நடிக்க முடிகிறது? என்ற பிரமிப்பே அதிகமாக இருக்கிறது…"

"உடையப்ப தேவரின் ஹரிச்சந்திர நாடகத்தில் உடையப்பா அவர்கள். ஹரிச்சந்திரனாக நடித்ததை "நடிப்பு" என்று வர்ணித்தால் அது அவருக்குச் செய்யும் அநீதியாகும். அவர் ஹரிச்சந்திரனாக மேடையில் தோன்றிச் செய்து காட்டுவது நடிப்பு அல்ல; சாதனை……"

துக்ளக் ஆசிரியர்
சோ

சத்தியவான் சாவித்திரி

தன்னை மணம் செய்து கொள்ளவிருக்கும் சத்தியவான் திருமணமான ஒரு வருஷத்தில் இறந்துவிடுவான் என்று ஒரு மகா முனிவரால் எச்சரிக்கப்பட்டிருந்தும் அறிந்திருந்தும்கூட மனதால் கணவனாக ஏற்றுக் கொண்டவனை தவிர வேறு யாரையும் மணந்துகொள்ள மறுத்து சத்தியவானையே மணந்து கொண்டு சத்தியவானின் உயிருக்காக யமதர்மனோடு வாதிட்டு தன் கணவனின் உயிரை மீட்டு பின் உயர்வை உலகிற்கு எடுத்து காட்டிய கற்புக்கரசியின் சரித்திரம் தான் சத்தியவான் சாவித்திரி நாடகம்.

நந்தனார்

ஆண்டையான் நிலத்தில் வேலை செய்யாமல் எப்போதும் சிவா, சிவா என புலம்பும் நந்தனை நிண்டல் செய்து, நீ கடவுளை காட்ட முடியுமா என மக்கள் கேட்க, அவர்களை திருப்பாங்கூர் கோயிலுக்கு அழைத்துச் செல்கிறான் நந்தன். கோயில் வாசலில் நந்தி மறைத்து நிற்க மனம் உருகி இறைவனை வேண்டிப் பாடுகிறான். நந்தி விலகுகிறது. இறைவன் தரிசனம் கிடைக்கிறது. நந்தன் சாதாரண மனிதனல்ல என்பதை அனைவரும் உணர்கின்றனர். அதன் பிறகு சிதம்பரம் செல்லும் நந்தனை வேதியர்கள் வரவேற்கின்றனர். நந்தன் அதில் மனம் லயித்தபடி நடராஜப் பெருமான் சன்னதியில் நுழைந்து ஜோதியில் கலந்து ஜோதியாகிறான்.

தமிழறிவுப் போட்டி 8 இறுதி நாள் 10/11/77

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.

2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.

3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனுவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.

4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

5 எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப் படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.

6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப் படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.

8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.

9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின முடிவே இறுதியானது.

10. இறுதிநாள் 10-11-1977.

11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
P.O. Box 2066
Kuala Lumpur

■	1	■	2		3
4				■	
■		■	■	5	
6				■	■
		■	■	■	7
	■	■	8		

பெயர். ____________________

அடையாள அட்டை எண். ____________________

முகவரி ____________________

____
கையொப்பம்.

இடமிருந்து வலம்:

2. தாத்தாக்களுக்கு இவர்களைக் கேலி செய்வதில் ஒரு தனி இன்பம்.

4. முருகப் பெருமானுக்கு இப்படியும் ஒரு பெயர்.

5. இது பல்லுக்கு உறுதிதரும் என்பது முன்னோர்களின் அனுபவம்.

6. எதற்குமே பயன்படாமல் மணிக்கணக்கில் பேசப்படும் பேச்சு.

8. பெண்களின் ஒப்பனை நேரத்தைச் சிக்கனப்படுத்த இதுவும் இப்போது "ரெடி மேடாக" வந்துவிட்டது.

மேலிருந்து கீழ்:

1. சிலர் இதன் மூலமாகவே எல்லாவற்றையும் சாதிக்க முனைவார்கள்

2. இதன் தொல்லையைப் பெண்களிடம் கேட்டால் சொல்லுவார்கள்.

3. வீரம்.

6. கணவர்களை வசமாக்கப் பெண்களுக்குப் பயன்படுவது.

7. மனிதருக்குச் சிறப்பைத்தரும் ஒன்று.

நால்வருக்குப் பரிசு

■	1 அ	■	2 வ	3 டு	■
4 கு	ண்	ட	ல	கே	5 சி
■	ண	■	வ	■	கா
6 அ	த்	7 தா	ன்	■	■
8 மு	து	மை	■	■	9 சி
10 து	ரை	■	11 பூ	■	கை

தமிழறிவுப் போட்டி 7 இல் மொத்தம் ஐவர் கூப்பன்களைச் சரியாகப் பூர்த்தி செய்துள்ளனர். எனினும் அவர்களில் நால்வருக்கே $100ஐப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ளது. ஏனென்றால் ஒருவர் சரியாகக் கூப்பனைப் பூர்த்தி செய்திருந்தும் தமது பெயரையும், முகவரியையும் குறிப்பிட மறந்து விட்டார்.

இப்போட்டிக்கு மொத்தம் 5,647 கூப்பன்கள் முடிவு நாள் வரைக்கும் வந்தன. முடிவு நாளுக்குப் பிறகு வந்த 540 கூப்பன்கள் நிராகரிக்கப்பட்டன.

5,647 கூப்பன்களில் 2,305 கூப்பன்கள்,"ஆண்கள் இதை வளர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்துவார்கள்" என்னும் குறிப்புக்கு "மீசை" எனக் குறிப்பிட்டிருந்தனர். 1,589 பேர் "தாடி" என்றும் 1,708 பேர் "முடி" என்றும் எழுதியிருந்தனர். எங்களது முடிவுக்கேற்ப "சிகை" என்று ஐந்து பேர் குறிப்பிட்டிருந்தனர்.

பரிசு பெற்றவர்கள்:

1. ஸ்ரீ. மகாலிங்கம், 23, ஜாலான் புசார்,பத்து காஜா, பேராக்.

2. பாரதி கிருஷ்ணன், விண்டன் தோட்டம், (பிரிவு 4) ஸ்கூடாய், ஜொகூர்.

3. கே. காசிநாதன், 22,மெயின் ரோடு, அம்பாங், கோலாலம்பூர்.

4. க. உ. இளங்கோவன், 669-ஏ, ஜாலான் தம்பி ஒச்சில், பட்டர்வொர்த்.

எழுபத்து நான்காயிரத்து...

‘ஆவன்னா’

நையாண்டிமேளம்

பசுந்தமிழ்ப் பாவலர், கனித் தமிழ்க் காவலர், வியன் தமிழ் விளக்கு, குளிர்தமிழ்க் குன்று, களிதமிழ்க்கடல் என்றெல்லாம் தமிழ்கூறு நல்லுலகால் பாராட்டப் படுபவரும், தமிழ்-தமிழர்-தமிழ் இலக்கியம்-தமிழ்க்கலை- தமிழ்ப்பண் பாடு போன்ற பல்வேறு துறைகளில் பல்லாண்டுகள் ஆய்வுகள் பல செய்து துறை போகியவரும், நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆராய்ச்சிப் பெரும் பேரறிஞருமான பேராசிரியர் அருந்தமிழ் அழகனார் அவர்கள் அண்மையில் நம் நாட்டுக்கு வருகை புரிந்திருந்தார். அவர்தம் ஆய்வுகளின் பயனை அனைவரும் பெறல் வேண்டும் எனும் நோக்கில் நடத்தப்பட்ட சிறப்புச் சந்திப்பு:

✱ உலகில் தோன்றிய முதல் இனம் தமிழினம்தான் என்று கூறப் படுகிறதே, இது எந்த அளவுக்கு உண்மை?

நூற்றுக்கு நூறு உண்மை! "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி" என்னும் பாடல் ஒன்று போதுமே இதற்குச் சான்று பகர!



✱ நாம்தானே இப்படிச் சொல்லிக் கொள்கிறோம்; பிற இனத்தவர் இதை ஒப்புக் கொள்வதாகத் தெரியவில்லையே!

நமக்குப் பிறகு தோன்றிய பிற இனத்தினருக்கு நம்மினத்தின் தொன்மை வரலாறு எங்ஙனம் தெரியும்? அதனால்தான் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர் போலும்!

✱ "மனிதர்கள் குரங்கிலிருந்து தோன்றியவர்கள்" என்பது அறிஞர் டார்வினின் முடிவு. இது உங்கள் கருத்திலிருந்து முரண்படுகிறது அல்லவா?

எந்த முரண்பாடும் இல்லை. டார்வின் கூறிய அந்த முதற் குரங்குகள் தமிழ்க்குரங்குகளே! அவை தோன்றிய இடம் லெமூரியாக்கண்டம் எனப்படும் கடல் வாய்ப்பட்ட குமரிக்கண்டம். "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே" எனத் துவங்கும் பாடலில் "வாளோடு" என்னும் சொல், உண்மையில் "வாலோடு" என்றுதான் இருந்திருக்க வேண்டும். வாலோடு முன்தோன்றி மூத்த குடி, தமிழ்க்குடி. பூம்புகாரில் வாணிகம் செய்ய வந்த யவனர்கள், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனிடமிருந்து இந்தப்பாடல் அடங்கிய ஓலைச் சுவடியைப் பெற்று, டார்வினிடம் கொடுத்திருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டே அவர் தம்முடைய பரிணாமக் கொள்கையை நிறுவியிருக்கிறார்.



✱ உலகுக்கே நாகரிகம் கற்பித்தவர்கள் தமிழர்கள் என்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தமிழர்களாகிய நாம் கண்ணால் பார்க்கிறோம்; காதால் கேட்கிறோம்; வாயால் உண்கிறோம். எல்லா இன மக்களும் இப்படியே செய்கிறார்கள். வியக்கத்தக்க இத்தகைய ஒற்றுமை எங்ஙனம் உண்டானது என்று ஆராய்ந்தால், தமிழனே இப்பழக்கங்களை உலகம் முழுவதும் பரப்பினான் என்பது தெரியவரும். தமிழர்களின் அடிப்படைப் பண்பாட்டின் கூறுகளான இவற்றைப் பழகிக்கொண்ட பிற இனத்தவர்கள், நாளடைவில் தமிழரின் ஏனைய பண்பாட்டு முறைமைகளையும் கற்றுக்கொண்டார்கள். இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியத்தில் இதற்குச் சான்றுகள் உள்ளன.

✱ தொல்காப்பியம் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதா? ஏறத்தாழ ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகள் என்று சிலர் சொல்கிறார்களே!

தமிழ்ப்பகைவர்களின் முடிவு அது! எழுபத்தையாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழின் தொன்மையும் சீர்மையும் காணப் பொறாத குறைமதியாளர்தம் கூற்று அது!



பேராசிரியர் அருந்தமிழ் அழகனார்

✱ எழுபத்தையாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதா தமிழ்? மிகவும் அதிகமாய்த் தெரிகிறதே!

சரி, அப்படியானால் ஒரு நூறு ஆண்டுகளைக் குறைத்துக் கொள்ளலாம். தமிழின் காலம் எழுபத்து நான்காயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகள் என்பதில் ஐயமில்லை. தமிழிலிருந்துதான் உலக மொழிகள் யாவும் தோன்றின என்னும் உண்மையை நோக்குங்கால் இது தெள்ளென விளங்கும்.

✱ மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற ஒரு சில மொழிகள் தாம் தமிழிலிருந்து தோன்றின என்று பொதுவாகச் சொல்வார்கள். தாங்களோ, உலகிலுள்ள அத்தனை மொழிகளும் தமிழிலிருந்து தோன்றியவை என்கிறீர்களே!

மொழிகளின் அடிப்படை இயல்புகளை அறியாதவர்கள் மட்டுமே அங்ஙனம் கூறுவார்கள். தமிழ்,வாயால் பேசப்படுகிறது; கையால் எழுதப்படுகிறது. பிற இனத்தவர்களும் தமிழரைப் போலவே தத்தம் மொழியை வாயால்தான் பேசுகிறார்கள்; கையால்தான் எழுதுகிறார்கள். இவ்வொற்றுமையை ஊன்றி ஆராய்ந்தால், தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் உள்ள தொடர்பு விளங்கும். தமிழிலிருந்துதான் பிற மொழிகள் யாவும் தோன்றின என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமோ?

வழிகாட்டுகிறார் வள்ளுவர்

இன்று நாம் எடுத்துக் கொள்ளும் குறள், பொருட்பாலில் "கள்ளுண்ணாமை" என்னும் அதிகாரத்தின்கீழ் இடம் பெற்றிருக்கும் 926வது குறளாகும்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர் (926)

இந்தக் குறளுக்கு டாக்டர் மு. வ. எழுதியிருக்கும் தெளிவுரை வருமாறு:-

"உறங்கினவர் இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குவதால் நஞ்சு உண்பவரே ஆவர்"

"கள்ளைக் குடிக்காதே" என்று அறிவுறுத்த வேண்டிய கட்டாயம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே சமுதாயத்தில் இருந்திருக்கிறது என்பதையே வள்ளுவரின் இந்தக் குறள் புலப்படுத்துகிறது. "கள்ளுண்ணாமை" என்று தனி அதிகாரமொன்று எழுதிக் குடியின் தீமைகளை வள்ளுவர் எடுத்துக் காட்டியிருப்பதால் அந்தக் காலம் முதலே குடிப்பழக்கம் நம்மவர் இடையே பரவலாக வேரூன்றிவிட்டது என்று கருதவேண்டியிருக்கிறது.

குடிப்பழக்கம் தமிழ்ச் சமுதாயத்தில் மட்டுமின்றி உலகம் முழுவதும் ஆதிகாலம் தொட்டே நிலைபெற்று வந்திருக்கிற ஒரு தீமையாகும். தட்ப வெப்ப நிலையைப் பொறுத்தும் இந்தக் குடிப்பழக்கம் பல்வேறு நாடுகளிலும் ஆதிக்கம் பெற்றிருக்கிறது. குளிர்ச்சி மிகுந்த நாடுகளில் மக்கள் தங்களைக் கதகதப்பாக வைத்துக் கொள்வதற்கு மதுபானங்களை அருந்துகிறார்கள். வெப்ப நாடுகளிலும் தென்னங்கள் போன்ற பானங்கள் பழக்கத்தில் இருந்து வருகின்றன.

நஞ்சு! கவனம்!

இந்தக் குடிப் பழக்கத்தை நூற்றுக்கு நூறு விழுக்காடு அறவே ஒழிப்பது இயலாத காரியம் என்பதை மதுவிலக்கு அமுலில் இந்தியா கண்டு வருகிற தோல்விகள் மெய்ப்பிக்கின்றன. என்றாலும் குடிப்பழக்கம் மனிதனுக்குக் கேடு பயக்கின்ற பெரிய தீமை என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்கக் காரணமில்லை.

நமது சமுதாயத்தைப் பொறுத்தவரையில் குடிப் பழக்கம் குடியைக் கெடுக்கும் என்பது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நாம் நன்கு உணர்வோம். குடிப் பழக்கம் தனிப்பட்ட குடும்பங்களை மட்டுமன்றி நமது சமுதாயத்தையே உருத்தெரியாமல் சீர்குலைத்து வருகிறது என்பதும் வெளிப்படை, அதனால்தான் குடிகார சமுதாயம் என்னும் அவப்பெயரும் நமது நெற்றியில் ஒட்டப்பட்டுவிட்டது.

பல வசதிகளில் ஒன்று

சஞ்சிக் கூலிகளாக வெள்ளைக்காரர்கள் தங்கள் தோட்டங்களுக்கு நமது மக்களை அழைத்து வந்தபோது இங்கு நமக்குக் "கருணையோடு" செய்து கொடுத்த பல வசதிகளில் ஒன்றுதான் கள்ளுக்கடை. பெரும்பாலான தோட்டங்களில் தோட்ட முதலாளிகள் கள்ளுக்கடைகளை அமைத்துக் கொடுத்திருப்பதற்கு இதுதான் காரணமாகும். இந்தியாவில் இருக்கும்போது குடிப்பழக்கம் இல்லாதவர்கள் கூட இங்கே பக்கத்தில் கள்ளுக்கடை இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பீடைக்குச் சகவாச தோஷத்தினால் அடிமையாகிற சந்தர்ப்பமும் இதனால் ஏற்பட்டது. அடுத்தடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்களும் குடிப்பழக்கத்திற்குப் பரம்பரை பரம்பரையாக அடிமையாவதற்கும், தோட்டங்களிலுள்ள கள்ளுக்கடைகளின் பிரசன்னம் வழிவகுத்துக் கொடுத்தது.

தோட்டங்களில் மட்டுமின்றி எங்கெங்கு இந்தியத் தொழிலாளர்கள் அதிகமாக இருந்தாலும் அந்தப் பகுதிகளிலெல்லாம் கள்ளுக் கடைகளும் திறக்கப்பட்டு நடந்து வருவதையும் காணமுடியும். இங்குக் குடியேறிய இந்தியத் தொழிலாளர்களுக்குத் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள், கோவில்கள் முதலியவற்றை அமைத்துக்கொள்ளத் தோட்ட நிர்வாகங்களும், அரசாங்கமும் வசதி செய்து கொடுத்ததில் நியாயம் இருக்கிறது. ஆனால் கள்ளுக் கடையையும் இன்றியமையாத வசதியாகக் கருதி அதனையும் இந்தியத் தொழிலாளர்கள் வாழும் இடமெல்லாம் அமைத்துக் கொடுத்திருப்பது புரிந்து கொள்ள முடியாத புதிராகவே இருக்கிறது.

கள்ளுக்கடை இல்லாவிட்டால் இந்தியத் தொழிலாளர்கள் உயிர் வாழ முடியாது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கருதியது போலும்! ஆனால் பகாங் மாநில அரசாங்கம் இந்த பிரிட்டிஷ் பூச்சாண்டியைப் பொருட்படுத்தாமல் தனது மண்ணில் கள்ளுக் கடைகளுக்கு இடம் கொடுக்க மறுத்துவிட்டது! பகாங் மாநிலத்திலுள்ள தோட்டங்களிலும் மற்ற துறைகளிலும் இந்தியத் தொழிலாளர்கள் பலர் பணி புரிந்து வருகிறார்கள். கள்ளுக்கடை இல்லாத காரணத்தினால் அவர்களின் உயிருக்கு அபாயம் ஏதும் நேரிட்டு விட்டதாகவோ, அவர்களின் வாழ்க்கையில் கேடு விளைந்துவிட்டதாகவோ சொல்லுவதற்கில்லை. அப்படி இருக்கும்போது இந்தியத் தொழிலாளர்கள் வாழும் மற்றப் பகுதிகளில் கள்ளுக்கடை ஏன் அத்தியாவசியமான ஒரு தேவையாகக் கருதப்படுகிறதோ தெரியவில்லை!

அண்மையில் கெடா மாநிலத்தில் கள்ளுக்கடைகளை மூடுவதென்று அரசாங்கம் தீர்மானித்தது. ஆனால் கள்ளுக்கடைகளை அங்கு மீண்டும் திறக்க வேண்டுமென்று இந்திய சமூகத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. கள்ளுக்கடைகளை எடுத்துவிட்டால், குடிப்பழக்கம் உள்ளவர்கள் கள்ள சம்சுப் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுவார்கள் என்னும் அச்சமே இவ்வாறு கோரிக்கை வைப்பதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. இந்தக் காரணம் ஓரளவு உண்மையே ஆகும். சம்சு குடித்துச் சாவதைவிட கள்ளைக் குடித்து விட்டுச் சாக்கடையில் விழுந்து புரளுவது எவ்வளவோ மேல் என்பது உண்மையே.

கள்ளுக்கடை எவ்வளவோ மேல்

சம்சுவுக்கு "லாலாந்தண்ணி", "எரிதண்ணி", "உயிர்த்தண்ணி", எரிசாராயம் இப்படிப் பல பெயர்கள் உண்டு. குறைந்த விலையில், கள்ளைவிட மிகுந்த போதையைக் காட்டி இந்தியத் தொழிலாளர்களில் கணிசமான கூட்டத்தைச் சம்சு அரக்கன் நாடெங்கும் இப்போது சூறையாடி வருகிறான். மனிதனை உருக்குலைத்து, நடமாடும் பிணமாக்கி ஒன்றுக்கும் பயன்படாத சோதாவாக இந்த சம்சு மாற்றிவிடுவது கண்கூடு. சம்சு குடித்துப் பழக்கப்பட்டவர்கள் அந்தப் பழக்கத்திலிருந்து மீள்வது அபூர்வம்.

போதைப் பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களை மீட்பதற்குக் கையாளும் பெரும் முயற்சிகளையே சம்சுப் பித்தர்களை மீட்பதற்கும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. கள்ளச் சம்சு குடித்துவிட்டு ஈ எறும்பு போல் சாகின்றவர்களின் தொகையும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. இவ்வாறு சம்சுவினால் நேரிடுகிற தீமைகள், கள்ளினால் ஏற்படுகிற தீமைகளைவிடப் பன்மடங்கு பயங்கரமாக இருப்பதால்தான் "கள்ளுக்கடை எவ்வளவோ மேல், அது இருந்துவிட்டுப் போகட்டும்" என்னும் கருத்து சமூகத்தில் மேலோங்கி வருகிறது.

முருகு சுப்பிரமணியன்

சம்சுவை ஒழித்துக்கட்டுகின்ற செயல் திட்டத்தின் ஒரு கூறாகக் கள்ளுக்கடைகளின் தேவையை ஒரு சாரார் வலியுறுத்தி வருவதற்கும் இதுதான் அடிப்படை.

எப்படிப்பார்த்தாலும் சம்சுவை ஒழித்துக்கட்டு வதைப்போல கள்ளுக்குடியையும் ஒழித்துக்கட்டினால் தான் சமூகம் உருப்படும். சம்சு எமனாக இருப்பதால் கள்ளுக்கடையை நல்லபிள்ளை என்று கருதி மதிமயங்கி ஏமாந்து போகக்கூடாது. சம்சு, ஆதிக்கம் பெறுவ தற்கு முன்பே கள்ளுக்கடைகளினால்—குடிப்பழக்கத்தி னால் சீரழிந்த நமது குடும்பங்கள் ஏராளம். இன்றும் குடிப்பழக்கத்தால் சீரழிந்து வருகின்ற குடும்பங்கள் ஏராளம். குடும்பத் தலைவன் குடிகாரனாக இருக்கின்ற காரணத்தினால் எவ்வளவு வருமானம் வந்தாலும் உருப்படாமல் பரிதவிக்கின்ற எண்ணற்ற குடும்பங்களை யும் நம்மிடையே காணுகிறோம்.

கள்ளுக்கடைகள் மட்டுமின்றி பீர் கடைகள் போன்ற மற்ற மதுபானக்கடைகளும் நமது மக்களை இப்போது அதிகம் ஈர்த்து வருகின்றன. கள்ளுக் குடி யர்களைக் கூண்டோடு பீர் குடியர்களாகவும் "ஸ்டவுட்" குடியர்களாகவும் உருமாறுவதற்கும் இப்போது கடுமையான பிரச்சாரம் தகவல் சாதனங்கள் மூலம் நடைபெற்று வருகின்றது.

எல்லாச் சமூகங்களைச் சேர்ந்தவர்களும்தான் குடிக்கிறார்கள்; இந்திய சமூகம் மட்டும் குடிக்கவில்லை என்று சிலர் வாதாடக்கூடும். ஆனால், குடித்துவிட்டுத் தெருவில் புரள்கிற அளவுக்குக் குடியினால் அவமானத் -தை இந்திய சமூகம் மட்டுமே தேடிக்கொள்கிறது. அதுபோலவே குடிப்பழக்கத்தினால் குடும்பங்களின் உறவு நிலை மேம்பாடு, பிள்ளைகளின் படிப்பு முதலியவை இந்திய சமூகத்தில் பாதிப்படைந்திருக்கிற அளவுக்கு மற்ற சமூகங்களில் இருப்பதாகச் சொல்ல முடியாது.

மதுவிலக்குப் பிரசாரத்தையோ மதுபானக் கடைகளை மூடுகின்ற நடவடிக்கையையோ நாம் இங்கு மேற்கொள்ள முடியாது என்பது உண்மையே. ஆனால் நாம் குடிக்காமல் இருக்கலாம். நமது பிள்ளைகள் குடிக்காமல் தடுக்கலாம். குடிப்பழக்கத்தைச் சமூகத் திலிருந்து களைவதற்கு முடிந்தவரை ஒவ்வொருவரும் பாடுபடலாம். சம்சுக் கடைகளை அடையாளங் காட்டி அரசாங்க அதிகாரிகளுக்கு உதவி செய்யலாம். கள் ளுக்கடைகள் எங்களுக்குத் தேவையில்லை என்று மகஜர் கொடுத்து, அவற்றைத் தோட்டங்களிலிருந்தும், இந்தி யர்கள் வாழும் மற்றப் பகுதிகளிலிருந்தும் அப்புறப் படுத்தும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளலாம். கள்ளுக்கடைகளை எடுத்துவிட்டால் அடுத்த தலைமுறை மக்களையாவது குடிப்பழக்கத்திற்கு அடிமையாகாமல் காப்பாற்ற முடியுமல்லவா?

"கள்ளைக் குடிக்காதே" என்று சொல்வதற்கு வள்ளு வர் என்னென்ன காரணங்கள் கூறுகிறார்? "கள்ளும் நஞ்சும் ஒன்றுதான்; நஞ்சைக் குடித்தால் சாவாய், கள்ளைக் குடித்தாலும் அந்த கதிதான்" என்பது வள்ளு வரின் ஆணித்தரமான வாக்கு.

"குடிகாரர்களுக்குப் பெயர், புகழ் என்பதெல்லாம் இரா; அவமானம்தான் அவர்களுக்குச் சொத்தாக இருக் கும். குடித்து மதிமயங்கிக் கிடப்பவர்களைப் பார்த்துப் பகைவர்கள் பயப்பட மாட்டார்கள்; குடிகாரர்களை வெல்வது அவர்களுக்கு எளிது. பெரியோர்கள் அறிவாளிகள் ஆகியோரின் நெஞ்சத்தில் இடம் பெற வேண்டுமானால் குடிப்பழக்கம் கூடாது. நீ குடிகாரனாக இருந்தால் உன்னைச் சான்றோர்கள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள்; எண்ணிக்கூட பார்க்கமாட்டார்கள்."

மானம் மரியாதை

"தாயின் கருணை நெஞ்சங்கூட - பித்து மனங்கூட, பிள்ளை குடித்துவிட்டு ஆடுவதைக் கண்டால் பொறுத் துக்கொள்ளாது. பிள்ளையின் குடிப்பழக்கம் தாயின் ஈர நெஞ்சத்தையும் வேகவைக்கின்ற பேய்ப் பழக்க மாகும்.

குடிகாரனுக்கு நாணம், வெட்கம் என்பதெல்லாம் கிடையாது. அண்டை அயலவர்களால்-சுற்றி வாழ்பவர் களால் எள்ளிநகையாடப்படும் கேலிச்சித்திரமாக குடி காரன் மாறிவிடுகிறான்" - இவ்வாறெல்லாம் வள்ளுவர் கட்குடியின் கேடுகளை நம் நெஞ்சில் பதியும்படி எடுத் துக் காட்டுகிறார்.

வள்ளுவர் அன்று காட்டிய "கள்ளுண்ணாமை" என் னும் நல்வழி, இன்றும் நாம் பின்பற்றவேண்டிய சீரிய வழியாகும். குடிப்பழக்கம் மனிதனை மிருகத்தின் நிலைக்குத் தாழ்த்திவிடுகிறது என்பது காந்தியடிகளின் வாக்கு. உண்மையில் இந்தப் பொல்லாத குடிப் பழக்கம் நம் சமூகத்தின் மானத்தையும், மரியாதையை யும், அந்தஸ்தையும் ஒவ்வொரு நொடியும் கெடுத்து வருகிறது என்பது மிகையாகாது. நமது சமூகத்தின் அந்தஸ்து உயரவேண்டுமானால், மற்றவர்கள் மதிக்கத் தக்க சமூகமாக நாம் மிளிரவேண்டுமானால் கள்ளுக் கடைகளையும், சம்சு மடங்களையும் வலம் வந்து கொண்டிருக்கிற சமூகமாக நாம் இருக்கக்கூடாது.

"நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்னும் வள்ளு வரின் சொற்கள் நம் நினைவில் அழுத்தமாகப் பதியட் டும். வள்ளுவர் காட்டுகின்ற கள்ளுண்ணாமை நெறி, நமது வாழ்க்கை முறையாக அமையட்டும்.

> துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்
> எஞ்ஞான்றும்
> நஞ்சுண்பார் கள்ளுண் பவர்' (926)

இரட்டைப் பரிசு

மலேசியத் தமிழ் எழுத் தாளர் சங்கத்தின் ஜூலை/ஆகஸ்ட் மாதங்களுக்கான சிறுகதைத் திறனாய்வுக் கூட்டத்தில் ஜூலை/ஆகஸ்ட் மாதங்களின் சிறந்த கதைகளாகப் "புதிய சமுதாயம்" இதழில் வெளிவந்த சிறுகதைகள் தேர்வு பெற்றன.

ஜூலை மாதத்துச் சிறந்தகதை யாக "டுக்கா சித்தா" கதை தேர்வு பெற்றது. அது கெடா மாநிலத் தைச் சேர்ந்த திரு.எம்.ஏ. இளஞ் செல்வன் எழுதியதாகும்.

ஆகஸ்ட் மாதத்துச் சிறந்த கதையாக "முடிவு" என்ற கதை தேர்வு பெற்றது. திரு. மா இராமையா அதனை எழுதியிருந் தார்.

ஜூலை மாதக் கதைகளைத் திருமதி தீனரட்சகி ஆய்வு செய் திருந்தார். ஆகஸ்ட் மாதக் கதை களைத் திரு. எம்.குமார் ஆய்வு செய்தார்.

எழுத்தாளர் சங்கம் திறனாய் வுக் கட்டுரைகளைப் படைக்கும் ஆய்வாளர்களுக்கும் தலா $ 30 வழங்குவதென முடிவெடுத்து அவ்வாறே கருத்தரங்கின்போது வழங்கவும் செய்தது. பரிசு பெற்ற கதைகளுக்குத் தலா $ 50 வழங்கப் படும்.

இக் கருத்தரங்கம் கடந்த 9-10-77ஆம் நாள் பிலால் உணவ கத்தில் வழக்கறிஞர் டி.பி. விஜேந் திரன் தலைமையில் நடந்தது.

இந்த ஆண்டு நடைபெற்ற ஜனவரிமுதல் ஆகஸ்ட்முடியஎட்டு மாதங்களுக்கான சிறுகதைக் கருத் தரங்குகளில் புதிய சமுதாயத்தில் வெளிவந்த நான்கு கதைகள் நான்கு மாதங்களுக்கான பரிசு களைப் பெற்றுள்ளன. அவற்றுள் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை தொடர்ந்து மூன்று மாதங்களுக்குரிய பரிசுகள் புதிய சமுதாயத்தின் கதைகளுக்கே கிடைத்துள்ளன என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

ஜூன் மாதக் கதையான 'சப தம்' திரு பாதாசன் எழுதிய கதை யாகும். ஜூலை மாதக் கதையான "டுக்கா சித்தா"வும், ஆகஸ்ட் மாதக் கதையான "முடிவு"ம் முறையே திரு.எம். ஏ. இளஞ்செல்வன், திரு மா. இராமையா ஆகியோரால் எழுதப்பட்டவை. ஏப்ரல் மாதத் தில் பரிசுபெற்ற "தேவை" சிறு கதையை எழுதியவரும் திரு. மா. இராமையா அவர்களே.

கலையுலக

பரிதாமணாளன் வினா-விடை

எஸ். கோவிந்தராஜு, பினாங்கு

கே: "பத்ரகாளி" கதை என்ன? அது எப்போது இங்கு வரும்?

ப: மனைவியின் புத்தி சுவாதீனமான நிலையைப் போக்க எடுத்துக்கொண்ட முயற்சியில் தோல்வி காண்கிறான் கணவன். பின்னர் விவாகரத்து நடக்கிறது. இதன் பின்னர் வற்புறுத்தலின் காரணமாக இரண்டாவது திருமணம் செய்துகொள்கிறான். இவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. இந்த நிலையில் முதல் மனைவியின் மனநிலை சரியாகி விடுகிறது. தன் மனநிலை சரியில்லாத போது தன்னால் தன் குழந்தை இறந்ததையும் தான் விவகாரத்து செய்யப்பட்டு விட்டதையும் அறிகிறாள். பின் விவாகரத்து செய்துவிட்ட கணவரைச் சந்திக்கிறாள்... இப்படி கதை நீளுகிறது. "மகரிஷி"யின் சுவையான நாவலை அழகாகப் படமாக்கியிருக்கிறார்கள். இப்படம் இங்கு விரைவில் திரையிடப்படவிருக்கிறது.

எம். சாமிக்கண்ணு, டென்னிஸ் டவுன் தோட்டம், பாரிட்புந்தார்

கே: சிவாஜி நடித்த "தீபம்" தலைநகரில் ஓட்டம் எப்படி?

ப: சிவாஜியின் தரமான நடிப்பைத் தாங்கிவந்த "தீபம்" இங்கு நல்ல வெற்றியைக் கண்டது.

குமாரி நிர்மலா கண்ணன், செமினி

கே: பரிதாமணாளன் அவர்களே, உங்கள் பெயரைப் பார்த்தால் பரிதாபமாக உள்ளது. நேரில் உங்களைப் பார்த்தேன்; அழகாக இருக்கிறீர்கள். ஏன் பரிதாபமான பெயரைச் சூட்டிக்கொண்டீர்கள்?

ப: பெயர் வைத்துக்கொண்டபோது குஷியாகத்தான் இருந்தது. இப்போது தான் பரிதாபமாக இருக்கிறது. இடையில் நடந்த கதையைக் கேட்டுவிடாதீர்கள். அது சுவைக்கும்படி இருக்காது.

தாரா எழிலழகன், சுங்கைவே

கே: சினிமா உலகில் மிக விரைவில் முன்னுக்கு வருபவர்கள் இசையமைப்பாளர்களா, பாடலாசிரியர்களா, நடிகர்களா?

ப: நடிகைகள்தான் மிக விரைவில் 'முன்னுக்கு' வருவது தெரிகிறது.

கே: சினிமாக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள் அடிக்கடி இங்கு வருவது எதைக் காட்டுகிறது?

ப: அவர்கள் அங்கு "பிசி"யாக இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. ஆனால் சிலர் தண்ணி போட வருவதாகச் சொல்கிறார்கள். நமக்கு எதற்கு அந்த வம்பு? "தண்ணி" போட நாமா காசு கொடுக்கிறோம்!

கே: கவியரசு கண்ணதாசனிடம் உள்ள சிறப்பு அம்சம் என்ன?

ப: ஒளிவு மறைவு என்பதைக் காண முடியாது. எதையும் "பச்சை"யாகச் சொல்லிவிடுவதுதான் கவியரசுவின் தனிச்சிறப்பு.

கே: நீங்களும் நடிகை அங்கமுத்துவும் ஒரு படத்தில் நாயகன்-நாயகியாக நடிக்கக் கனவு கண்டேன். இது பலிக்குமா?

ப: அங்கமுத்து மிகவும் ஒல்லியாக இருந்ததால் குண்டு கருப்பையாவிடம் தள்ளிவிட்டு நான் ஒதுங்கிக்கொண்டேனே - இதை நீங்கள் கனவில் காணவில்லையா!

எல். சுலோசனா, சிரம்பான்

கே: "மீனவ நண்பன்" வெற்றிப் படமா?

ப: "உடன்பிறப்பே", "ரத்தத்தின் ரத்தமே", "துப்பாக்கியாலே சுடப்பட்ட சம்பவம் எனக்கு முன்பே உண்டு!" போன்ற வசனங்களைக் கொண்ட இப்படம் ஸ்ரீதருக்குப் பெருந்தோல்வியாகும்.

எம். தங்கவேலு, ஈப்போ

கே: தமிழ்ப்படங்களில் ஏன் புதுமையைக் காண முடிவதில்லை?

ப: "டைட்டில்ஸ்" இல்லாமல் வெளியிட்டிருக்கிறார்களே "சொர்க்கம்-நரகம்" படத்தை! இது புதுமை இல்லையா?

டி. கே. ஆறுமுகம், சுங்கை கிளா (பெல்டா)

கே: தமிழகத்திலிருந்து இங்கு வரும் கலைஞர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே உரையாடுவதைப் பெருமையாகக் கருதுகிறார்களே, ஏன்?

ப: தங்களுக்கு ஆங்கிலமும் தெரியும் என்று காட்டிக்கொள்ள விரும்புகிறார்கள். தமிழர்களிடம் தமிழில் பேசுவதே பெருமை என்பதை அவர்கள் உணர்வார்கள் என்று நாம் நம்பவில்லை.

சா. ராஜேஸ்வரன், நார்த் ஹம்மக் தோட்டம், கிள்ளான்

கே: எம். ஜி. ஆருக்குச் சிலை வைப்பார்களா?

ப: வைக்கமாட்டார்கள் என்று எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்?

கே. ஆர். சாரதா, பாரிட்புந்தார்

கே: நடிகை மஞ்சுளாவுக்கு எத்தனை வயது?

ப: நடிகைகள் பிறந்த தேதியையும் மாதத்தையும் தான் கூறுவார்கள். வருடத்தைச் சொல்வதில்லை.

"ஆர்வி" ஜெயா, சுங்கை

கே: மலேசிய நடிகர்களைக் கொண்டு இந்தியாவில் திரைப்படம் எடுக்கும் முயற்சி எதுவரை வளர்ச்சி கண்டுள்ளது?

ப: கிணற்றில் போட்ட கல்லைப்போல் அது இருக்கிறது. எந்தவிதத் தகவலையும் பெறமுடியவில்லை.

அகமட்ஷா, பாரிட்புந்தார்

கே: இப்பொழுதெல்லாம் தமிழ்ப்படங்களில் ஆபாச நடனங்களைப் புகுத்தியிருக்கிறார்களே. இதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: இந்திப்படங்களில் வரும் "ஆட்டங்களை"ப் பார்க்கும் போது இது எவ்வளவோ தேவலாம் என்று தோன்றுகிறது.

வி. இராமசாமி, கோலாலம்பூர்

கே: இளையராஜா குழுவினருடன் வந்திருந்த டி. எம். சௌந்தரராஜனின் இசை நிகழ்ச்சி எப்படி இருந்தது?

ப: இசை நிகழ்ச்சி நன்றாகத்தான் இருந்தது. நான் பார்த்த அன்று சௌந்தரராஜன் சூட்டும் கோட்டும் அணிந்துகொண்டிருந்தார். பாடலின் பொருளிற் கேற்றவாறு அவர் சைகை காட்டியது நன்றாக இருந்தது. "எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி, அங்கே எனக்கோர் இடம் வேண்டும்" என்ற பாடலைப் பாடும்போது 'அங்கே எனக்கோர் இடம்வேண்டும்' என்ற வரிக்கு ரசிகர்கள் அமர்ந்திருந்த இடத்தைச் சுட்டிக்காட்டினார். ரசிகர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் கைதட்டினர். இசை நிகழ்ச்சியின் இடைவேளையின் போது முன் வரிசையில் உட்கார்ந்திருந்தவர்களுடன் அவரும் வந்து உட்கார்ந்துகொண்டு சாதாரணமாக உரையாடிக்கொண்டிருந்தார். பெரிய பாடகராக இருந்தும் இப்படித் தாராளமாக வந்து பழகியது-பேசியது அவருடைய நல்ல குணத்தைக் காட்டுவதாக இருந்தது.

இவற்றையும்...



"நம் கலைநிகழ்ச்சிகள்" எனும் கட்டுரையை எழுதிய வி. கே. பதி, இப்பொழுது பெரும்பாலான கலை நிகழ்ச்சிகளில் மாலை அணிவிப்பை ஓர் அங்கமாக வைத்திருப்பதையும், அரசியல்வாதிகளை அழைத்து அவர்களது பேச்சின் மூலம் கலை மேடையை அரசியல் மேடையாக்கி விடுவதையும் குறிப்பிட்டிருக்கலாம்.

பெட்டாலிங், சிலாங்கூர் ஆர். பழனியாண்டி

என்ன சோதனை ...

அண்மைக் காலமாகப் "புதிய சமுதாயம்" குறிப்பிட்ட தேதியில் கிடைக்காமல் தாமதித்து வருவது என்ன சோதனையோ?

சுங்கை வே, சிலாங்கூர் தாரா எழிலழகன்

வெகுவாக......

"முருங்கைக் கேளுங்கள்" பகுதியில் வரும் பதில்கள் அதிகம் சிந்திக்க வைக்கின்றன. வாசகர்களின் மனம் நோகாமல் பதில் அளிக்கும் விதம் என்னை வெகுவாகக் கவர்கின்றது.

பாமோல். குளுவாங் ஏ. எஸ். சிவநேசன்

மனப்பூர்வமான......

"புதிய சமுதாயம்" இதழில் வெளிவந்த என் "டுக்கா சித்தா" சிறுகதை, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஜூலை மாதத்திய திறனாய்வில் பரிசு பெற்றதை எண்ணி மகிழ்ச்சியடையும் இவ்வேளையில் அக்கதை உருப்பெறுவதற்குக் காரணமாய் இருந்த "புதிய சமுதாயத்திற்கு" மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுங்கைப்பட்டாணி, கெடா எம். ஏ. இளஞ்செல்வன்

மேன்மேலும்.....

"புதிய சமுதாயத்தை" என் மலேசிய நண்பர் ஒருவர் மூலம் பெற்றுப் படித்து வருகிறேன். தென் இந்தியாவிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளைப்போல இதழ் தரமாக இருக்கின்றது. மேன்மேலும் வளர என் வாழ்த்துக்கள்.

யாழ் நகர், ஈழநாடு கு. லோகன்

நடப்புகளை... ..

பதின்மூன்றாவது இதழின் அட்டைப்படம் தீபாவளியை ஞாபகப்படுத்தியது. இரு சிறுகதைகளும் இரு வேறு கோணங்களில் இன்றைய நடப்புக்களை எடுத்துக் காட்டின. ஏனைய சிறப்பு அங்கங்களாக கவிதைகள், அமைந்திருந்தன.

ஜெரம், சிலாங்கூர் மு. இலட்சுமணன்

காரணம்......

"புதிய சமுதாயம்" எங்கள் பகுதிக்குக் கால தாமதமாகவே கிடைக்கின்றது; காரணம் என்னவோ?

கூலிம், கெடா திருமதி இராசேசுவரி

கிடைத்தால் ...

இம்முறை தமிழறிவுப் போட்டியில் பரிசு எனக்கு கிடைக்க வகை செய்வீர்களா? நானோ வேலையின்றி இருக்கின்றேன். கைச்செலவுக்கு அந்தத் தொகை உதவி செய்யக்கூடும். கிடைத்தால் என் கவலைகள் தீரும்.

சுங்கைப்பட்டாணி பெ. அரிகிருஷ்ணன்

பெரிதும்......

புதிய சமுதாயத்தில் வெளிவரும் சிறுகதைகளே பெரும்பாலும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பரிசுகளைப் பெற்று வருவதைக் கண்டு பெரிதும் மகிழ்கிறேன்.

மிக ஆழமான ஆய்வுக்குப் பின், தரமான நல்ல சிறுகதைகளை மட்டுமே புதிய சமுதாயத்தில் பிரசுரித்து வருவது, தரமற்ற சிறுகதைகளின் ஆதிக்கம் மேலோங்கி விடாமல் தடுக்கக் கையாளுகின்ற நல்லதோர் இலக்கியப் பணியாகும்.

சொர்டாங், சிலாங்கூர் எல். முத்து

நன்றி கூற... ..

"பால்மரக் காட்டினிலே" பன்னிரண்டாவது அத்தியாயத்தைப் படித்ததும் என் கண்கள் கலங்கிவிட்டன. காரணம்...? சயாமிற்கு ரயில்பாதை போடச் சென்ற என் அன்புத் தாத்தா திரும்பவே இல்லை; அங்கேயே காலனுக்குப் பலியாகிவிட்டார். தோட்டப் புறத்தை மையமாக வைத்து அருமையாக எழுதிவரும் அகிலனுக்கு நன்றி கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோல்கொண்டா தோட்டம், காப்பார் எல்விஸ் சேகர்

தகுதி

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும் – சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர்.

அமரர்கள் சூழ்ந்து சென்று தலைவணங்கித் துதிக்கின்ற சிறப்பமைந்த திருப்பெருந்துறையானை நன்கு வணங்கித் துதிக்கின்றவர்கள், உலகில் பயனுற வாழ்ந்தவர்களும், வலிதான வினையினைத் தொலைப்பவர்களும், உலகனைத்தும் வணங்கி வாழ்த்தத் தகுதி பெறுகின்றவர்களும் ஆவார்கள்.

—திருவாசகம் 48: 4

கனவுகள் பல கோடி

'மாங்கனி'



23. 'சொல்வது ஒன்று செய்வது ஒன்று'

"நீங்கள்தான் வனிதாவின் தந்தையென்று நினைக்கிறேன்...! என் யூகம் சரியானது தானே?"

கணீரென்ற குரலில் தெளிவாக ஆங்கிலத்தில் நாசூக்காக வினவிய தாடிக்கார இளைஞனை மேலும் கீழுமாகப் பார்த்தார் வனிதாவின் தந்தை.

வனிதாவை ஸ்கூட்டரில் ஏற்றிக்கொண்டு ஊரைச் சுற்றுகிறவன் இவனாக இருக்குமோ?

ஆளைப் பார்த்தால் சோற்றுக்குத் தாளம் போடுகிறவன் மாதிரியில்லையே? என்னவோ பெரிய இடத்துச் செல்லப்பிள்ளை போல ஸ்டைலாகக் காணப்படுகிறானே!

அவர் சிந்தனை நீண்டுகொண்டே போயிற்று! கண்கள் மட்டும் அவனை எடைபோட்டுக்கொண்டிருந்தன.

"என் பெயர் நவீன்!"

அவன் வலிய தன்னை அறிமுகம் செய்துகொண்டான். அவன் கோபி அல்ல என்பது தெரிந்ததும் இலேசாகச் சிரித்துவைத்தார் மரியாதைக்காக.

இப்போது அவனுக்கு இன்னும் கொஞ்சம் துணிவு பிறந்தது.

"சனி, ஞாயிறு போன்ற நாட்களில் பெரும்பாலும் அவர்கள் வெளியே போய்விடுவார்கள்!...ம்... நீங்கள் அறிவித்துவிட்டு வரவில்லையா?" அவன் பேசும் தொனியிலிருந்து ஓரளவு ஆளை எடைபோட்டுக்கொண்டவர் போல மெல்லத் தொண்டையைக் கனைத்துக்கொண்டார்.

"நீ எங்கும் போவதில்லையா? உனக்கு வனிதாவைப் பற்றி நிறைய தெரியும் போலிருக்கே!"

"ஆமாம் சார்! நான்தான டெலிபோன் செய்தவன்!" அவன் குரலில் பொதிந்து கிடந்தது உண்மையான அனுதாபமா, அல்லது கேலியா என்பதை உணர்ந்துகொள்ளும் நிலையில் அவர் மனநிலை இல்லை.

மெல்லத் தலையைத் திருப்பி இந்துமதியைப் பார்த்தார். அவள் அந்தக் கிழவியிடம் மேலும் விவரம் தெரிந்துகொள்ளப் பேச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

"நீ டெலிபோன் செய்யவேண்டிய அவசியம் என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டுமே?"

அவன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஒரு விநாடி திகைத்து நின்று, பின் சமாளித்துக்கொண்டான்.

"என்ன சார், இப்படிக் கேட்டுவிட்டீர்களே! ஒரு உலகம் தெரியாத இளம் பெண்ணை, அதுவும் பெரிய இடத்துப் பெண்ணை ஒரு போக்கிரிப் பயல் ஏமாற்றித் தன் வலையில் சிக்க வைத்துக்கொண்டிருக்கிறான் என்பதைப் பார்த்துக்கொண்டும் சும்மா இருக்க மனம் இடம் தருகிறதா?"

அவர் சட்டென்று அவன் தோளில் தனது வலுவான கரத்தால் ஓர் அழுத்து அழுத்தினார்.

"அவன் போக்கிரி என்று எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாய்?" அவன் கொஞ்சம் நிலைதடுமாறினான்.

"சார்! வந்து... வந்து... அவன் நல்லவனில்லை"

"அதைத்தான் கேட்கிறேன்! எப்படி உன்னை நான் நம்புவது?"

அவன் இப்போது கொஞ்சம் சுதாரித்துக்கொண்டான். "அந்தக் கோபியைப் பற்றி அறிந்தவர்களுக்குத்தான் இது தெரியும்! நல்ல அழகான, வசதியுள்ள பெண்களைப் பார்த்தால் விரட்டிக்கொண்டே திரிவான்! அந்தப் பெண்களும் எப்படிப்போ இவன் வலையில் விழுந்துவிடுகிறார்களே! அதுதான் எனக்கும் வியப்பாக இருக்கிறது!"

"ம்.. நான் கேட்டதற்கு இன்னும் சரியான பதில் சொல்லவில்லையே...?"

"இதைவிட இன்னும் எப்படி விளக்கமாகச் சொல்ல வேண்டும்! நீங்கள் வனிதாவோடு இருந்தால் நான் இதைப்பற்றி நினைத்திருக்கக் கூட மாட்டேன்! பாவம்! தூரத்திலிருந்து வந்து தனியாகப் படித்து வரும் ஓர் இளம் பெண் வீணாக இவனை நம்பிக் கெட்டுப்போகிறாளே என்று பரிதாபப் பட்டுத்தான் டெலிபோன் செய்தேன்! இது தவறு என்று நினைக்கிறீர்களா...?"

"ஓ...அப்படியா? நல்ல காரியந்தான்.. ?"

"அவன் உங்கள் பெண்ணுக்கு ஏற்றவனாக, அட ஒரு நல்லவனாக இருந்திருக்கக் கூடாதா? அப்படியிருந்திருந்தால் ஏன் கவலைப்படப் போகிறேன். போயும் போயும் ஒரு அயோக்கியனிடம் அல்லவா ஏமாறப் போகிறாள்..." பேசிக்கொண்டே அவரை ஊன்றிப் பார்த்தான். முகம் விகாரமாக மாறிக் கொண்டிருப்பதை அவனால் எளிதில் கண்டு கொள்ள முடிந்தது!

"சார்! என்னவோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லிவிட்டேன்! அப்புறம் உங்கள் விருப்பம்! நான் இப்படிச் சொன்னது தவறு என்று எண்ணினால் என்னை மன்னித்து விடுங்கள். ஆனால் பின்னால் வருந்தப் போவது நீங்கள்தான் என்பதை மட்டும் நினைவில் வைத்துக்கொண்டால் போதும்; வருகிறேன்!"

நன்றாகப் பற்றவைத்து விட்டோம் என்ற மகிழ்ச்சியோடு நழுவிக்கொள்ள விரும்பினான் நவீன்.

"தம்பி! கொஞ்சம் நில்! நீ யார்? எங்கிருக்கிறாய் என்றுகூட சொல்லவில்லையே...? அதற்குள் புறப்பட்டு விட்டாயா...?"- அவர் தன் உணர்ச்சிகளைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார்.

நவீன் நின்று அவரைத் திரும்பிப் பார்த்தான்.

இவ்வளவு சொன்ன பிறகும் நிதானமாக, அமைதியாக நிற்கும் இவரைப் போயா மிகவும் பொல்லாதவர், முன்கோபக்காரர் என்றெல்லாம் லல்லி எச்சரிக்கை செய்தாள் என்று தனக்குள் எண்ணி வியந்தபடியே அவர் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலோடு முகத்தைப் பார்த்தான்.

"எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா...?"

"சொல்லுங்கள் சார்! என்னால் முடிந்தால் நிச்சயம் செய்வேன்!" நவீனுக்கு ஆனந்தம் பொங்கியது. வனிதாவின் தந்தையல்லவா தன்னிடம் உதவி கேட்கிறார்?

"உனக்குத்தான் வனிதாவை நன்றாகத் தெரிந்திருக்கிறதே. அவளுடையே சிநேகிதி லல்லி என்று ஒருத்தி இருப்பாளே..."

அவர் முடிப்பதற்குள் முந்திக் கொண்டு குறுக்கிட்ட நவீன் "லல்லியா! ஓ... தெரியுமே! அவள் எங்கள் அத்தையின் மகள்தான்!" என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

"அடடே! மிகவும் நல்லதாய்ப் போயிற்று! அவள் எங்கே தங்கி இருக்கிறாள் என்று காட்டினால் நல்லது!"

"ஓ... தாராளமாக! வாருங்கள் காட்டுகிறேன்!" குதூகலத்தோடு திரும்பிய நவீன் காருக்குப் பக்கத்தில் ஒய்யாரமாகச் சாய்ந்து நிற்கும் லல்லி

யைப் பார்த்ததும் திடுக்கிட்டுத் திகைத்து நின்ருன்.


"சார்! இதோ லல்லியே வந்து விட்டாள்! நான் வரட்டுமா..." விரைவாக மோட்டார் சைக்கிளை நோக்கி நடந்தவனை வழிமறைப்ப தைப் போல் எதிரில் வந்து நின்ருள் லல்லி.

"அதற்குள் போய்விட்டால் எப்படி? இருந்து சன்மானம் வாங்கிக்கொண்டு போகவேண்டாமா...?" குதர்க்கமாக இப்படிக் கேட்ட லல்லி நவீனை எரித்துவிடுபவள் போலப் பார்த்தாள்.

எதற்கும் அஞ்சாத நவீன்கூட சற்று அதிர்ந்து போய்விட்டாள்.

24. "சொல்லாதே இது போலே"

"வா லல்லி! நல்ல சமயத்தில் வந்தாய்! உன்னைத் தேடி வரத்தான் நினைத்தேன்! நீயே வந்துவிட்டாய்!"



வனிதாவின் தந்தை சற்று ஆறுதலோடு அவளைப் பார்த்து இப்படிக் கூறினர். வலிய பரவசமுழுத்தது போல அவர் முகத்தில் ஒரு புன்னகை நெளிந்து மறைந்தது.

"நான் நல்ல சமயத்தில் வருவது தான் வழக்கம் மாமா!" இரு பொருள்பட இப்படிக் கூறிய லல்லி நவீனை ஒரு பார்வை பார்த்தாள். இனிமேல் இங்கே நின்ருல் இவள் குட்டை உடைத்து விடுவாள் என்று தெளிவாகப் புரிந்து போய்விட்டதால் நவீன் சடக்கென்று மோட்டார் சைக்கிளில் தாவி ஏறினன்.

"சொல்லவேண்டியதெல்லாம் சொல்லிவிட்டாயா...? இன்னும் ஏதேனும் மிச்சம் உண்டா...?" லல்லியின் விஷம் தோய்ந்த சொற்கள் உடலில் அசுரத்தனமாகப் பாயவே, திகிலடைந்த நவீன் மேலும் ஒரு விநாடிகூட அங்குத் தாமதிக்க விரும்பாமல் காற்ருகப் பறந்துவிட்டான்.

என்ன நடக்கிறது என்பதே புரியாமல் லல்லியை வெறித்துப் பார்த்தபடி செயலற்று நின்றிருந்தார் வனிதாவின் தந்தை.

லல்லி அவர்கள் பேசிக்கொண்டதை முழுமையாகக் கேட்கவில்லை என்ருலும் நவீன் என்ன சொல்லி இருப்பான் என்பதை மட்டும் யூகித்திருந்தாள்.

வனிதாவின் பெற்ருேர் திடீர் என்று வந்ததற்கு ஏதேனும் காரணம் இருக்குமா? அல்லது வெறுமனே வந்திருப்பார்களா என்பதை மட்டும் அவளால் அறிய முடியவில்லை!

அவர்கள் வரப்போவதாக வனிதாவும் சொல்லவில்லை. அது அவளுக்கே தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஏனெனில் தெரிந்திருந்தால் அவள் வெளியே போயிருக்க மாட்டாளே!

அவர் முகம் எப்படியோ மாறிக் கிடந்தது. எல்லாம் இந்த நவீனின் விஷமத்தனத்தால் ஏற்பட்டதாகவே இருக்க வேண்டும்!

அவன் என்னென்ன உளறி வைத்தானே? லல்லிக்கும் மனதிற்குள் உதைப்புத்தான்! என்ருலும் வெளியே அதைக் காட்டிக்கொள்ளவில்லை.

ஏதாவது பேசியாக வேண்டுமே என்று தவித்தாள்.

"வனிதா எங்கே போயிருக்கிறள் என்று உனக்காவது தெரியுமா?"

"வந்து...ம் அவள் நெருங்கிய தோழி எலீஸ் என்று ஒரு சீனப் பெண் இருக்கிறள்! அவளைப் பார்க்கப் போயிருப்பாள் என்று நினைக்கிறேன் ...

"நினைக்கிருய்...! நிச்சயமாகத் தெரியாது இல்லையா?" அவர் கோபமாகக் கேட்கிருரா அல்லது சாதாரணமாகக் கேட்கிருரா என்று லல்லிக்குப் புரியவில்லை!

"உன்னேடுதான் வெளியே போவதாகவும் உன்னைத்தவிர வேறு யாரும் நெருங்கிப் பழகுபவர்கள் இல்லையென்றும் வரிக்கு வரி விடாமல் கடிதம் எழுதுவாளே! இப்போது உனக்கே தெரியாமல் போக ஆரம்பித்து விட்டாளா?"

லல்லிக்குச் சுரீர் என்றது. நவீன் எல்லாவற்றையும் சொல்லி விட்டானே என்று திகிலடைந்தாள்.

"இல்லை மாமா! அப்படியொன்றுமில்லை! என்னையும் வரும்படி நேற்றே கூப்பிட்டாள்! நான்தான் மாமாவைப் பார்க்கப் போக வேண்டும் என்று கூறிவிட்டேன்! இல்லாவிட்டால் நானும் போயிருப்பேன்!"

"ஏன் உன்னேடு அவளையும் அழைத்துப் போயிருக்கக் கூடாதா? அங்கே அவள் வரக்கூடாதா?"

அவரும் விடாமல் அவள் வாயைக் கிளறினர்.

"அப்படியொன்றுமில்லை! அவளுக்கு அங்கே வரப்பிடிக்காது! அதனால்தான் அவள் வேறு எங்கும் கூடப் போவதில்லை!"

"ஏன் உன்னோடு வரக்கூடவா பிடிக்காது?"

"என்னோடு வர ஆசைதான்! ஆனால் மாமா வீட்டுக்கு வரவே அவளுக்குப் பயம்!"

"ஏன் அப்படி...? உன் மாமா பொல்லாதவரா?"

"இல்லை இல்லை! மாமா நல்லவர்தான்! மாமாவின் அருமைப் பிள்ளையொன்று அங்கே இருக்கிறது! நீங்கள் கூட பார்த்திருக்கலாம் சற்றுமுன்! அவன் தான்! அவனைக் கண்டாலே அவளுக்கு நடுக்கம். அதனால்தான் வரமாட்டாள்.."

"நவீனைப் பற்றியா சொல்கிறாய்? நல்ல பிள்ளை மாதிரி இருக்கிறானே"

"எல்லாம் பார்த்தால் நல்ல மாதிரிதான்! பழகினால் அல்லவா குணம் தெரியும். ஊரைச் சுற்றித் திரிவதே அவனுக்கு வேலை!"

"அதனால்தான் எல்லா விஷயமும் தெரிகிறது!" அவர் அழுத்தமாகவே இப்படிச் சொன்னார். லல்லி அவரைக் கலவரத்தோடு நிமிர்ந்து நோக்கினாள்.

"அதுசரி! வனிதா இப்படித் தனியாக வெளியே போக எப்போது கற்றுக் கொண்டாள்...?"

அவர் விஷயத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை மாமா, எப்போதாவது ஒருதரம். அதுவும் சில நாட்களாகத்தான்..."

"அதாவது கோபி என்பவனுடன் பழக்கம் ஏற்பட்டதிலிருந்து. அப்படித்தானே?"

லல்லி திடுக்கிட்டுப் போனாள். அவளுக்குப் பேச நா எழவில்லை.

"ஏன் லல்லி பேசாமல் நிற்கிறாய்? எனக்கு எப்படித் தெரியும் என்று ஆச்சரியப்படுகிறாயா...?

"மாமா...! வந்து...!"

"எல்லாம் எனக்குத் தெரியும்! எதையும் மறைக்காதே...!" அவருக்குத் தெரிந்துவிட்ட விஷயத்தை இனி மறைப்பதில் பயனில்லை. எனவே ஏதாவது நல்லவிதமாகச் சொல்லி ஆறுதல் படுத்த வேண்டியதுதான்.

"மாமா! நீங்கள் நினைப்பது போல் வனிதா தவறு ஏதும் செய்து விடவில்லை! அவள் கோபியோடு சாதாரணமாகத்தான் பழகுகிறாள்!"

"எப்படி? ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டு அவனோடு ஊர் சுற்றுவது-சினிமாவுக்கு போவது, பீச்சிக்குப் போவது இப்படியெல்லாம் செல்வதுதான் சாதாரணப் பழக்கம் என்று என்னை நம்பச் சொல்கிறாயா?

அவர் குரலில் சூடு பிடித்தது. லல்லிக்கும் இப்போது துணிச்சல் பிறந்துவிட்டது.

"மாமா! வனிதா உங்கள் பெண்! அவளைப்பற்றி நம்புவதும் நம்பாததும் உங்களைப் பொறுத்தது! ஆனால் இந்த நவீன் சொன்னதைக் கேட்டுக் கொண்டு வினைக் கலையா ஆத்திரமோ கொள்ளாதிர்கள் என்றுதான் சொல்கிறேன்! ஏனென்றால் கோபி மிகவும் நல்லவர்! கண்ணியமானவர்! அவரைப் பற்றிப் பேசக்கூட அருகதையில்லாத அயோக்கியன் நவீன் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள் !"

"கோபி நல்லவன் என்பதால் ஒரு வயது வந்த பெண் அவனோடு ஊரைச் சுற்றலாம் என்கிறாயா...?"

"அப்படி நவீன் உங்களிடம் சொன்னானா? ஹூம்! அந்த நவீனிடம் தன்னந்தனியாக மாட்டிக் கொண்டு நின்றபோது அவளை மீட்டுக்கொண்டு வந்தவர் கோபியல்லவா? அந்த ஆத்திரத்திற்கு இப்படிப் பழி தீர்த்துக்கொள்கிறான் போலும்! அவனைத்தான் நல்லவன் என்று நீங்களும் நம்புகிறீர்கள்...!"

"லல்லி!" அவர் போட்ட அதட்டலைக் கேட்டு லல்லி வாயடைத்து நின்றாள்.

(வளரும்)

விதைப்பதெல்லாம்...

மா. பூ. சோழன்

படித்துவிட்டால் நகக்கண்ணில் மண்படாமல் வாழலாம் என்பது எல்லோருடைய ஆசையும். அவ்வாசை சந்திரனின் அப்பாவுக்கும் உண்டுதான். அதனால்தான் மகன் சந்திரனை எப்படியாவது உயர் படிப்பு வரையிலும் படிக்க வைத்துவிடவேண்டும் என்று நினைத்தார். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போல என்று சொல்லும் அளவுக்கு அவருடைய வருமானம் படுபாதாளத்தில் இருந்தது.

சந்திரன் அதிருஷ்டம் இல்லாத ஒரு கட்டை, அவன் பிறந்து ஓராண்டே ஆயிற்று. தாயை இவ்வுலகை விட்டே விரட்டிவிட்டான். ஆமாம். அக்கம் பக்கம் உள்ளவர்கள் அப்படித்தான் சொன்னார்கள். பையன் பிறந்த சாதகம் சரியில்லை. அதனால்தான் தாயை அனுப்பிவிட்டான் என்றனர். ஏதோ ஒரு நோய் கண்டு இறந்து போனாள் தாய். பழி முழுவதையும் சந்திரனே ஏற்றுக்கொண்டான். ஆனால், அவன் தந்தை அப்படி நினைக்க முடியுமா? "ஏதோ என்னுடைய போதாதகாலம் மனைவியை இழந்து விட்டேன்; இனி என் எஞ்சிய வாழ்நாளில் மகனை வளர்ப்பதுதான் கடமையாகக்கொள்வேன்" எனச் சங்கல்பம் செய்துகொண்டார்.

அவர் செய்து கொண்டிருந்தது தோட்ட வேலை. குறைந்த ஊதியந்தான். மகனுக்கு மட்டும் நிறைவான வாழ்க்கையை அளித்துக் கொண்டிருந்தார்- தாய் இல்லையே என்ற ஒரே குறையைத் தவிர சந்திரன் மற்றபடி எவ்விதக் குறையும் இன்றி வளர்ந்தான். பள்ளிக்கூடம் போய் படித்துக் கொண்டும் வந்தான்.

அதே ஊரில் சந்திரனின் அத்தை ஒருத்தி வாழ்ந்து கொண்டிருந்தாள். கொஞ்சம் வசதியுள்ளவனைக் கைப்பிடித்துக்கொண்டு நல்ல பணக்காரியாகத்தான் வாழ்ந்தாள். பள்ளிக்கூடம் முடிந்தவுடன் அத்தை வீட்டுக்குத்தான் விளையாடப் போய்விடுவான் சந்திரன். அவர்கள் வீட்டில் ஒரு சின்னப் பெண், ராதிகா "பொதும்பாது" என்று இருப்பாள். எந்த நேரமும் அவளோடு வம்பும் சண்டையும் பண்ணிக்கொண்டு இருப்பான் சந்திரன். இருவரும் சின்னப்பிள்ளைகள் அல்லவா? அவர்கள் சண்டையில் பெரியவர்கள் யாரும் நாட்டம் கொள்ளமாட்டார்கள். சந்திரனை அவள் அத்தைக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்திரனைவிட ராதிகா இரண்டு வயது இளையவள்.

சந்திரன் உயர்நிலைப் பள்ளிக்குப் போய்விட்டான். அங்கிருந்து இன்னும் மேலே அனுப்பவேண்டும் என்பதுதான் அவருடைய ஆசை. ஆனால், பொருளாதாரம் இடம்தர வேண்டுமே!

தோட்ட வேலைக்கு எவ்வளவு சம்பளம் கிடைத்துவிடும்? மிஞ்சிப் போனால் நூற்று நாற்பது வெள்ளி. அந்தச் சம்பளத்தைக் கொண்டுதான் தானும் சாப்பிட்டுத் தன் மகனையும் வளர்த்து விட்டார். மேலும் சந்திரனையும் உயர்நிலைப் பள்ளி வரையிலும் படிக்க வைத்து விட்டார். இனிமேல் சந்திரனைக் கல்லூரிக்கு அனுப்ப வேண்டும். அந்த ஊரிலும் கல்லூரி கிடையாது. வெளியூர் போய்க்கல்லூரியில் தங்கிப் படிப்பதென்பதை ஏழைகள் நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது.

"அண்ணா, சந்திரனைக் கல்லூரிக்கு அனுப்பி வையுங்கள். பணச்செலவு பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். எல்லாச் செலவையும் நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம்." என்று தன் அண்ணனிடம் சொன்ன ராதிகாவின் தாய் மேலும் சூசகமாக ஒரு வார்த்தையும் சொல்லி வைத்தாள். "பிறகு ஒரு காலத்தில் நாங்கள் சேர்த்துள்ள பணம் சொத்து எல்லாம் ராதிகா சந்திரன் இருவரைச் சேர்ந்ததுதானே!"

சந்திரனின் தந்தைக்குப் புரிந்தது. அவருடைய எண்ணமும் ராதிகாவைத்தான் மருமகளாக்கிக் கொண்டு வரவேண்டும் என்று இருந்தது. ஆனால், தான் ஏழை என்பதால் அதுபற்றி வெளிப்படையாகத் தங்கையிடம் பேசவே பயந்தார். இப்போது சூசகமாக அவர்களின் அனுமதியும் கிடைத்தது.

அதுவும் மகனின் படிப்புச் செலவையும் அவர்களே ஏற்றுக் கொள்கின்றார்களே.

சந்திரனின் முதல் கட்ட வாழ்க்கை முற்றுப் பெற்றுவிட்டது. கல்லூரியில் பயில வெளியூர் புறப்பட்டான். நல்ல உயரமாக வளர்ந்திருந்தான். பார்க்க அழகாகக் காணப்பட்டான். ராதிகாவின் அழகிற்கும் பொருத்தமானவன்தான்.

அவன் படிப்பை முடித்துவிட்டு நான்கே ஆண்டில் திரும்பி விடுவான். வந்தவுடன் திருமணத்தை முடித்துவிட வேண்டும். இப்படியாக மனம்பூரித்து ராதிகாவின்



பெற்றோர்கள் வழியனுப்பினர். தன்னைப்போல் மகன் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு கொத்திப் பிழைக்க வேண்டியதில்லை. படித்துவிட்டு வந்ததும் நன்றாக வாழ்வான் என்ற மகிழ்ச்சி நினைப்புடன் மகனை ஏற்றிவிட்ட புகைவண்டி கண்ணிலிருந்து மறையும் வரையிலும் பார்த்துக்கொண்டே நின்றார்.

நினைத்து நினைத்து வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் ஜீவன்தான் மனிதன். ஆனால் எல்லோர்க்கும் நினைக்கின்றபடியே வாழ்க்கை அமைந்துவிடுகின்றதா? சிலர் கிழக்கே போக வேண்டும் என்று பயணம் தொடங்கியிருப்பார்கள். ஆனால், வாழ்க்கைப் பயணம் முடிந்தபிறகு கடைசிக் கோட்டில் நின்று கொண்டு திரும்பிப்பார்த்தால், அவர்கள் மேற்கே வந்து விட்டது அப்போதுதான் தெரியும். மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும் எல்லோர்க்கும் இந்த நியதி பொருந்தும். சிலர் சட்டம் பயில நினைப்பார்கள். ஆனால், வாழ்க்கைப் பயணத்தில் ஏற்பட்ட நிர்ப்பந்தங்களால் கணக்கு அல்லது விவசாயம் பயில்வார்கள். நினைத்தது நினைத்தப்படி நடப்பது மிகவும் சொற்பந்தான்.

மேல்படிப்புக்காகச் சென்ற சந்திரன் வாழ்க்கையில் பல மேம்பாடான நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. ஆம், அவன் ராதிகாவை மறக்கவேண்டிய நிகழ்ச்சிதான் அது. அவன் இறுதியாண்டில் படித்துக் கொண்டிருந்தபோது முதலாண்டுக் கல்வியைத் தொடங்க வந்திருந்தாள் மணிமாலா. பழைய மாணவர்களுக்கும் புதிய மாணவர்களுக்கும் அறிமுகக் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில்தான் மணிமாலாவை அவன் முதல் முதலாகப் பார்த்தான். பார்வைக்கு எளிமையாக அடக்கமுடன் காணப்பட்டாள். சந்திரனுக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது. எப்படியும் அவளோடு பேசி, அவளைத் தன் காதலியாக ஆக்கிக்கொள்ள சந்திரன் துடித்தான்.

ஒரு நாள் மணிமாலா தனிமையில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தாள். அந்தச் சமயம் பார்த்து சந்திரன் நெருங்கி வந்து மணிமாலாவிடம் ஏதேதோ பேச்சுக் கொடுத்தான். இறுதியாக துணிந்து "உன்னை நான் நேசிக்கிறேன். நீ சரி என்றால் என் படிப்பு முடிந்ததும் நாமிருவரும் மணம் புரிந்து கொள்ளலாம்" என்றான்.

"இங்கே நாம் படிக்கத்தான் வந்திருக்கின்றோம், திருமணம் பற்றிப் பேச பெற்றோர்கள் இருக்கின்றார்கள்" என்று கொஞ்சம் கோபமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள், மணிமாலா.

சந்திரனுக்கு வெட்கமாகப் போய்விட்டது. தலையைக் கவிழ்த்துக்கொண்டு தான் தங்கியுள்ள அறைக்குப் போய்விட்டான். மூன்று நாட்கள் ஓடிவிட்டன நான்காவது நாள் கல்லூரி நூல்நிலையம் போய்விட்டுத் தன் அறைக்குத் திரும்பிக்கொண்டிருந்தான் சந்திரன். அவனை நோக்கி எதிரே மணிமாலா வந்தாள் சந்திரன் அருகில் நெருங்கியதும் "ஏன், என் மீது கோபமா?" என்று மணிமாலா கேட்டாள்

"சே! இதற்கெல்லாம் கோபப்படுவேனா? உனக்கு விருப்பம் இல்லை என்று நினைத்துக்கொண்டேன் அவ்வளவுதான்" என்று சந்திரன் பதில் சொன்னான்.

"ஒரு பெண்ணைப் பற்றி அவ்வளவு சீக்கிரம் புரிந்துகொண்டீர்களே. அதுவரையிலும் உங்களைப் பாராட்டத்தான் வேண்டும்" என்ற மணிமாலா சந்திரனைப் பார்த்தாள்.

"மணிமாலா " அதற்குமேல் அவனால் பேச இயலவில்லை. நான்கு விழிகளும் ஒன்றாயின. அப்போதுதான் நூல்நிலையத்திலிருந்து எடுத்துக்கொண்டுவந்த 'காதல் பிறந்தது' என்ற புத்தகத்தை அவளிடம் நீட்டினான் அவள் ஏற்றுக்கொண்டாள். அன்றுமுதல் அவர்களிருவரும் காதலர்களாகிவிட்டனர்.

ஒருநாள் சந்திரனுக்கு ஒரு தந்தி வந்தது. அதில் ராதிகா நடந்து போய்க்கொண்டிருந்தபோது கார் விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் இருக்கின்றாள். ஒரு காலில் பாதியை எடுத்துவிடவேண்டும் என்று டாக்டர்கள் சொல்கின்றனர்" என்று தந்தியைப் பார்த்ததுதான்! சந்திரன் துடிதுடித்துப் போனான். உடனே மருத்துமனைக்கு ஓடினான். எல்லாம் முடிந்துவிட்டது- ராதிகாவின் கையில் ஊன்றுகோல்.

இறுதியாண்டுத் தேர்வு எழுதி முடிந்தது. தான் வேலைக்குப் போய் கொஞ்சம் பணம் சேர்த்துக்கொண்டதும் திருமண ஏற்பாடுகள் செய்வதாக மணிமாலாவிடம் சொல்லிவிட்டான் விடைபெற்றான் சந்திரன்.

"உங்களுக்கு அத்தை மகள் இருப்பது எனக்குத் தெரியும். கொஞ்சகாலம் போனதும் மனம் மாற மாட்டீர்களே" என்று தன் ஐயத்தைக் கிளப்பினாள் அவள்.

"ராதிகா, என் அத்தை மகளும் நானும் ஒன்றாக விளையாடியவர்கள் தான். ஆனால், அவளோடு எனக்குக் காதல் கிடையாது" என்று சொல்லி விடைபெற்றான் சந்திரன்.

"மகன் பட்டதாரியாக வந்ததைக் கண்டு உளம் பூரித்துபோன சந்திரனின் தந்தை, அப்படியே திருமணப் பேச்சையும் எடுத்தார். அவன் பட்டதாரியாக ஆனதில் ராதிகாவின் பெற்றோருக்கும் பங்கு உண்டல்லவா? ராதிகாவுக்கு நேர்ந்த விபத்து, அதனால் அவள் முடமாகி விட்ட வேதனையான நிகழ்ச்சி இவற்றால் மனம் நொந்துபோன ராதிகாவின் பெற்றோர். சந்திரனால்தான் தன் மகள் வாழ்வு மலரவேண்டும் என எதிர்பார்த்தனர்.

பலநாட்கள் ஓடிவிட்டன. மணிமாலாவும் ராதிகாவும் மாறி மாறி அவன் மனக்கண் முன் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தனர். கடைசியாக ஒருநாள் அவன் தந்தையின் வற்புறுத்தலுக்கு முடிவாகப் பதில் சொல்லியே விட்டான். "அப்பா, நான் ராதிகாவைத் திருமணம் செய்துகொள்ள முடியாது இதை அத்தை மாமாவிடம் நீங்களே சொல்லிவிடுங்கள்" இப்படி ஒரு முடிவு சந்திரனின் வாயிலிருந்து வெளிவரும் என அவன் தந்தையே எதிர்பார்க்கவில்லை.

தன் அத்தானின் முடிவுகேட்டு ராதிகா குலுங்கிக்குலுங்கி அழுதாள். இப்போது அவள் இருக்கின்ற நிலையில் வேறு என்ன செய்ய முடியும்?

அன்று தனியாக நிலவின் வெளிச்சத்தில் உட்கார்ந்து கவலையில் ஆழ்ந்திருந்த சந்திரனை நாடி யாரோ வரும் ஓசைகேட்டது. ராதிகா ஒருகாலுடன் மற்றொரு காலுக்குப் பதில், கட்டையின் துணையுடன் சந்திரனிடம் வந்தாள்.

"ராதிகா, இந்த நேரத்தில் இங்கே ஏன் வந்தாய்?"

"நான் போவதற்கு வேறு இடம் எங்கே இருக்கிறது. "அத்தான், உங்கள் முடிவைக் கடைசியாகத் தெரிந்து கொண்டு போகத்தான் வந்தேன். நீங்களே எனக்கு வாழ்வு தர மறுத்தால் வேறு யார் அத்தான், எனக்கு வாழ்வு தர முன்வருவார்கள்? உங்கள் முடிவைத் தெரிந்துகொண்ட பிறகு நான் ஆற்றையோ குளத்தையோதான் பார்க்க வேண்டும்."

சந்திரனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. வானத்தை அண்ணாந்து பார்த்தான். நிலவை ஒரு கருமேகப் படலம் மெல்ல மெல்ல விழுங்கிக்கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பூரண இருள். அவன் நெஞ்சிலும் பூரண இருள்தான் கவ்விக் கொண்டது

பொழுது விடிந்தது.

சந்திரன் மணிமாலாவுக்குக் கடிதம் எழுதினான் "அன்பு மணிமாலாவுக்கு. விதைக்கின்ற விதைகளெல்லாம் முளைப்பதில்லை. பட்டம் பெறப் படிக்கும் நீ இதனைப் புரிந்துகொள்வாய் என்றே நினைக்கின்றேன். திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுவதாகச் சொல்வார்கள். உண்மையோ பொய்யோ ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் உண்மையாகி விட்டது, என்னை மறந்துவிடு"

கடிதத்தை அஞ்சலில் சேர்த்துவிட்டு அத்தை வீட்டுக்குச் சென்றான் சந்திரன்.

முள்

முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாய் இருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்.

—மத்தேயு 13: 22

தண்ணீரும் கண்ணீரும்

பேட்டி: ராஸ்மன்



அண்மையில் மலேசியத் தலைநகரின் சில பகுதிகள்— வெள்ளக் காடாக மாறிவிட்டிருந்ததை நாடறியும்.

கூட்டரசுப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் சீற்றத்தினால் ஏறத்தாழ பத்தாயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு தற்காலிகமாகக் குடியேற்றப் பட்டனர். இளைஞர் ஒருவர் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டார். வெள்ளத்தின் விளைவால் பல சாலைகள் 3 அல்லது 4 அடி நீரில் மூழ்கிக் கிடந்தன. சில சாலைகள் போக்குவரத்துக்கு முற்றாக மூடப்பட்டன. பஸ் - டாக்சி சேவை நின்றதால் பயணிகள் பட்ட அவதி கொஞ்சநஞ்சமன்று. சில கம்பங்களைச் சேர்ந்த மக்கள் வெள்ளக் கொடுமையினால் பட்ட சிரமங்களும் அவதிகளும் சொல்லில் அடங்கா.

வெள்ளத்தின் கொடுமையால் பாதிக்கப்பட்ட கம்போங் காசிப் பிள்ளை பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தலைவர், ஒரு குடும்பத் தலைவி, ஓர் இளைஞர், ஒரு பள்ளி மாணவி ஆகிய நால்வரைச் சந்தித்து அவர்களுடைய அனுபவத்தைக் கேட்டோம். தண்ணீரினால் ஏற்பட்ட கண்ணீர்க் கதையை அவர்கள் எங்களிடம் சொன்னார்கள்.



எஸ். சுப்பிரமணியம் (வயது 46)

நான் பகாங் ஜெங்கா பகுதியில் ஜே.கே.ஆர்.லே வேலை பார்க்கிறேங்க... என் மனைவி, குழந்தைகள் எல்லாரும் இந்தக் காசிப்பிள்ளை கம்பத்திலேதான் இருக்காங்க... நான் மாதத்திலே ஒரு முறைதாங்க வீட்டுக்கு வருவேன். இந்தத் தடவை வந்தபோதுதான் இப்படி வெள்ளத்திலே மாட்டிக்கிட்டோம். புதன்கிழமை (5-10-77) ராத்திரி மணி 12-30 இருக்கும். நான் வீட்டிலே படுத்திருந்தேன். வெளியிலே திடீர்னு ஜனங்களோட சத்தம் கேட்டுக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தேன். "வெள்ளம் வருது, வெள்ளம் வருது"ன்னு எல்லோரும் சத்தம் போட்டாங்க...! எங்க வீட்டுக்குப் பக்கத்திலிருந்த அல்லூரில் தண்ணீர் பெருகிக்கிட்டு வந்ததைப் பார்த்தேன் உடனே மனைவி, குழந்தைகள் எல்லாரையும் எழுப்பிவிட்டுட்டு, சாமான்களை எல்லாம் எடுத்து அலமாரி மேலேயும், மேஜை மேலேயும் வச்சேன். சுமார் 15 நிமிஷம்தான் இருக்கும். எங்க வீட்டுக்குள்ளே மடமடன்னு சேறும் தண்ணியுமா வந்துடுச்சி.... எப்படியோ ஒரு வழியா சமாளிச்சிட்டோம்... ஆண்டவன் புண்ணியத்தாலே குழந்தைகளுக்கு ஏதும் ஆகலிங்க....

இந்தப் பகுதியிலே சிகாம்புட் ஆறு ஓடுது... அது ஒரே குப்பையும் கூளமுமாக அடைந்து கிடக்குது. அந்த ஆற்றை விரிவுபடுத்தினால் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்த முடியுமென்று நெனைக்கிறேன்... ஏழை மக்களின் வாழ்வோடு விளையாடும் வெள்ளப் பெருக்குப்பிரச்சினைக்குநிரந்தரமான தீர்வுகாண மாநகரசபை முயற்சி செய்தா ரொப்ப நல்லது...



எஸ். மோகனசுந்தரம் (வயது 22)

நான் இப்ப ஜாலான் புக்கிட் அமான் போலீஸ் நிலையத்தில் கை ரேகைப் பகுதியில் வேலை பார்க்கிறேன். நான் தங்கியிருக்கிறது ஜாலான் காசிப்பிள்ளை பகுதியில் தான். என்னோட என் அண்ணன், தம்பி, 3 நண்பர்கள் எல்லோரும் ஒரு வாடகை வீட்டிலே இருக்கிறோம். புதன்கிழமை ராத்திரி 10 மணிக்கு நான் தூங்கப் போறதுக்கு படுக்கையை போட்டுக்கிட்டிருந்தேன். அப்போ வெளியே போயிட்டு வந்த என் நண்பர் வாணன் பாத்ரூமுக்குப் போனபோது தரையில் 1 அடி உயரத்துக்கு தண்ணீர் நிறைந்திருப்பதைப் பார்த்துட்டு உடனே கூப்பிட்டுச் சொன்னாரு... அதைப் போய்ப் பார்த்ததுமே வெள்ளம் வரப்போகுதுன்னு எங்களுக்குத் தெரிந்து போயிடுச்சு. முன் எச்சரிக்கையாக முக்கியமான ரேடியோ, டி. வி. இப்படி சாமான்களை எல்லாம் தூக்கி பெரிய மேசை மேலே வைத்துவிட்டோம். தண்ணியும் மடமடன்னு 4 அடிக்கு வீட்டுக்குள்ள வந்திடுச்சி... என் நண்பர் வாங்கி வைத்திருந்த விலையுயர்ந்த சில புத்தகங்கள் தண்ணி புகுந்து சேதமடைந்து போயிடுச்சி... அதோடு என் மோட்டார் சைக்கிள் இன்ஜினுக்குள்ளும் தண்ணி புகுந்திட்டதாலே அதுவும் கொஞ்சம் செலவு வச்சிடுச்சிங்க!

இது மாதிரி இன்னும் ரெண்டு மூணு தடவை வெள்ள மிரட்டல் வந்தால் இடம் மாறிப் போயிடலாம்னுதான் நெனைச்சிட்டிருக்கோம்! மெக்ஸ்வெல் ரோட்டில் இப்ப மேம்பாலம் கட்டிக்கிட்டு இருக்காங்க... அதனாலே பக்கத்திலே இருக்கிற ஆற்றை மூடிவிட்டதால் தான் இந்தத் திடீர் வெள்ளப்பெருக்கத்திற்குக் காரணம் என்று நெனைக்கிறேன்...!

திருமதி குரம்மா (வயது 31)

வியாழக்கிழமை ராத்திரி 1 மணியிருக்கும். எங்க வீட்டுக்குள்ள 3 அடிக்கு மேலே தண்ணி புகுந்துடுச்சிங்க... என் கணவரும் பிள்

ளைங்களும் சாமான்களையெல்லாம் எடுத்து வைச்சிகிட்டிருந்தாங்க. ரெண்டு நாளைக்கு முன்னாலேதான் வீட்டுக்கு வேண்டிய மளிகைச் சாமான்களையெல்லாம் வாங்கியிருந்தோம். குதிரியிலிருந்த ஐந்து கந்தம் அரிசி, பட்டமிளகாய், சீனி, உப்பு எல்லாம் தண்ணியிலே ஊறி வீணா போயிடுச்சிங்க...



இதே மாதிரி 1973ஆம் ஆண்டுலே கூட வெள்ளம் வீட்டுக்குள்ளா வந்துடுச்சுங்க. அப்போ 4 அடி வரை பெருக்கு இருந்துச்சு.. அப்போ எங்க வீட்டுலே இருந்த புதுத் தையல் மிசினு தண்ணியிலே நனைஞ்சு வீணாயிடுச்சிங்க...

இப்ப பழையபடியும் வெள்ளப் பெருக்கு ரொம்பக் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் கொடுத்துடுச்சிங்க... வீடு மாறலாம்னு நெனைக்கிறோம். ஆனால் பிள்ளைங்க படிக்கிருங்க. அதற்கு, இந்த இடம் வசதியா இருக்கு! அதோடு தண்ணி காசு, வீட்டு சேவா சேர்த்து 35 வெள்ளி தான் கொடுக்கிறோம்... எங்க நிலைமைக்கு இந்த இடத்தை விட்டுட்டு போகவும் மனம் வரலிங்க...



குமாரி எஸ். தமிழ்ச்செல்வி (வயது 15)

நான் இப்ப ஈப்போ ரோட்டிலுள்ள ஆங்கில இடைநிலைப் பள்ளியிலே இரண்டாம் படிவம் படிக்கிறேன்.

வியாழக்கிழமை நடுராத்திரி ஒரு மணிக்குள் எங்க வீட்டுலே 3 அடிக்கு வெள்ளம் வந்துடுச்சி. எங்க அப்பா எல்லாரையும் எழுப்பி விட்டுட்டு சாமான்களை எல்லாம் மேலே எடுத்து வச்சிகிட்டிருந்தாரு. நான் தம்பி தங்கச்சிகளை தூக்கி பெரிய மேஜை மேலே நிறுத்திவிட்டு அவுங்களுக்குப் பாதுகாப்பா பார்த்துகிட்டேன். குழந்தைகள் நடுச்சாமத்திலே எழுந்ததும், "பசிக்குது"ன்னு கத்தி அழ ஆரம்பிச்சிடுங்க. நான் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அதுங்க கேட்கல. நான் தண்ணியிலேயே நின்னுகிட்டிருந்தேன். உடம்பெல்லாம் வெடவெடன்னு குளிர்ல நடுங்குச்சு. காலையிலே எங்க அப்பா பசியாற வாங்கியாந்து கொடுத்தாங்க... மத்தியானம் பெரியம்மா சாப்பாடு கொண்டாந்தாங்க... தண்ணியிலேயே நின்னுகிட்டிருந்தாலே அம்மாவோட கால்லே சேத்துப்புண்ணு வந்திடுச்சி. எனக்கு சளி பிடிச்சிக்கிட்டது... திரும்பவும் திடீரென வெள்ளம் வந்திடுமோன்கிற பயத்தில் இப்ப எல்லாம் படுத்தாலகூட தூக்கமே வர மாட்டேன்குது... பரீட்சைக்கு படிக்கக் கூட முடியலே, ஸ்கூலுக்கு மூணு நாளா போகவில்லை.



தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கடைசி நேர மாற்றங்கள் செய்யப்படலாம்.

தொலைக்காட்சி

30-10-77 ஞாயிறு தமிழ்ப்படம்: உங்க வீட்டுக் கல்யாணம்.



தேங்காய் சீனிவாசன் நாயகனாகத் தோன்றி நடித்துள்ள இந்த முழு நீள நகைச்சுவைப் படத்தில் அவருடன் "பட்டிக்காடா பட்டணமா" புகழ் சுபா, நாயகியாக இணைந்து நடித்துள்ளார்.

3-11-77 வியாழன் தமிழ்ப்படம்: "கள்வனின் காதலி" சிவாஜி, பானுமதி நடித்துள்ள இப்படத்தில் பானுமதியின் இனிமையான பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன.

10-11-77 வியாழன் இந்திப்படம்: Badu Shah. தீபாவளியை முன்னிட்டு சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்துள்ள "சொர்க்கம்" தமிழ்ப் படம் ஒளியேறுகிறது.

ஞாயிறுதோறும் இரவு 7.20க்கு கோம்பெட்

வானொலி

சிறுகதை

(ஞாயிறுதோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

23-10-77 பதி சேவை செய்வதே ஆனந்தம்—எழுத்து: ஈப்போ திருமதி விஜயா தாமஸ்

30-10-77 ஒரு பயிர் வாடுகிறது எழுத்து: பி. எஸ். சுப்பிரமணியம்.

6-11-77 சிதைந்த வாழ்வு எழுத்து: பத்தாங் பெர்ஜுந்தை மு. முனுசாமி.

13-11-77 நண்பனுக்காக. எழுத்து: சுங்கை ஜாவி பூங்காவனம் பெருமாள்.

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

29-10-77 தெளிவு— புக்கிட் மெர்டாஜம் அ. திருச்செல்வி எழுதியது.

5-11-77 அவன் எழுதிய தீர்ப்பு பாகன் ஆஜம் சின்னத்தம்பி எழுதியது.

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

6-11-77 சிறையைத் தேடி எழுத்து: தலைநகர் பதவியன்.

13-11-77 ஆலமரத்தின் அருகினிலே எழுத்து: மலாக்கா முத்துக் கிருஷ்ணன்.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

29-10-77 தலைநகர் பதவியன் எழுதிய சிரிச்சுக்கிட்டே போங்க

5-11-77 சுப்பிரமணியம் சக்ரவர்த்தி எழுதிய வீட்டுக்கு வந்த மாப்பிள்ளை.


12-11-77 பினாங்கு கே. ஆர். காளிதாசன் எழுதிய காதலர்கள் ஜாக்கிரதை

தொடர் நாடகம்

(திங்கட்கிழமை தோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

இதய வாசல் உனக்காக – எம். ஜெயலெட்சுமி எழுதும் புதிய தொடர் நாடகம். 24-10-77 இரண்டாம் பகுதி, 31-10-77 மூன்றாம் பகுதி, 7-11-77 நான்காம் பகுதி,

பாவையர் பக்கம்



அழகுக் குறிப்பு

—குமாரி ஆ. ரேமா,
தஞ்சோங் மாலிம்

இளம் பெண்களுக்கு முகத்தில் எண்ணெய் வடியாமல் பார்த்துக் கொள்வதுதான் அலங்காரத்தின் முக்கியமான பிரச்னையாகும். எண்ணெய் வடியும் முகம் களைத்துக் கறுத்துக் காணப்படும்.

முகத்தைச் சோப்புப் போட்டுக் கழுவிச் சுத்தமாகத் துடைத்துக் கொள்ளவேண்டும். பூத்துண்டினால் மேலிருந்து கீழாகக் கன்னங்களை அழுத்தித் துடைக்க எண்ணெய் சுத்தமாக நீங்கும். முகமும் பளபளப்பாக இருக்கும். அதற்குமேல் பவுடர் பூசிக்கொள்ளவேண்டும்.

ஆனால், சிலருக்கு பவுடர் பூசிய பின்னும் முகத்தில் எண்ணெய் வடியும். அலங்காரம் முழுவதையும் கெடுத்துவிடும். அடிக்கடி முகத்தைக் கழுவி பவுடர் பூசிக்கொள்ள முடியுமா? முடியாது. அப்படியே பூசினாலும் திட்டுத்திட்டாக ஆகிவிடும்.

இதனைத் தவிர்க்க பவுடர் பூசிக் கொள்வதற்கு முன் ஸ்னோ, கிரீம் ஏதாவது ஒன்றை முகத்தில் பரவலாகத் தடவிக்கொள்ள வேண்டும். பிறகு பவுடரைப் பூசிக் கொள்ள வேண்டும். மென்மையாகப் பூசினாலே போதும். இப்படிச் செய்தால் எண்ணெய் வடியாது. அலங்காரம் வெகுநேரம் நீடித்து இருக்கும்.

அலங்காரம் செய்தபின், அதிகமாக வேலைகள் செய்யக்கூடாது. நல்ல காற்றோட்டமான இடத்தில் இருக்கவேண்டும். முகம் வியர்க்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.



காதல்

காதல் எனும் மூன்றெழுத்துச் சொல்லுக்குத்தான் எத்தனைப் பெருமை. ஆதாம்- ஏவாள் காலத்திலிருந்து, துஷ்யந்தன்- சகுந்தலை, கோவலன்- மாதவி போன்றவரையும் ஆட்கொண்டு இன்றைய நாகரிக உலகத்திலும் இளமையோடு இன்னும் பவனிவரும் காதல் எத்துணை சக்தி வாய்ந்தது!

சாதி, மத பேதமின்றி ஏழை பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வின்றிப் படித்தவர் படிக்காதவர் என்ற வேறுபாடின்றி எங்கும் வியாபித்து நிற்கிறது இந்தக் காதல். காதலிப்பது தவறல்ல. ஆனால் அது கலியாணம் வரை வருமா, வந்தாலும் இறுதிவரை தொடருமா என்று அறிந்து காதல் கொள்ள வேண்டும்.

எத்தனையோ பேர் காதலித்தவரையே மணந்து இல்லறவாழ்க்கையை இனிமையாக ஒற்றுமையாக நடத்துகிறார்கள். இல்லையென்று யாரும் சொல்லமுடியாது. அதே போல் எத்தனையோ பெண்கள் காதலில் தோல்வி படைந்திருப்பர். தம் பெண்மையைப் பறிகொடுத்த சிலர் ஏமாற்றத்தினால் தற்கொலை செய்துகொண்டதும் உண்டு.

அதனால் பெண்கள் காதலிக்கு முன், அது நிறைவேறுமா பெற்றோர் சம்மதிப்பாரா, இல்லையென்றாலும் அவருடன் வாழ்க்கை இறுதிவரை தொடருமா என்று தீர யோசிக்க வேண்டும்- திருமணமாகுமுன் காதலுக்குப் பெண்மையைக் காணிக்கையாக்குவது பெரும் தவறு. எத்துணை ஆழமான காதலானாலும் அது மனதிற்குக் கட்டுப்பட்டு முறையாக வளரவேண்டும். வழிதவற விடக்கூடாது.

—திருமதி சரசுவதி
பெட்டாலிங் கிருஷ்ணன்

காய்கள்

வெட்டும் காய்-கத்திரிக்காய்.

மயக்கும் காய்-பீர்க்கை.

புண்ணியம் செய்யாதது-பாவக்காய்.

நவக்கிரகத்தில் ஒன்று—பூசனிக்காய்.

இரக்கமுள்ள கிழங்கு- கருணைக் கிழங்கு.

வழிகாட்டி-பீட்ரூட்.

குத்தும் கிழங்கு- முள்ளங்கி.

புண்ணானது- வெங்காயம்.

கோதுமை பிஸ்கட்



தேவையானவை:

கோதுமைமாவு 1 கட்டி, ரவா மாவு ½ குவளை (பால் குவளை) தூள் சீனி 1½ குவளை, நெய் 3 கப்.

செய்முறை:

கோதுமைமாவு, ரவாமாவு, தூள்சீனி மூன்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். நெய்யைச் சிறிது சூடாக்கி மாவுடன் கலந்து பிசையவும். பிறகு சிறு சிறு உருண்டையாக உருட்டி நடுவில் அழுத்தி அவுனில் வேக வைத்து எடுக்கவும்.

திருமதி மரகதவள்ளி,
கோலக்கிள்ளான்

உறவுப் பயணம்-2

"புதிய சமுதாயம்" அறிமுகக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, ஜொகூர் மாநிலச் சகோதரர்கள் நம்மை அழைத்திருக்கிறார்கள் என்று எங்கள் ஆசிரியர் திரு. முருகு அவர்கள் கூறியபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியின் அளவு என்ன என்பதை இப்போது என்னால் கூற முடியவில்லை.

போன மாதம் செப்டம்பர் 28-ஆம் தேதியே ஆசிரியர் இந்த இரண்டாவது உறவுப் பயணத்தைப் பற்றிச் சொன்னார். அப்போதே, அந்த வினாடியே ஜொகூருக்குப் புறப்பட்டு விடவேண்டும் என்று என் மனம் விரும்பியது. ஆனால் அழைப்பு 30-ஆம் தேதிதான் என்பதை அறிந்ததும் இடையில் கிடக்கும் ஒரு நாளின் மீது எனக்கு வந்த கோபம்; அதை விவரிக்கவும் எனக்கு இப்போது வார்த்தை கிடைக்கவில்லை.

அந்த மகிழ்ச்சியும் கோபமும் எதற்கு வந்தன? தினந்தோறும் மழை பெய்து கொண்டிருக்கும் கோலாலம்பூரை விட்டு ஓரிரு நாட்களாவது மழைத் தொல்லை இல்லாத ஜொகூருக்குச் செல்ல வாய்ப்புக் கிடைத்ததே, அதனால்தான்.

இடையில் 29-ஆம் தேதியை அப்படி இப்படியென்று கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டு 30-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலையில் மழையாட்சி செய்து வந்த கோலாலம்பூரிலிருந்து வெயில் ஆட்சி செய்து வருவதாக எண்ணிய ஜொகூருக்குப் புறப்பட்டோம்.

ஜொகூர்பாரு நகரத்தை அடைந்ததும் என்ன ஏமாற்றம்! அங்கேயும் மழைதான்! என்றாலும் கோலாலம்பூரில் பெய்தது போல அவ்வளவு கடுமையாக இல்லை.

"விதி யாரை விட்டது" என்பது போல 'மழை யாரை விட்டது' என்று எண்ணிச் சமாதானமடைந்தேன்.

ஆசிரியர் திரு. முருகு அவர்களுடன் அவர்களின் துணைவியார், எங்கள் அலுவலகத்தைச் சேர்ந்த திரு. ராமதாஸ் மனோகரன், நான் ஆகியோர் சென்றிருந்தோம். வழக்கம் போல் ஓட்டுநர் திரு. இராமசாமி காரை ஓட்டி வந்தார்.

சம்பந்தி சந்திப்பு

கார் ஒரு வீட்டின் முன் மாலை மணி நான்கு அளவில் போய் நின்றது. அந்த வீட்டிலிருந்து ஒருவர் "வாங்க வாங்க" என்று வணக்கம் கூறி மலர்ந்த முகத்துடன் வரவேற்றார்.

"இவர் என் சம்பந்தி" என்று வரவேற்றவரை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார் ஆசிரியர்.

"நாம் மேற்கொண்டிருப்பது "புதிய சமுதாயம்" பத்திரிகைக்கான இரண்டாவது உறவுப் பயணம். அதற்கேற்றாற்போல முதன் முதலில் தம் சம்பந்தியை ஆசிரியர் சந்திப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது" நான் நண்பர் மனோகரன் காதுகளில் கிசுகிசுத்தேன்.

"இன்னும் சிறிது நேரத்தில் வருவதாகச் சற்று முன்புதான் திரு. காவேரிநாதன் "போன்" பண்ணினார்" என்று ஆசிரியரின் சம்பந்தி திரு. மெய்யப்பன் குறிப்பிட்டார்.

இதைக் கேட்டுவிட்டு நண்பர் மனோகரன், காவேரிநாதன்தான் ஜொகூர் மாநிலத்தைப் பொறுத்த வரையில் "புதிய சமுதாயம்" பத்திரிகையின் "சம்பந்தி" என்று என் காதுகளைக் கடித்தார்.

எல்லோரும் திரு. மெய்யப்பன் அவர்களின் வீட்டுக்குள் நுழைந்தோம். உள்ளே. இந்திய, சீன, மலாய் மாணவர்கள் அதிகம் பேர் படித்துக் கொண்டிருந்தனர். தவறிப் போய் ஏதேனும் பள்ளிக்கூடத்தில் நுழைந்து விட்டோமோ என்னும் சந்தேகம் என்னுள் எழுந்தது. அப்புறம்தான் எனக்கு அதன் விவரம் தெரிந்தது. திரு. மெய்யப்பன் எம். சி. இ., எல். சி இ. படிப்புக்கான கணிதப்பாடம் போதிப்பதில் புலி. ஜொகூர்பாருவில் "கணக்கு மாஸ்டர் மெய்யப்பன்" என்றால் தெரியாதவர்கள் மிகச் சிலர்தான். தமது வீட்டையே ஒரு பள்ளிக்கூடமாக்கியிருக்கிறார் அவர்.

ஆசிரியரின் சம்பந்தியார் வீட்டில் இருந்து கொண்டு ஜொகூருக்குரிய "புதிய சமுதாயத்தின் சம்பந்தி" திரு சி. காவேரிநாதனின் வரவை எதிர்நோக்கி இருந்தோம்.

அவரும் வந்தார். "எம். சி. இ. தேர்வில் தமிழ் எடுக்கும் மாணவர்களுக்குத் தமிழ் வகுப்பு நடத்தி விட்டு வருகிறேன்" என்று காவேரிநாதன் கூறினார். அப்போதுதான் அவர் தமிழாசிரியர் என்பது எனக்குத் தெரிந்தது. அதற்கு முன்புவரை அவர் கவிஞர்; தமிழ்ப் பற்றாளர்; ஆசிரியர் முருகுவுடன் "தமிழ் முரசு" காலத்திலிருந்தே தொடர்புடையவர்" என்று மட்டும்தான் தெரியும்.

ஜொகூரைப் பொறுத்த வரையில் தமிழை ஒரு பாடமாக எடுக்கும் எல். சி. இ., எம். சி. இ., எச். எஸ். சி. தமிழ் மாணவர்கள் அதிகம் பேர் என்பதும், அதனால் அங்கே உள்ள தமிழாசிரியர்களுக்கு ஓய்வான நேரங்களில் தமிழ் வகுப்பு நடத்தும் வாய்ப்பு அதிகம் உண்டென்றும் தெரிந்து கொண்டேன். அதுமட்டுமல்ல. பல்கலைக் கழகத்தில் பயில முனையும் நம் தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் மிகவும் கைகொடுக்கும் பாடமாக அமைவதால், தமிழ் மாணவர்கள் தமிழைப் படிப்பதில் நாட்டம் செலுத்துகிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன்.

மாடோஸ் தோட்டம்

நண்பர் காவேரிநாதன் எங்களை முதன் முதலில் மாடோஸ் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்குதான் முதல் கூட்டம். மாலை ஆறு மணியளவில் அங்குச் சென்றோம். "அண்ணா படிப்பக" இல்லத்தால் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.



மாடோஸ் தோட்டத்தில் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் பேசுகிறார். அமர்ந்திருப்போர் இடமிருந்து: படிப்பகச் செயலாளர் திரு. சங்கப்பிள்ளை (மறைந்திருப்பவர்) திரு. பாதாசன், திரு. காவேரிநாதன்

அண்ணா படிப்பகச் செயலாளர் திரு. சங்கப்பிள்ளை எங்களை வரவேற்றார். அதன் மகளிர்ப் பகுதியினர் வரிசையாக நின்று வணக்கம் கூறி எங்களை வரவேற்ற காட்சி மறக்கமுடியாத ஒன்று. பொதுவாக விருந்தினர்களை எப்படி வரவேற்பது என்பதை அண்ணா படிப்பக இளைஞர்களும் மகளிர்ப் பகுதியினரும் நன்கு தெரிந்து வைத்துள்ளனர் என்பது தெரிந்தது. படிப்பகத் தலைவர் திரு. ஜான், மற்றும் திரு. கே. குமரன், கா. ப. தாயுமான் முதலியோர் கூட்டம் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்திருந்தனர். அக்கூட்டத்திற்கு வருகை தந்தவர்களில் சகோதரிகள் அதிகம் என்பது மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டிய ஒன்று.

சினிமாவைத் தவிர மற்ற எந்தக் கூட்டங்களுக்கும் பெண்கள் செல்வது குறைவு என்ற பழியை அந்தச் சகோதரிகள் அன்று நீக்கினார்கள் என்றே சொல்ல வேண்டும். புதிய சமுதாயம் ஒன்று உருவாகிறது என்பதற்கு அது நல்ல எடுத்துக்காட்டாக எனக்குத் தோன்றியது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் "கிளிக் கிளிக்" என்று காமிராவை இயக்கிக் கொண்டிருந்த சகோதரியைப் பார்த்த போது எங்கள் எல்லோருக்குமே வியப்பு ஏற்பட்டது.

நகர்ப்புறங்களில்கூட காமிராவைத் துணிச்சலாக இயக்கத் தெரிந்த நமது தமிழ்ச் சகோதரியை நான் இதுவரை பார்த்ததில்லை. குமாரி கே. மகேஸ்வரி அந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சிகளை நேர்த்தியாகப் படம் பிடித்தார்.

திரு. சி. காவேரிநாதன் அறிமுகவுரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து ஆசிரியர், மனோகரன், நான் மூவரும் புதிய சமுதாயத்தின் நோக்கங்களையும், அதன் வளர்ச்சியையும் பற்றிப் பேசினோம்.

உலுதிராம் தோட்டத் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களில் ஒருவரும், சுங்கைதிராம் ம. இ. கா. தலைவருமான திரு. கே. எஸ். மணியமும் அக்கூட்டத்தில் புதிய சமுதாயம் இதழின் சிறப்புக்களை எடுத்துரைத்தார். உலுதிராம் ம இ கா தலைவர் திரு அன்னியப்பன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

இவர்களின் பேச்சையெல்லாம் கேட்டபிறகு எங்களுக்கே தெரியாத சிறப்புக்களை வாசகர்கள் புதிய சமுதாயத்தில் கண்டு வருவதை அறிய முடிந்தது.

பிறகு கலந்துரையாடல் நடந்தது. வாசகர்கள் பலர் பலவிதக் கருத்துக்களைக் கூறினார்கள். அவற்றுக்கெல்லாம் ஆசிரியர் முருகு தகுந்த பதில்களைக் கூறினார். அந்த வட்டாரத்திற்குப் "புதிய சமுதாயம்" பத்திரிகையின் விற்பனைப் பொறுப்பை திரு என் கணேசன் ஆர்வமுடன் தாமாகவே முன்வந்து ஏற்றுக் கொண்டார்.

யாடோஸ் தோட்டத்தில் கூட்டம் முடிய மணி ஒன்பதாகிவிட்டது புறப்படும் சமயத்தில் "என்ன புறப்பட்டுவிட்டீர்கள். உங்களுக்காக இரவுச் சாப்பாடு தயாரித்துள்ளோமே" என்று திரு சங்கப்பிள்ளை கூறினார்.

கூட்டத்தில் பிஸ்கெட், தேநீர் ஆகியவற்றை வயிற்றுக்குள் தள்ளியிருந்த எங்களுக்கு இரவில் எப்படிச் சோறு சாப்பிடுவது என்று தயக்கம் ஏற்பட்டது. அன்போடு இடுகின்ற அழைப்பை எப்படி மறுப்பது? என்று சாப்பிடச் சென்றோம்.



புகைப்படம் பிடித்த
குமாரி கே. மகேஸ்வரி

என்ன ஆச்சரியம், எங்களின் மனநிலையை உணர்ந்தவர்கள் போல அண்ணா படிப்பகத்தார் சோறு சமைக்காமல் இடியப்பம் பிழிந்து வைத்திருந்தார்கள். விருந்தினர்களின் வயிற்று நிலவரம் அறிந்து இடியப்பச் சாப்பாடு போட்ட அவர்களின் விருந்தோம்பலுக்கு ஈடு இணையாக எதைச் சொல்வது?

உலுதிராம் தோட்டம்

மறுநாள் சனிக்கிழமை இரண்டு கூட்டங்களுக்குத் திரு. அன்னியப்பன் மூலம் ஏற்பாடு செய்திருந்தார் காவேரிநாதன். உலுதிராம் தோட்டத்திலும், செல்லம் தோட்டத்திலும் அவை நடந்தன.

அன்னியப்பனைப் பற்றிச் சிறிது சொல்லவேண்டும். அவர் தனது மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டு "புதிய சமுதாயம்" இதழின் அறிமுகக் கூட்டங்கள் நடைபெற்ற இடங்களுக்கெல்லாம் தவறாது வந்திருந்தார். தான் ஏற்பாடு செய்த கூட்டங்களின் வெற்றிக்கு மட்டும் பாடுபடாமல் மற்றவர்கள் ஏற்பாடு செய்த கூட்டங்களின் வெற்றிக்கும் பாடுபட்டார்.

"யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்பதற்கொப்ப நாங்கள் காரில் கூட்டம் நடைபெறும் இடத்திற்குச் செல்வதற்கு முன்பே அன்னியப்பன் அங்குச் சென்று அங்குள்ள ஏற்பாடுகளெல்லாம் எப்படி என்பதைக் கவனித்தார். கூடவே காவேரிநாதன் எங்களுடன் இருந்து கூட்டங்களுக்கெல்லாம் எங்களை அழைத்துச் சென்றார் என்றால் அன்னியப்பன் கூட்டங்கள் நடைபெற்ற போது ஆங்காங்கே இருந்து ஏற்பாடுகளைச் சரிவரக் கவனித்துக்கொண்டார். எல்லாவற்றுக்கும் மேலாக புதிய சமுதாயத்தைக் கணிசமான பிரதிகளை விற்பனை செய்யும் பொறுப்பை அன்னியப்பன் ஆர்வமுடன் ஏற்றுக்கொண்டார்.

உலுதிராம் தோட்டத்தில் கூட்டம் கோவில் மண்டபத்தில் நடந்தது. கூட்டம் துவங்குவதற்கு முன்பு கோவிலில் சிறப்புப் பூசை நடந்தது. எல்லாரும் சுவாமி தரிசனம் செய்தோம் அதன் பிறகு கூட்டம் துவங்கியது. உலுதிராம் ம. தி. க. தலைவரான திரு குட்டி கிருஷ்ணன் தோட்ட மக்கள் சார்பில் வரவேற்புரை ஆற்றினார். காவேரிநாதன் தலைமையுரைக்குப் பின்பு தமிழாசிரியர் திரு சவரிமுத்து புதிய சமுதாயத்தின் சிறப்புக்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

ஆசிரியரும், ராமதாஸ் மனோகரனும், நானும் பேசினோம். கூட்டத்தினரில் பலர் புதிய சமுதாயத்தில் இடம்பெறவேண்டும் எனத் தாங்கள் நினைக்கும் கருத்துக்களைக் கூறினர். அவற்றில் சாத்தியமானவற்றை இடம்பெறச் செய்வதாக ஆசிரியர் உறுதி கூறினார்.

முதல் கூட்டத்தை முடித்துக் கொண்டு உலுதிராம் தோட்டத்திலிருந்து புறப்படும்போது இரவு மணி 8.30.

உள்ளம் நெகிழ்ந்தது
செல்லம் தோட்டத்தில்

அன்னியப்பன், செல்லம் தோட்டத்தில் நடைபெறவேண்டிய அடுத்த கூட்டத்தைக் கவனிக்கும் பொருட்டு காற்றாய்ச் சென்றுவிட்டார்.

"செல்லம் தோட்டத்தில் ஏழு மணிக்குக் கூட்டம். இப்போதே மணி எட்டரை ஆகிவிட்டது. அங்குப் போய்ச் சேர எப்படியும் மணி ஒன்பது ஆகிவிடுமே!" என்று நண்பர் காவேரிநாதன் கடிகாரத்தைப் பார்த்துவிட்டுக் கவலையுடன் சொன்னார். ஆசிரியருக்கும் எங்களுக்கும் அதற்குமேல் கவலை.

"கவலைப்படாதிங்க. பத்தே நிமிஷத்திலே செல்லம் தோட்டத்துக்குப் போயிடுவோம்" என்று கார் ஓட்டுநர் இராமசாமி காவேரிநாதனை ஆறுதல் படுத்துவதுபோல் கூறினார். எங்களுக்கும் அது கொஞ்சம் ஆறுதல் அளித்தது.

சொன்னதைப்போலவே இராமசாமி காரை "ஜெட்" வேகத்தில் ஓட்டினார்.

"என்ன ஓட்டி என்ன பயன்? இந்நேரம் செல்லம் தோட்ட மக்களெல்லாம் காத்திருந்துவிட்டு வீட்டுக்குச் சென்றிருப்பார்கள்" என்று நான் நண்பர் மனோகரனிடம் சொன்னேன்.

அவர் முகத்தை "உம்"மென்று வைத்துக்கொண்டிருந்தார். அவருக்குக் கோபமெல்லாம் அன்று பிற்பகல் மணி மூன்றுக்கு ஜொகூர்—சிங்கப்பூர் பாலத்தில் "கொடுக்குப்" பிடித்து நின்ற கார்கள் மீது என்பது எனக்குப் புரிந்தது. அது ஒரு "மினிக்" கதை போங்கள்!



மாடோஸ் தோட்ட அண்ணா படிப்பக மகளிர்ப் பகுதியினர்.

ஒரு முக்கிய அலுவல் காரணமாக அன்று பகலில் ஆசிரியர் சிங்கப்பூருக்குச் சென்றார். அவருடன் நானும் சென்றிருந்தேன். திரும்பும்பொழுது மணி இரண்டாகிவிட்டது. அந்த நேரத்தில் ஜொகூரின் இந்தக் கோடியிலிருந்து சிங்கப்பூரின் நுழைவாயில் வரைக்கும் பாலத்தின் நெடுகிலும் நூற்றுக்கணக்கான கார்கள் நகராமல் அப்படியே நின்றன. எங்கள் கார் சிங்கப்பூரின் நுழைவாயிலில் நின்றுகொண்டிருந்தது. ஜொகூரில் எங்களின் கார் நுழையும்போது மணி என்ன தெரியுமா? சொன்னால் நம்பமாட்டீர்கள்? 5.38.

எங்களுக்காக நான்குமணிவரை வீட்டில் காத்திருந்துவிட்டு மனோகரன் ஜொகூர் சுங்கத்துறைக்கே வந்துவிட்டார். அங்கு வேறு அவர் காத்திருக்க நேர்ந்துவிட்டது.

அதனால்தான் உலுதிராம் தோட்டத்திற்கும், செல்லம் தோட்டத்திற்கும் மிகத் தாமதமாகச் செல்லவேண்டி வந்துவிட்டது.

இந்தக் கவலையோடு செல்லம் தோட்டத்தில் கூட்டம் ஏற்பாடு செய்திருந்த பொதுமண்டபத்தினுள் நுழைந்தோம். உள்ளே நுழைந்தபோது எங்களுக்கெல்லாம் வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்படக்கூடிய வகையில்ஒருகாட்சியைக்கண்டோம். மணி ஒன்பதாகியும் மண்டபத்தில் கூட்டம் நிறைந்து வழிந்தது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை எண்ணிப் பார்த்தால் குறைந்த பட்சம் 500க்கும் அதிகமானோர் இருப்பார்கள். இத்துணை ஆர்வமுள்ளவர்களை இரண்டு மணி நேரத்திற்குக் காத்திருக்க வைத்து விட்டோமே என்று வருந்திய அதே வேளையில் "புதிய சமுதாயம்" பத்திரிகையின் மீதும் ஆசிரியர் மீதும் அவர்கள் வைத்திருக்கும் அன்பைக் கண்டு என்மனம் நெகிழ்ந்தது.

இதுவரை நடைபெற்ற "புதிய சமுதாயம்" அறிமுகக் கூட்டங்களில் இந்த அளவுக்கு மக்கள் வந்தது செல்லம் தோட்டத்துக் கூட்டத்தில்தான். இக்கூட்டத்தை ஏற்பாடு செய்த அன்னியப்பனின் முயற்சியும், அவருக்கு மக்களிடையே உள்ள செல்வாக்கும் இப்போது நன்கு புலப்பட்டது. அருகே உள்ள கிம் லுங் தோட்டத்து மக்களும் அங்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தேசியத் தோட்டத் தொழிலாளர்சங்கம்

இக்கூட்டத்தைக் கூட்டுவதற்கு அன்னியப்பனோடு செல்லம் தோட்டத்தின் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கச் செயலாளர் திரு மணியம் பெரிதும் ஒத்துழைப்பு நல்கியிருந்தார். உலுதிராம் ம இ கா இளைஞர் பகுதியினர், திரு முனுசாமி, மகளிர் பகுதித் தலைவி குமாரி ராதா, சரோஜா கிருஷ்ணன் ஆகியோரும் ஒத்துழைத்திருந்தனர்.

ஒவ்வொரு கூட்டத்திலும் புதிய சமுதாயத்திற்கும் அந்தக் கூட்டத்தினருக்குமிடையே சம்பந்தத்தை ஏற்படுத்தி வைக்கும் "சம்பந்தி" காவேரிநாதன் இந்தக் கூட்டத்திலும் தலைமையுரை ஆற்றிச் சம்பந்தத்தை ஏற்படுத்தி வைத்தார்.

திரு சவரிமுத்து, குமாரி ராதா, திரு அன்னியப்பன் முதலியோரும் பேசினர். ஆசிரியர் பேசுகையில், இத்தோட்டம் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான தோட்டம் என்பதை அறிந்து தாம் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டுவிட்டு, புதிய சமுதாயம் இதழைப் பற்றிப் பேசினார். நண்பர் மனோகரனும் பேசினார். பிறகு "என்னடி ராக்கம்மா" என்னும் மெட்டில் "என்னடி மூக்கம்மா" என்னும் ஒரு பாட்டை நான் பாடினேன்.

கூட்டம் முடிய நள்ளிரவு 12 மணியாகிவிட்டது. எனக்கு அகோரப்பசி, நண்பர் மனோகரனுக்கும் தான். இனிமேல் ஜொகூர் பாருவுக்குச் சென்றல்லவா சாப்பிட வேண்டும் என்பதை நினைத்தபோது பசியின் வேகம் மேலும் கூடியது.

சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்று அன்னியப்பன் சொன்னதைக் கேட்டதும் எங்கள் இருவருக்கும் வயிற்றில் பால் வார்த்ததுபோல் இருந்தது. உடனே ஒரு சந்தேகம். "சாப்பாடு சில்லிட்டுக் குளிர்ந்து இருக்குமே" என்னும் சந்தேகம் தான் அது.

கரி பூசினார்கள்

சாப்பாடு வந்தபோது நான் மனோகரன் முகத்தைப் பார்த்தேன். சொல்லி வைத்தாற்போல் அவரும் அதே சமயத்தில் என் முகத்தைப் பார்த்தார். சாப்பாடு சில்லிட்டு இருக்கும் என்று எண்ணிக்கொண்டிருந்த எங்கள் முகத்தில் ஏற்பாட்டுக் குழுவினர் நன்றாகக் கரியைப் பூசினார்கள். ஆமாம் சாப்பாடு சுடச்சுட ஆவி பறக்க பரிமாறப்பட்டது. அதுமட்டுமல்ல. பதினெட்டு வகை பச்சடி என்று சொல்வார்களே, அதுபோல பலவித பிரட்டல், வறுவல், பொரியல்.

சாப்பாடு எப்படி இருந்தது என்பதை ஓட்டுநர் இராமசாமி பல தடவை சொல்லிக் கொண்டே இருந்தார். எப்படித் தெரியுமா? "அந்த நள்ளிரவிலும் இப்படிச் சூடாகவும் சுவையாகவும் அதுவும் பரக்கூறிச் சாப்பாட்டை சமைத்திருந்தார்களே. ஏ ஒன்" என்றுதான்!

நியூ ஸ்கூடாய் தோட்டம்

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலையில் நியூ ஸ்கூடாய் தோட்டத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தை ஸ்கூடாய் ம இ கவினர் ஏற்பாடு செய்திருந்தனர். காவேரிநாதன் எங்களை அத்தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார்.

ஸ்கூடாய் ம இ க தலைவர் திரு கிருஷ்ணன், செயலாளர் திரு ரமணி, துணைச் செயலாளர் திரு வேலு ஆகியோர் எங்களை வரவேற்றனர். அன்று ஞாயிற்றுக்கிழமை தொலைக்காட்சியில் "ராணி லலிதாங்கி" திரைப்படம் நடப்பதையும்பொருட்படுத்தாமல் கூட்டத்திற்கு அங்குள்ளோர் வந்திருந்தனர். கூட்டம் ஆயாக் கொட்டகையில் நடந்தது.

திரு ரமணி வரவேற்புரையாற்றினார். ஆசிரியரின் சிற்றுரைக்குப் பின்னர் கலந்துரையாடல் நடந்தது. வாசகர்களின் கேள்விகளுக்கு ஆசிரியர் பதிலளித்தார். அத்தோட்டத்தில்"புதிய சமுதாயம்" விற்பனைப் பொறுப்பை இளைஞர் வேலு மனமுவந்து ஏற்றுக்கொண்டார்.

கூட்டம் முடிந்து அங்கிருந்து புறப்பட்டோம். அன்றிரவு காவேரிநாதன் எங்களுக்குப் பிரியாவிடை விருந்து வழங்கினார். அந்த மூன்று நாட்களில் நடைபெற்ற நான்கு கூட்டங்களுக்கும். எங்களோடு தொடர்ந்து வந்து "புதிய சமுதாயம்" இதழின் வளர்ச்சிக்கு உதவி புரிந்த காவேரிநாதனுக்கு மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம். கோலாலம்பூருக்குப் புறப்பட்டபோது அங்குத் தங்கியிருந்த மூன்று நாட்களிலும் எங்களுக்குத் தங்குமிடம் உட்பட சகல வித ஏற்பாடுகளையும் செய்துதவிய திரு. மெய்யப்பன் அவர்களுக்கும் நன்றி கூறினோம். பொதுவாக ஜொகூரில் காலடி வைத்த வெள்ளிக்கிழமை முதல் அங்கிருந்து புறப்படும் வரைக்கும் எங்களுக்குப் பேருதவி புரிந்த அனைவருக்கும் எங்கள் அத்தனை பேர் மனங்களும் நன்றி கூறின.

அந்த நன்றியின் அளவு என்ன தெரியுமா? குடிக்க நீர் வழங்கும் ஜொகூருக்கு, சிங்கப்பூர் மக்கள் சொல்ல வேண்டிய நன்றியின் அளவு!

–பாதூசன்